
ISBN : 978-81-685205-0-9

செந்தமிழறிஞர்கள்:108



மு வரதராசனார்

<u>பகுப்பும் தொகுப்பும்</u>

முனைவர் சு இராமலிங்கம்



NSR 100 Educational Trust
[An ISO 9001 - 2015 Certified]
AD-13,5th Street, Anna Nagar West, Chennai - 600 040
www.nasubbureddiar100.in

https://www.annacentenarylibrary.org/pages/view/98.%20%E0%AE%AE%E0%AF%81.%E0%AE%B5%E0%AE%B0%E0%AE%A4%E0%AE%B0%E0%AE%BE%E0%AE%9A%E0%AE%A9%E0%AE%BE%E0%AE%B0%E0%AF%8D%20(1912-1974)

செந்தமிழ்சிற்பிகள்

மு.வரதராசனார் (1912-1974)

[25 August, 2024]



அறிமுகம்

மு.வ எனச் சுருக்கமாக அழைக்கப்பட்ட மு. வரதராசன் (ஏப்ரல் 25, 1912 அக்டோபர் 10,1974) 20ஆம் நூற்றாண்டின் புகழ் பெற்ற தமிழ் அறிஞர்களுள் ஒருவர். இலக்கியக் கட்டுரைகள், ஆராய்ச்சி நூல்கள் போன்றவை மட்டுமன்றிப் பல சிறுகதைகள், புதினங்கள் போன்றவற்றையும் எழுதியுள்ளார்.

இவர் சென்னை பச்சையப்பன் கல்லூரி, சென்னைப் பல்கலைக் கழகம் ஆகியவற்றில் தமிழ்த்துறைத் தலைமைப் பொறுப்பில் இருந்ததுடன்,

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகவும் பணியாற்றினார். பன்முக ஆற்றல்கள் கொண்ட இவர் நல்லாசிரியராகவும், பண்பாளராகவும் விளங்கினார்.

வாழ்க்கைச் சுருக்கம்

மு.வரதராசனார், தமிழ்நாடு, வட ஆற்காடு மாவட்டம், திருப்பத்தூரில் முனுசாமி முதலியார் - அம்மாக்கண்ணு தம்பதிக்குப் பிறந்தார். திருவேங்கடம் என்று பெயரிடப்பட்டு அழைக்கப்பட்டாலும் தாத்தாவின் பெயரான வரதராசன் என்ற பெயரே அவருக்கு நிலைத்துவிட்டது.

மு.வ. வின் கல்வி,வேலூர் மாவட்டம், வாலாஜாப்பேட்டை அருகிலுள்ள வேலம் என்னும் சிறிய கிராமத்துடன் இயைந்து வளர்ந்தது. உயர்நிலைக் கல்வியைத் திருப்பத்தூரில் கற்றுத் தேர்ந்தார். பதினாறு வயதில் பள்ளி இறுதித் தேர்வில் வெற்றி பெற்றார்.
1928ஆம் ஆண்டில் திருப்பத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் சில காலம் எழுத்தராகப் பணியாற்றினார்.

எழுத்தராகப் பணியாற்றிய போது உடல் நலம் குன்றியதால் அந்தப் பணியிலிருந்து விடுபட்டு ஓய்வுக்காகக் கிராமத்துக்குச் சென்று, அங்குத் திருப்பத்தூர் முருகைய முதலியார் என்பவரிடம் தமிழ் கற்கத் தொடங்கினார்.

1931இல் வித்வான் முதல் நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்றார். பின்னர்த் தாமே பயின்று 1935இல் வித்வான் தேர்வு எழுதி, அதில் மாநிலத்திலேயே முதல் மாணாக்கராகத் தேர்ச்சி பெற்றார்.

1935ஆம் ஆண்டு தம் மாமன் மகளான ராதா அம்மையாரை மணந்தார். இவர்களுக்குத் திருநாவுக்கரசு, நம்பி, பாரி ஆகிய ஆண் மக்கள் பிறந்தனர்1935 முதல் 1938 வரை திருப்பத்தூர் பள்ளியில் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றினார். 1939-இல் பி.ஓ.எல். தேர்ச்சி பெற்றார்.

பேராசிரியராகப் பணி

1939ஆம் ஆண்டில் பச்சையப்பன் கல்லூரி விரிவுரையாளர் பணி நிமித்தம் சென்னை சென்ற மு.வ. அக் கல்லூரியின் "கீழ்த்திசை மொழிகளில் விரிவுரையாளர்" என்ற பொறுப்பை ஏற்றார்.

1944இல் "தமிழ் வினைச் சொற்களின் தோற்றமும் வளர்ச்சியும்" என்ற தலைப்பில் ஆராய்ந்து எம்.ஓ.எல். பட்டம் பெற்றார்.

1948இல் சென்னை பல்கலைக்கழகத்தின் மூலம் "சங்க இலக்கியத்தில் இயற்கை" என்ற தலைப்பில் ஆராய்ச்சி செய்து முனைவர் பட்டம் பெற்றார். சென்னைப் பல்கலைக்கழகத்தின் மூலம் முதல் முதலாகத் தமிழில் முனைவர் பட்டம் பெற்ற பெருமைக்குரியவர் மு.வ. என்பது குறிப்பிடத்தக்கது.

1939இல் பச்சையப்பன் கல்லூரியில் சேர்ந்த மு.வ.1961 வரை அங்குப் பணியாற்றினார்.
1945இல் அக்கல்லூரியின் தமிழ்த் துறைத் தலைவர் ஆனார். இடையே 1948ஆம் ஆண்டில் மட்டும், தனது முனைவர் பட்டப் படிப்பின் ஒரு பகுதியாகச் சென்னைப் பல்கலைக்கழகத்தில் துணைப் பேராசிரியராகப் பணியாற்றினார்.
1961 முதல் 1971 வரை சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறைத் தலைவராகப் பணியாற்றினார்.

பின்னர் 1971இல் மதுரைப் பல்கலைக்கழகத் துணைவேந்தராகப் பொறுப்பேற்று 1974 வரை சிறப்புறப் பணியாற்றினார்.

மு.வ., சென்னை, திருப்பதி, அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களின் செனட் உறுப்பினர் பதவி வகித்துள்ளார். கேரள, மைசூர், உஸ்மானியா, பெங்களூர், ஆந்திர, தில்லி, மதுரை, கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகங்களின் கல்வி வாரிய உறுப்பினர் பதவிகளையும் வகித்துள்ளார்.

1972 ஆம் ஆண்டில் அமெரிக்காவின் ஊஸ்டர் கல்லூரி இவருக்கு இலக்கியப் பேரறிஞர் (டி.லிட்) என்ற சிறப்புப் பட்டத்தை நல்கிப் பெருமைப்படுத்தியது. அமெரிக்கப் பல்கலைக்கழகம் ஒன்றில் டி.லிட். என்னும் சிறப்புப் பட்டம் பெற்ற முதல் தமிழறிஞர் மு.வ. அவர்களே.

சாகித்ய அகாதெமி,பாரதிய ஞானபீடம், தேசியப் புத்தகக் குழு, இந்திய மொழிக் குழு, சென்னைப் பல்கலைக்கழகத்தின் ஆங்கிலம்-தமிழ் அகராதிக் குழு, நாட்டுப்புறப்பாடல்களும் நடனங்களும் பற்றிய குழு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக்குழு, ஆந்திரப்பிரதேச அரசுப்பணியாளர் தேர்வாணைக்குழு, மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணைக்குழு, தமிழ்நாடு புத்தக வெளியீட்டுக் கழகம், ஆட்சிமொழிக்குழு, ஆட்சி மொழி சட்டக்குழு, தமிழ் வளர்ச்சிக் கழகம், தமிழ்க்கலை மன்றம்,தமிழிசைச் சங்கம், மாநில வரலாற்றுக் கழகம்,

தமிழ் கலைக் களஞ்சியம், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவற்றில் அங்கம் வகித்ததோடு அனைத்திலும் தன்னுடைய பணி முத்திரைகளைப் பதித்த தனிச் சிறப்புகளுக்குச் சொந்தக்காரர் மு.வ. அவர்கள்.

தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி ஆகிய மொழிகளில் தேர்ச்சி பெற்றிருந்தார்.

நாவல்கள், சிறுகதைகள், சிறுவர் இலக்கியம், நாடகங்கள், இலக்கணம், கட்டுரைகள், தமிழ் இலக்கிய நூல்கள், பயணக் கட்டுரை, முன்னுரைகள், மொழிபெயர்ப்பு, மேற்கோள்கள் என 91 நூல்களை தமிழுக்குத் தந்துள்ளார்.

இவரது திருக்குறள் தெளிவுரையை சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் நூற்றுக்கும் மேற்பட்ட பதிப்புகள் வெளியிட்டுள்ளது.

மு.வ. தான் எழுதிய நூல்களுள் பெரும்பாலானவற்றை தனது சொந்த நிறுவனமான தாயக வெளியீட்டின் வழியாக வெளியிட்டார்.அவற்றின் விற்பனை உரிமையை பாரி நிலையத்திற்கு வழங்கினார்.

மு.வ.எழுதிய நூல்களில் கி.பி. 2000
(சிந்தனைக் கதை) ஒரு தனிச் சிறப்புடையது. இதில் மு.வ.வின் இன்றைய நினைவும், நாளைய கனவும் உள்ளன. சிந்தனையும் கற்பனையும் இயைந்து இந்நூலை நடத்திச் செல்வதால் இதனைச் சிந்தனைக்கதை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

திரைப்படமான மு.வரதராசனின் கதைகள்

பெற்ற மனம் 1960 அக்டோபர் 19

விருதுகள்

மு.வ.வின் அகல் விளக்கு எனும் புதினத்திற்கு **சாகித்ய அகாதெமி விருது** கிடைத்தது.

கள்ளோ காவியமோ, அரசியல் அலைகள், மொழியியல் கட்டுரைகள் ஆகிய மூன்று நூல்களுக்குத் **தமிழக அரசின் விருது** கிடைத்தது.

திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம், மொழிநூல், கள்ளோ காவியமோ. அரசியல் அலைகள், விடுதலையா, ஔவச் செய்தி ஆகிய ஆறு நூல்கள் **தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பாராட்டுப் பத்திரங்க**ளைப் பெற்றன.

(😊)(😊) ☺☺☺☺☺☺ (😊)(😊)

அகல் விளக்கு
[Agal Vilakku]

மு. வரதராசன்

https://www.goodreads.com/book/show/28256856-agal-vilakku



சந்திரனும் வேலய்யனும் இளமை நண்பர்கள். இருவரும் இளமையில் ஒரே வகுப்பில் பயின்று, ஒன்றாகவே விளையாடி, ஒன்றாகவே வளர்ந்தவர்கள். ஆனால், பத்தாவது வகுப்புக்குப் பின்னர், அவர்கள் வாழ்வில் பிரிவு ஏற்பட்டது. பிரிவு விரிந்து பரந்து ஒருவரை ஒருவர் எட்டாத அளவிற்குக் கொண்டு சேர்த்துவிட்டது. சந்திரனுடைய வாழ்வு மேடு பள்ளம் நிறைந்தது. வேலய்யனுடைய வாழ்வு சமவெளியில் அமைதியாகச் செல்லும் பெரிய ஆற்றை ஒத்தது.

சந்திரனுடைய வாழ்க்கை அரளிச் செடியைப் போல், ஒருபுறம் கண்ணைக் கவரும் அழகும் நறுமணமும் உடைய மலர்களைக் கொண்டு, மற்றொருபுறம் அவற்றிற்கு மாறான இயல்புள்ள இலைகளைக் கொண்டிருப்பது. வேலய்யனுடைய வாழ்க்கை துளசிச் செடியைப் போன்றது. துளசிச் செடியில் அழகிய மலர்கள் இல்லை, வெறுக்கத்தக்க பகுதியும் இல்லை. மலரும், இலையும், தண்டும், வேரும் எல்லாம் ஒத்த ஒரே வகையான மணம் கமழ்வது அது.

சந்திரனைப் போல் நல்ல அழகும், கூரிய அறிவும் பெற்று அதனால் செருக்கடைந்து சீரழிந்து தாமும் கெட்டுப் பிறர்க்கும் சுமையாக வாழ்வதைவிட வேலய்யனைப் போல் அறிவு குறைவாக இருந்தாலும் சிறந்த பண்புகளைப் பெற்று அடக்கமான வாழ்வு வாழ்ந்தாலே போதும் என்ற உயர்ந்த வாழ்க்கைக் குறிக்கோள் இக்கதையைப் படிக்கின்றவர்கள் உள்ளத்தில் உருவாகும். இக்கதை

இளைஞர்களுக்கு ஒரு பாடமாகவும் அமைகிறது. **அகல்விளக்கு நாவலுக்கு சாகித்ய அகாதெமி விருது கிடைத்தது.**

கரித்துண்டு

[Karitthundu]

மு. வரதராசன்

https://www.goodreads.com/book/show/43327186-karitthundu




பெரிய மேகம் ஒன்று திங்களைத் தன் அகன்ற வயிற்றுக்குள்ளே விழுங்கி இறுமாந்திருந்தது. அந்த ஏழைத் திங்கள் அந்த நிலையிலும் கவலை எள்ளளவும் இல்லாமல்... தன்னால் இயன்ற அளவு ஒளியை உலகுக்கு அளித்து வந்தது. எப்போதேனும் அந்த மேகத்தின் செல்வாக்குக்கு ஒரு முடிவு ஏற்படும்; உடனே திங்கள் தன முழு நிலவை உலகிற்கு அளிக்கும்... காலை நிலவை உள்ளபடி அளிக்கும். அதற்குக் கட்டற்ற இன்ப வாழ்க்கை என்பதே இல்லையோ?

அறமும் அரசியலும்

[Aramum Arasiyalum]

மு. வரதராசன்

https://www.goodreads.com/book/show/28175153-aramum-arasiyalum




அறமாவது, அரசியலில் அதற்கு இடமாவது என்று சிலர் தள்ளுகிறார்கள். அறம் தனிவாழ்க்கையிலேயே உதவாதபோது அரசியலுக்கு எப்படிப் பொருந்தும் என்று சிலர் மறுக்கிறார்கள். உலகம் இப்படித்தான் இருக்கும், நம்நாளைக் கழித்துவிட்டு நாம் சொல்லாமல் போகவேண்டும் என்று சிலர் அமைதி அடைகிறார்கள். தனிமனிதன் வாழ்க்கைக்கு உணவும் உறக்கமும் இருந்தால் போதும். மக்கள் பலர் கூடி வாழும் சமுதாய வாழ்க்கைக்கே அறம் கட்டாயம் வேண்டும். மக்கள் எல்லோரும் கூடி நடத்தும் அரசியலுக்கே அறம் சிறப்பாக வேண்டும். உடம்பின் நன்மைக்கு இரத்த ஓட்டம் எப்படிக் கட்டாயம் வேண்டுமோ, அதுபோல உலக நன்மைக்கு அறத்தின் அடிப்படை கட்டாயம் வேண்டும். அறம், யாரோ சில துறவிகளின் பேச்சு என்பது போய், வாழ்க்கைச் சட்டம் என்னும் தெளிவு வேண்டும். அரசியல் அல்லல் விளைப்பதற்கெல்லாம் முதல் காரணம் அறமாகிய

அடிப்படையைப் புறக்கணிப்பது தான் என்று உணர வேண்டும். காற்று ஊரெல்லாம் கெட்டிருக்கும்போது, நம் நுரையீரலில் மட்டும் தூய்மை நிலவவேண்டும் என்று எதிர்பார்க்கலாமா? பொது வாழ்க்கையாகிய அரசியலில் அறத்தைப் புறக்கணித்தபிறகு தனி வாழ்க்கையில் மட்டும் அறத்தைப் போற்ற முடியுமா? வெளிக் காற்றின் தூய்மையைக் கெடுக்காமல் காப்பது முதல் கடமை. அதை விட்டு மூச்சைப் பிடித்துத் திணறிப் பயன் என்ன? ஆகவே அரசியலில் அறம் வாழப் பாடுபடாமல் தனிவாழ்க்கையில் திணறித் திண்டாடிவிட்டு, "அறமாவது, நடப்பதாவது, எல்லாம் ஏட்டுச் சுரைக்காய்" என்று ஏங்குவதால் பயன் என்ன?

மண் குடிசை
[Mann Kudisai]

மு. வரதராசன்

https://www.goodreads.com/book/show/45074213-mann-kudisai



ஒரு நீண்ட கனவிலிருந்து முளைத்து வளர்ந்த கதை இது. ஆனால், மாறுதல் ஒன்று செய்யப்பட்டது. கனவில் நல்லது செய்து அல்லல்படும் அந்த மெய்யப்பனின் உருவம் மறைவதற்கு ஒருவரின் மந்திரம் பயன்பட்டது. கதை எழுதும்போது, அறிஞர் H. G. Wells எழுதிய 'உருத் தெரியா மனிதன்' என்னும் படைப்பில் அறிவியல் பயன்பட்டதை உணர்ந்தேன். இங்கும் அறிவியலே உதவுவது நல்லது என எண்ணி அந்த மாறுதலை செய்தேன்.

திருக்குறள் தெளிவுரை

திருக்குறள் தெளிவுரை என்பது திருவள்ளுவர் அருளிய 1330 குறட்பாக்களுக்கு, மு.வரதராசனார், திருக்குறளார் வீ. முனிசாமி, வ.சுப. மாணிக்கம் போன்ற அறிஞர்கள் எழுதிய எளிய, நேரடித் தமிழ்ப் பொருள் விளக்கமாகும். இது அறம், பொருள், இன்பம் என முப்பாலாகப் பகுக்கப்பட்டு, மனித வாழ்க்கையின் ஒழுக்கங்களையும் அறநெறிகளையும் விளக்கும் பொதுமறையாக விளங்குகிறது.

திருக்குறள் தெளிவுரை - முக்கிய அம்சங்கள்:

- **பொருள் (Meaning):** குறளின் ஒவ்வொரு அடிக்கும், வார்த்தைக்கும் மிகத் தெளிவான, எளிய தமிழில் பொருள் விளக்கப்படும்.

- **பகுப்பு (Structure):** அறத்துப்பால் (38 அதி.), பொருட்பால் (70 அதி.), காமத்துப்பால் (25 அதி.) என 133 அதிகாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.
- **சிறப்பு:**

  மு.வரதராசனார் உரை மிகவும் பிரபலமானது, இது மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு எளிதில் புரியும் வகையில் உள்ளது

- **உள்ளடக்கம்:** 1330 குறட்பாக்கள், 42,194 எழுத்துக்களைக் கொண்டு, வாழ்க்கைக்குத் தேவையான நீதிகளைக் கூறுகிறது.

சில முக்கியத் தெளிவுரைகள்:

- **கடவுள் வாழ்த்து (குறள் 1):**
  - *குறள்:* அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே யுலகு.
  - *தெளிவுரை:* எழுத்துக்கள் எல்லாம் அகரத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன; அதுபோல உலகம் ஆதிபகவனை (இறைவனை) அடிப்படையாகக் கொண்டுள்ளது.
- **இனியவை கூறல் (குறள் 93):**
  - *குறள்:* பணிவுடைய னின்சொலன் ஆதல் ஒருவற்கு அணியல்ல மற்றுப் பிற.
  - *தெளிவுரை:* பணிவும், இன்சொல்லும் பேசுதலே ஒருவனுக்கு உண்மையான அணிகலன்கள் ஆகும்; மற்றவை (தங்கம், வைரம்) அணிகலன்கள் அல்ல.
- **அறிவுடைமை (குறள் 423):**
  - *குறள்:* எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு.
  - *தெளிவுரை:* எந்தப் பொருளை யார் சொன்னாலும், அந்தப் பொருளின் உண்மையான தன்மையை ஆராய்ந்து அறிவதே அறிவாகும்.

திருக்குறள் தெளிவுரைகளை தமிழ் இணையக் கல்விக்கழகம் போன்ற இணையதளங்களில் முழுமையாகப் படிக்கலாம்.

திருக்குறள் தெளிவுரை

உரை : டாக்டர் மு.வரதராசனார்

https://www.commonfolks.in/books/d/thirukural-urai-paari-nilayam

https://archive.org/details/Kural_201704

திருக்குறள் உலக புகழ் பெற்ற பொது மறை நூல்.இந்நூலை இயற்றியவர் திருவள்ளுவர். திருவள்ளுவரை நாயனார், தேவர், தெய்வப்புலவர், பெருநாவலர், பொய்யாமொழிப் புலவர் என்றும் பல சிறப்புப் பெயர்களால் அழைப்பர்.இந்நூல் அறம், பொருள், இன்பம் (காமம்) என்னும் முப்பாலையும் அழகாக எடுத்துரைக்கிறது. வாழ்கையின் அனைத்து பகுதிகளையும் எடுத்துரைக்கும் ஒரு சிறந்த வாழ்வியல் நூலாகும்.இந்த மின்னூலில் திருக்குறள் மூலமும் அதற்கு டாக்டர் மு.வரதராசனார் எழுதிய உரையும் படிப்பதற்கு ஏற்ற எளிய அழகிய வடிமைப்பில் தரப்பட்டுள்ளது.



தம்பிக்கு

[Thambikku]

மு. வரதராசன்

https://www.goodreads.com/book/show/28272075-thambikku




தமிழர்க்கு நல்ல பண்புகள் பல உண்டு. ஆயினும் பொதுவாகத் தமிழரின் வாழ்வு நலிந்துள்ளது எனக் கூறலாம். காரணம் என்ன? தமிழரிடையே சில குறைகளும் இருத்தல் கூடும் அன்றோ? இந்த எண்ணமே இத்தகைய கடிதங்கள் எழுதத் தூண்டியது. 'தன் குற்றம் நீக்கிப் பிறர் குற்றம் காணல்' திருவள்ளுவர் நெறி. நம் குற்றங் குறைகளை நாமே உணர்தல் நலம். 'குற்றம் ஊனர்வான் குணவான்' என்பது நன்மொழி.

பாவை

[Paavai]

மு. வரதராசன்

https://www.goodreads.com/book/show/45025291-paavai



தமிழில் உள்ள அகப்பொருள் இலக்கிய இலக்கணத்தைப் பற்றி பேச்சுநிகழ்ந்தபோது நண்பர் ஒருவர், 'இதென்ன அய்யா! காலத்திற்கு உதவாத கருத்துக்கள்! களவொழுக்கம் என்றால் எனக்கு வெறுப்பாக இருக்கிறது. பகற்குறி, இரவுக்குறி, ஒருவழித்தணத்தல், ஆம்பல், அலர், இற்செறிப்பு, பசலை, தோழி, உடன் போக்கு - இந்தப் பெயர்களே பிடிக்கவில்லை' என்றார். 'காலத்திற்கு உதவாத கருத்துக்கள் அல்ல, இக்காலத்தில் விளங்காத சொற்கள் என்று வேண்டுமானால் சொல்லுங்கள். இன்னும் காதல் வாழ்க்கையின் தொடக்கம் பெரும்பாலும் அந்த நிலையில்தான் இருக்கிறது. களவொழுக்கத்தின் தினைப்புனம் முதலிய சூழல் மட்டுமே மாறியிருக்கிறது, உள்ளத்து உணர்வு நகரங்களில் மாறிவிட்டாலும் நாட்டுப்புறங்களில் பெரும்பாலும் அப்படியே இருக்கிறது' என்று கூறி ஒரு கதையை புனைந்து சொன்னேன். காலப்போக்கால் நேர்ந்துள்ள சிற்சில வேறுபாடுகளையும் சுட்டிக் காட்டினேன். அவ்வாறு அப்போது புனணிந்த கதையே, 'பாவை'யாக எழுத்துருவம் பெற்றது.

செந்தாமரை
[Senthamarai]

மு. வரதராசன்

https://www.goodreads.com/book/show/35657799-senthamarai




மு.வ. முதல் நாவலுக்கு "முருங்கை மரம்' என பெயர் வைத்திருந்தார். தனது மாணவரான ம.ரா.போ.குருசாமியின் யோசனையை ஏற்றுக் கொண்டு அந்த நாவலின் பெயரை "செந்தாமரை' என்று மாற்றியவர் மு.வ. 1944ம் ஆண்டு மு.வ. எழுதிய "செந்தாமரை" நாவலை வெளியிட யாரும் முன்வராததால், அந்நாவலை அவரே வெளியிட்டார். கதை மாந்தர் பலரும் மாறி மாறிப் பேசுவது போல் அமைந்த நாவல் செந்தாமரை.

அல்லி

[Alli]

மு. வரதராசன்

https://www.goodreads.com/book/show/45277279-alli




'உயர்ந்த குறிக்கோளுக்காக எளியவாழ்க்கை - அளவான வாழ்க்கை - நடத்த வேண்டும்' என்று நினைக்கிற இனத்தை சேர்ந்தவள் அல்லி. 'எப்படியாவது வாழவேண்டும்; ஆடம்பரமாக வாழவேண்டும்' என்ற எண்ணத்தில் ஊறிய இனத்தைச் சேர்ந்தவன் சுப்பு ரத்தினம். இருவர்க்கும் திருமணம் நடக்கிறது. இந்த கலப்புமணம்' தான் காதலின் இயல்பையெல்லாம் நாம் அறிவதற்குத் துணைபுரியும் கதையாக விரிகிறது. கதையின் ஒவ்வோர் எல்லையிலும், ஒவ்வொரு திருப்பத்திலும் எல்லாம் வல்ல அந்த மென்மையான உணர்ச்சியில் இயல்பு தெளிவாகிறது. நாகரீகம் நாகரீகம் என்று நாம் எதையோ குறிக்கிறோமே அந்நாகரீகத்தின் புகலிடமாகிய மருத்துவக் கல்லூரியில் தொடங்குகிறது கதை. அது வளர்ந்து வளர்ந்து மேற்கையும் கிழக்கையும் இணைத்து நிற்கும் உலகமாகவே காட்சியளிக்கிறது. எல்லா நிகஸ்ச்சிகளிலும் ஆண் - பெண் உறவே ஊடுருவி நிற்கிறது. பால் - இயல் கல்வி எப்படி இருக்கவேண்டும் என்பதற்கு இந்த நாவல் எடுத்துக்காட்டாக விளங்கும்.

பெற்ற மனம்

[Petra Manam]

மு. வரதராசன்

https://www.goodreads.com/book/show/49001701-petra-manam



உலகம் இடையறாமல் நடைபெறுவதற்கு அடிப்படையானது தாய்மையுணர்ச்சி. இது எல்லா உயிர்களுக்கும் இயற்கையுணர்ச்சியாக அமைந்துள்ளது; மக்களுக்கு இயற்கையுணர்ச்சியாக இருப்பதோடு, சூழ்நிலைகளால் வளர்ந்த செயற்கைப் பண்பாடாகவும் அமைந்துள்ளது. ஆகையால், இதை வெல்வது அரிது. தாய்மையுணர்ச்சியை மக்கள் வெல்லும் நாள் வருவதாயின், மக்களினத்திற்கே அழிவு நெருங்குவதாகும்.

ஆயினும், கல்விச் செருக்கும் ஆடம்பர பெருமையும் இல்லாத ஏழைத் தாய்மாரின் எளிய நெஞ்சத்திலே தாய்மையுணர்ச்சி மிகுதியாக விளங்குகிறது. எதிர்கால உலகமே மற்றவர்களைத் திருத்தக்கூடும். இயற்கையின் ஆற்றலை பொறுத்திருந்து காண்போம்.

வேலைக்காரனின் மனைவி, பைத்தியக்காரி, பிச்சைக்காரி, குழந்தைதிருடி, சமையல்காரி, கொலைக்காரி, குற்றவாளி வேலைக்காரி எனப் பல வேறு நிலைகளில் பலவாறு இகழ்ந்தும் பழித்தும் ஒதுக்கப்பட்டாள் ஒருத்தி. ஆயினும் அவளுடைய தூய நெஞ்சத்தின் தாய்மையுணர்ச்சி ஒதுங்கவில்லை; ஒடுங்கவில்லை; நிறைந்து நின்று அவளுடைய வாழ்வை இயக்கியது.

மணல் வீடு

[Manal Veedu]

மு. வரதராசன்

https://www.goodreads.com/book/show/49002062-manal-veedu




சங்க இலக்கியங்களிலிருந்து காதல் சம்பந்தமான சில படைப்புகளை எடுத்து அதை எளிய முறையில் கதையாக விளக்கியிருக்கும் தொகுப்பு.

விடுதலையா?

[Viduthalaiya?]

மு. வரதராசன்

https://www.goodreads.com/book/show/42978454-viduthalaiya




There is two use of art. One, to spend our small breaks happily. The other is to revitalize the life of one without even knowing it. The speciality of short stories is that these two can be brought together. That is why this literature form is still surviving in the world. This book is collection of short stories where some of it has been published in magazines.

கி. பி. 2000

மு. வரதராசன்

https://www.goodreads.com/book/show/44767340-2000



ஒரே கதையை பதினொன்று அத்தியாயங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. இந்த நூலில் நனவும் உள்ளது, கனவும் உள்ளது. நனவு நிகழ்காலம். கனவு எதிர்காலம் (futuristic). நனவு கனவு என்பவற்றை மறந்து நோயும் மருந்துமாகக் காணலாம். இந்த கனவில் காண்பது ஒருவகை அரசியல் பொருளியல் சமூக அமைப்பின் உருவெளியே. சட்ட விளக்கங்களும் அல்ல, புள்ளிவிவரங்களும் அல்ல. எதிர்காலத்தைப் பற்றி நம்பிக்கை கொண்டு உணர்வதற்கும், தெளிவு கொண்டு எண்ணுவதற்கும் ஒரு இந்த கனவின் பயன்.

மு. வரதராசன்

https://www.goodreads.com/author/show/18645174._

Born
in Vellore, India
April 25, 1912

Died
October 10, 1974

Genre
Nonfiction, Philosophy, Classics

Influences
காந்தியடிகள், திரு.வி.க., தாயுமானவர், இராம தீர்த்தர், இராமலிங்க சுவாமிகள், இராமகிருஷ்ணர், விவேகானந்தர், திருநாவுக்கரசர், மாணிக்கவாசகர், நம்மாழ்வார், கவிஞர் தாகூர், வி. ச. காண்டேகர், பெர்னாட்ஷா, சாமர்செட் மாம்.



Mu. Varadarasan (மு. வரதராசன்), also known as Mu. Va. and Varatharasanar, was a Tamil scholar, author and academic from Tamil Nadu, India. He was a prolific writer whose published works include 13 novels, 6 plays, 2 short story collections, 11 essay anthologies, a book on the history of Tamil literature, books on Tamil linguistics and children's books. During 1961–71, he was the head of the Tamil department at the University of Madras. In 1961, he was awarded the Sahitya Academy Award for Tamil for his novel Agalvilaku. During 1971–74, he was the vice-chancellor of the University of Madurai.

மு.வ எனச் சுருக்கமாக அழைக்கப்பட்ட மு. வரதராசன் 20ஆம் நூற்றாண்டின் புகழ் பெற்ற தமிழ் அறிஞர்களுள் ஒருவர். இலக்கியக் கட்டுரைகள், ஆராய்ச்சி நூல்கள் போன்றவை மட்டுமன்றிப் பல சிறுகதைகள், புதினங்கள் போன்றவற்றையும் எழுதியுள்ளார். இவர் சென்னை பச்சையப்பன் கல்லூரி, சென்னை பல்கலைக் கழகம் ஆகியவற்றில் தமிழ்த்துறைத் தலைமைப் பொறுப்பில் இருந்ததுடன், மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகவும் பணியாற்றினார். பன்முக ஆற்றல்கள் கொண்ட இவர் நல்லாசிரியராகவும், பண்பாளராகவும் விளங்கினார்

மு.வரதராசனார், தமிழ்நாடு, வட ஆற்காடு மாவட்டம், திருப்பத்தூரில்

முனுசாமி முதலியார் – அம்மாக்கண்ணு தம்பதிக்கு பிறந்தார். திருவேங்கடம் என்று பெயரிடப்பட்டு அழைக்கப்பட்டாலும் தாத்தாவின் பெயரான வரதராசன் என்ற பெயரே அவருக்கு நிலைத்துவிட்டது. மு.வ. வின் கல்வி, வேலூர் மாவட்டம், வாலாஜாப்பேட்டை அருகிலுள்ள வேலம் என்னும் சிறிய கிராமத்துடன் இயைந்து வளர்ந்தது. உயர்நிலைக் கல்வியைத் திருப்பத்தூரில் கற்றுத் தேர்ந்தார். பதினாறு வயதில் பள்ளி இறுதித் தேர்வில் வெற்றி பெற்றார். 1928ம் ஆண்டில் திருப்பத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் சில காலம் எழுத்தராகப் பணியாற்றினார்.

எழுத்தராகப் பணியாற்றிய போது உடல் நலம் குன்றியதால் அந்தப் பணியிலிருந்து விடுபட்டு ஓய்வுக்காக கிராமத்துக்குச் சென்று, அங்கு திருப்பத்தூர் முருகைய முதலியார் என்பவரிடம் தமிழ் கற்கத் தொடங்கினார். 1931 இல் வித்வான் முதல் நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்றார். பின்னர் தாமே பயின்று 1935 இல் வித்வான் தேர்வு எழுதி, அதில் மாநிலத்திலேயே முதல் மாணாக்கராகத் தேர்ச்சி பெற்றார். 1935 ஆம் ஆண்டு தம் மாமன் மகளான ராதா அம்மையாரை மணந்தார். இவர்களுக்கு திருநாவுக்கரசு, நம்பி, பாரி ஆகிய ஆண் மக்கள் பிறந்தனர். 1935 முதல் 1938 வரை திருப்பத்தூர் பள்ளியில் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றினார். 1939ல் பி.ஓ.எல். தேர்ச்சி பெற்றார்.

திரைப்படமான மு.வரதராசரின் கதை – பெற்ற மனம் (1960)

விருதுகள்:

மு.வ.வின் அகல்விளக்கு எனும் நாவலுக்கு சாகித்ய அகாதெமி விருது கிடைத்தது. கள்ளோ காவியமோ, அரசியல் அலைகள், மொழியியல் கட்டுரைகள் ஆகிய மூன்று நூல்களுக்குத் தமிழக அரசின் விருது கிடைத்தது. திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம், மொழிநூல், கள்ளோ காவியமோ. அரசியல் அலைகள், விடுதலையா, ஓவச் செய்தி ஆகிய ஆறு நூல்கள் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பாராட்டுப் பத்திரங்களைப் பெற்றன. பல நூல்கள், ஆங்கிலம், இந்தி, மராத்தி, ரஷ்ய மொழி, சிங்கள மொழி, தெலுங்கு மலையாளம், கன்னடம் போன்ற பிற மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

Books by மு. வரதராசன்



https://www.goodreads.com/author/list/18645174

Tamilnation.org

https://tamilnation.org/books/literature/varadarajan

A History of Tamil Literature

Mu Varadarajan, translated from Tamil by E.Sa Visswanathan
Sahitiya Akademi, Madras 1988

(😊) [illegible] (😊)

Preface by Professor T.P. Meenakshisundaran, Madurai 1 October 1970

"With the exception of Sanskrit, Tamil is the only language in India, with a hoary past and a rich tradition of literary history. It reveals the commingling of cultures comparable to that of a garland of flowers of many hues. In spite of the fusion of cultures everyone could perceive the distinctive features of the Tamil language and literature and enjoy their beauty, which form the basis of the Dravidian culture.

The literary world knows the uniqueness of the Cankam classics. One of the twin epics, the Cilappatikaram, bewitched the minds of many scholars. The Tirukkural, an ethical work, and the Tiruvacakam, a collection of devotional songs, won the hearts of many literary critics even in their translations both in oriental and Occidental languages.

One could comprehend the quintessence of Saiva Siddhanta philosophy and the philosophy of Vaisnavism only through the media of Tamil literature and culture.

It is, therefore, imperative that one should be familiar with the history of Tamil literature.

The Sahitya Akademi invited the eminent scholar and professor of Tamil, Mu. Varadarajan, to write the history of Tamil literature. He is an erudite scholar in Tamil language and literature. He distinguished himself as a professor, who could convey lucidly the essential features of Tamil literature to students as well as to common people. Himself a creative writer of repute, he received the Sahitya Akademi Award for his novel in Tamil. He is one among those few scholars, who could enjoy reading the entire gamut of Tamil literature: the ancient, the mediaeval and the modern periods. Such a scholar has written A History of Tamil Literature (Tamil Ilakkiya Varalaru) in his own inimitable style. This work will remain as a priceless offering not merely to the intellectual world but to the people of India."

(😊)(😊) @@@@@@@@@(😊)(😊)

தமிழ் இணையக் கல்விக்கழகம்
TAMIL VIRTUAL ACADEMY

https://www.tamilvu.org/ta/courses-degree-p102-p1022-html-p10224l2-24915

படைப்புகளும் பரிசுகளும்

மு.வ.வின் ஆசிரியப்பணி உயர்நிலைப் பள்ளி ஆசிரியராகத் தொடங்கியது. அப்பணி கல்லூரிப் பேராசிரியர் என்னும் உயர்வினை அடைந்தது. அது மேலும் சிறந்து பல்கலைக்கழகப் பேராசிரியர் என்ற நிலையை எட்டியது. நிறைவாகப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் என்னும் உச்ச நிலையை அடைந்தது. வளர்பிறை போல் வளர்ந்து வந்த அவரது பதவிகள், அவரது படைப்புகள் பல்கிப் பெருகித் தோன்றுவதற்கு வாய்ப்பாக அமைந்தன.

மு.வ.வின் படைப்புகள்

மு.வ. 1940 ஆம் ஆண்டு முதல் நூல்களை எழுதத் தொடங்கினார். 1940 முதல் 1970 ஆம் ஆண்டு வரை ஏறக்குறைய முப்பதாண்டுகள் அவரது எழுத்துப்பணி அமைந்தது. மு.வ 62 ஆண்டுகள் மட்டுமே

(1912-1974) உயிர் வாழ்ந்தவர், ஏறக்குறைய முப்பதாண்டுகளாக நூல்களைப் படைத்தவர். அவர் படைத்த நூல்கள் 85 ஆகும். என்ன! மாணவர்களே, மு.வ.வின் நூல்களின் எண்ணிக்கையை நினைத்துப் பார்க்கும் போது வியப்பு எழுகின்றதல்லவா?.

மு.வ.வின் படைப்புகளில் பலவகை உண்டு. சில படைப்புகளைத் தமிழுக்குப் புதியதாக அறிமுகப்படுத்தியும் உள்ளார். மு.வ.வின் 85 நூல்களையும் இங்குப் பட்டியலிடுதல் வேண்டியதன்று. அப்படைப்புகள் எந்தெந்த வகைகளில் அடங்குவன என்று காண்பது மட்டும் இங்குப் பொருத்தமாகும்.

மு.வ.வின் 85 நூல்களையும்
15 தலைப்புகளில் வகைப்படுத்திக் காட்டலாம்.

வ.எண்
படைப்பு
எண்ணிக்கை

(1) புதினம் (நாவல்)13

(2) நாடகம் 6

(3) சிறுகதை 2 (தொகுதிகள்)

(4) சிந்தனைக் கதை 2

(5) கட்டுரைத் தொகுதிகள்11

(6) இலக்கிய ஆய்வுகள் 24

(7) சிறுவர் இலக்கியம் 4

(8) கடித இலக்கியம்4

(9) பயண இலக்கியம் 1

(10) இலக்கிய வரலாறு 1

(11) மொழியியல் நூல் 6

(12) வாழ்க்கை வரலாறு 4

(13) ஆங்கில நூல் 2

(1. The Treatment of Nature in Sangam Literature) (2. Ilango Adigal)

(14) சிறுவர் இலக்கணம் 3

(15) மொழிபெயர்ப்பு நூல்கள் 2

மொத்த நூல்கள் 85

4.2.2 பரிசுகள்

மு.வ. எழுதிய 85 நூல்களில் அவரது உரைநடையின் சிறப்பு வெளிப்படுகின்றது. இந்தச் சிறப்பிற்காக மு.வ.விற்குப் பல பரிசுகள் கிடைத்தன.

மு.வ.வின் அகல்விளக்கு என்னும் நாவலுக்கு இந்திய அரசின் சாகித்திய அக்காதமியின் விருது கிடைத்தது. கள்ளோ காவியமோ என்னும் நாவலுக்கும், அரசியல் அலைகள் என்னும் அரசியல் சிந்தனை நூலுக்கும், மொழியியற் கட்டுரைகள் என்னும் நூலுக்கும் தமிழக அரசின் பரிசுகள் கிட்டின. தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பரிசினை மு.வ.வின் ஆறு நூல்கள் பெற்றுள்ளன. மு.வ.வின் பல நூல்கள் தமிழகம் முழுவதும் அனைத்துப் பல்கலைக் கழகங்களிலும் பயிலும் பட்டப் படிப்பு மாணவர்களுக்கும், தமிழ் இலக்கிய மாணவர்களுக்கும் பாடங்களாக வைக்கப்பட்டன. இன்றும் வைக்கப்படுகின்றன. தமிழகத்தில் தோன்றிய வேறு எந்தத் தமிழ் அறிஞர் படைப்புகளையும் விட மு.வ.வின் படைப்புகளே அதிக அளவில் பாடநூல்களாகப் பரிந்துரைக்கப்பட்டு வருகின்றன. இது மிகப்பெரும் சிறப்பு என்பதில் ஐயமில்லை.

அமெரிக்கப் பல்கலைக் கழகம் (ஊஸ்டர்) ஒன்றில் 'டி.லிட்' என்னும் சிறப்புப் பட்டம் பெற்ற முதல் தமிழறிஞர் மு.வ. என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இனி, இத்தகைய பரிசுகளுக்கும் பாராட்டுகளுக்கும் உரியதாக அமையும் மு.வ.வின் உரைநடையின் சிறப்புக் கூறுகளைக் காண்போம்.

கீழ்க்கண்ட இணைய தளத்தினை அணுகவும்

https://www.tamilvu.org/ta/courses-degree-p102-p1022-html-p10224l0-24913

(😊)(😊) @@@@@ (😊)(😊)

"தமிழ் இலக்கிய வரலாறு"

டாக்டர் மு. வரதராசன் (1912-1974) எழுதிய 'தமிழ் இலக்கிய வரலாறு' சாகித்திய அகாதமியால் வெளியிடப்பட்ட ஒரு மிகச்சிறந்த ஆய்வு நூல். இந்நூல், சங்க காலம் முதல் இருபதாம் நூற்றாண்டு வரை உள்ள தமிழின் பல்வேறு இலக்கிய வகைப்பாடுகளை, எளிய மற்றும் செறிவான தமிழில், காலவரிசைப்படி மற்றும் இலக்கிய வளர்ச்சிப் போக்கின் அடிப்படையில் விவரிக்கும் ஒரு சிறந்த கையேடு.

மு.வ-வின் தமிழ் இலக்கிய வரலாறு பற்றிய முக்கிய அம்சங்கள்:

- **படைப்பாளி:** மு. வரதராசனார் (மு.வ), 20-ஆம் நூற்றாண்டின் புகழ்பெற்ற தமிழ் அறிஞர், நாவலாசிரியர் மற்றும் கல்வியாளர்.
- **நூல் சிறப்பு:** சாகித்ய அகாதமிக்காக எழுதப்பட்ட இந்நூல், தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சியை கால அடிப்படையில், சங்க இலக்கியம், பக்தி இலக்கியம், காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள், மற்றும் தற்கால இலக்கியங்கள் எனப் பிரித்து, அவற்றின் சிறப்புகளை விளக்குகிறது
- **பண்புகள்:** மிக எளிமையான, அனைவரும் புரிந்துகொள்ளக்கூடிய நடை, சுருக்கமான செய்திகள், மற்றும் இலக்கிய ரசனைக்குறிப்புகள் இந்நூலின் சிறப்பம்சங்களாகும்.
- **பயன்பாடு:** பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கும், தமிழ் இலக்கிய வரலாற்றை அறிய விரும்பும் பொது வாசகர்களுக்கும் இது ஒரு சிறந்த வழிகாட்டி நூலாகத் திகழ்கிறது.
- **விருது:** மு.**வ.வின் 'அகல் விளக்கு' நாவலுக்காக 1961-இல் தமிழுக்கான சாகித்ய அகாடமி விருது வழங்கப்பட்டது.**

தமிழ் இலக்கியத்தின் நீண்ட வரலாற்றை மிகச் சரியான வரலாற்றுப் பின்னணியுடன், பண்டிதருக்கும் பாமரருக்கும் புரியும் வகையில் தொகுத்து வழங்கியதில் மு.வ.வின் பங்கு போற்றத்தக்கது.

தமிழ் இலக்கிய வரலாறு

https://ta.wikipedia.org/wiki/%E0%AE%A4%E0%AE%AE%E0%AE%BF%E0%AE%B4%E0%AF%8D_%E0%AE%87%E0%AE%B2%E0%AE%95%E0%AF%8D%E0%AE%95%E0%AE%BF%E0%AE%AF_%E0%AE%B5%E0%AE%B0%E0%AE%B2%E0%AE%BE%E0%AE%B1%E0%AF%81_(%E0%AE%AE%E0%AF%81.%E0%AE%B5_%E0%AE%A8%E0%AF%82%E0%AE%B2%E0%AF%8D)



தமிழ் இலக்கிய வரலாறு என்பது தமிழ்ப் பேராசிரியர் மு. வரதராசன் எழுதிய தமிழ் ஆய்வுநூல் ஆகும்.

இந்திய மொழிகள் பலவற்றின் வரலாறுகளை எழுதி நூலாக்கம் செய்துள்ள 22 மொழிகளில் நூல்கள் வெளியிடும் சாகித்திய அக்காதெமியின் வேண்டுகோளின் பேரிலேயே மு. வரதராசன் இந்நூலை எழுதியிருக்கிறார் என்பதைதெ. பொ. மீனாட்சிசுந்தரனாரின் முன்னுரையிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

இவரின் நூல் 18 தலைப்புக்களில் விரிந்து செல்கிறது. இந்நூலில் சிறப்புப் பெயர் அகராதியும் சேர்க்கப்பட்டுள்ளது.

https://archive.org/details/dli.jZY9lup2kZl6TuXGlZQdjZQ1luIy.TVA_BOK_0002815

எழுத்துப் பணி

நாவல்கள், சிறுகதைகள், சிறுவர் இலக்கியம், நாடகங்கள், இலக்கணம், கட்டுரைகள், தமிழ் இலக்கிய நூல்கள், பயணக் கட்டுரை, முன்னுரைகள், மொழிபெயர்ப்பு, மேற்கோள்கள் என 91 நூல்களைத் தமிழுக்குத் தந்துள்ளார்.

கால அடிப்படையில்

1939
1 குழந்தைப் பாடல்கள்
2 இளைஞருக்கான இரு சிறுகதைகள்
3 சிறுவர்க்கான சேக்சுபியர் கதைகள் – 1
4 கழகத் தமிழ் இலக்கணம் 1
5 கழகத் தமிழ் இலக்கணம் 2

1940
6 படியாதவர் படும்பாடு
7 சிறுவர்க்கான சேக்சுபியர் கதைகள்-2
8 கழகச் சிறுகதைகள் 1
9 கழகச் சிறுகதைகள் 2
10 கழகச் சிறுகதைகள் 3

1941
11 கழகத் தமிழ் இலக்கணம் 3

1945
12 கண்ணுடைய வாழ்வு

1946
13 செந்தாமரை
14 ஔவச் செய்தி

1947
15 கள்ளோ? காவியமோ?
16 கி.பி. 2000
17 தமிழ் நெஞ்சம்
18 மொழி நூல்

1948
19 பாவை
20 அந்த நாள்
21 விடுதலையா?
22 அன்னைக்கு
23 அறிஞர் பெர்னாட்ஷா
24 காந்தியண்ணல்
25 மணல் வீடு
26 திருக்குறள் அல்லது வாழ்க்கை விளக்கம்
27 அறமும் அரசியலும்
28 அரசியல் அலைகள்

1949
29 கவிஞர் தாகூர்
30 திருக்குறள் தெளிவுரை
1950
31 மலர்விழி
32 கண்ணகி
33 மாதவி

பொருள் அடிப்படையில்

சிறுவர்க்கான இலக்கியங்கள்
1 குழந்தைப் பாடல்கள்
2 இளைஞருக்கான இரு சிறுகதைகள்
3 படியாதவர் படும்பாடு
4 கண்ணுடைய வாழ்வு

தழுவல் மொழிபெயர்ப்புகள்
5 கழகச் சிறுகதைகள் 1
6 கழகச் சிறுகதைகள் 2
7 கழகச் சிறுகதைகள் 3

மொழிபெயர்ப்புகள்
8 சிறுவர்க்கான சேக்சுபியர் கதைகள் – 1
9 சிறுவர்க்கான சேக்சுபியர் கதைகள் – 2

இலக்கணம்
10 கழகத் தமிழ் இலக்கணம் 1
11 கழகத் தமிழ் இலக்கணம் 2
12 கழகத் தமிழ் இலக்கணம் 3

நெடுங்கதை
13 செந்தாமரை
14 கள்ளோ? காவியமோ?
15 கி.பி. 2000
16 பாவை
17 அந்த நாள்
18 மலர்விழி
19 பெற்ற மனம்
20 அல்லி
21 கரித்துண்டு
22 கயமை
23 நெஞ்சில் ஒரு முள்
24 அகல்விளக்கு
25 மண்குடிசை
26 வாடா மலர்

சிறுகதை
27 விடுதலையா?
28 குறட்டை ஒலி
29 பழியும் பாவமும்

நாடகம்
30 பச்சையப்பர்
31 மூன்று நாடகங்கள்
32 காதல் எங்கே?
33 மனச்சான்று

கடித இலக்கியம்
34 அன்னைக்கு
35 தம்பிக்கு

1951
34 பெற்ற மனம்
35 பச்சையப்பர்

1952
36 அல்லி
37 குறட்டை ஒலி
38 மனச்சான்று
39 முல்லைத் திணை
40 மொழியின் கதை
41 எழுத்தின் கதை
42 சொல்லின் கதை

1953
43 கரித்துண்டு
44 தம்பிக்கு
45 தங்கைக்கு
46 இலக்கிய ஆராய்ச்சி
47 நற்றிணை விருந்து

1954
48 ஔவச் செய்தி
49 காதல் எங்கே?
50 நண்பர்க்கு
51 யான் கண்ட இலங்கை
52 நெடுந்தொகை விருந்து
53 நெடுந்தொகைச் செல்வம்
54 குழந்தை
55 மொழி வரலாறு
56 மொழியியற் கட்டுரைகள்

1955
57 பழியும் பாவமும்
58 குறுந்தொகைச் செல்வம்

1956
59 கயமை
60 நெஞ்சில் ஒரு முள்
61 குறுந்தொகை விருந்து
62 நடைவண்டி
63 கொங்குதேர் வாழ்க்கை
64 கல்வி
65 நாட்டுப் பற்று

1957
66 The Treatment of Nature in Sangam Literature

1958
67 அகல்விளக்கு
68 நற்றிணைச் செல்வம்
69 குருவிப்போர்

36 தங்கைக்கு
37 நண்பர்க்கு
38 டாக்டர் மு.வ.வின் கடிதங்கள்

பயண இலக்கியம்
39 யான் கண்ட இலங்கை

வாழ்க்கை வரலாறு
40 அறிஞர் பெர்னாட்ஷா
41 காந்தியண்ணல்
42 கவிஞர் தாகூர்
43 திரு.வி.க

திறனாய்வு
44 இலக்கிய ஆராய்ச்சி
45 இலக்கியத் திறன்
46 இலக்கிய மரபு
47 இலக்கியக் காட்சிகள்

இலக்கிய ஆய்வு
48 ஔவச் செய்தி
49 தமிழ் நெஞ்சம்
50 மணல்வீடு
51 திருக்குறள் அல்லது வாழ்க்கை விளக்கம்
52 கண்ணகி
53 மாதவி
54 முல்லைத்திணை
55 நற்றிணைவிருந்து
56 நற்றிணைச் செல்வம்
57 குறுந்தொகை விருந்து
58 குறுந்தொகைச் செல்வம்
59 நெடுந்தொகை விருந்து
60 நெடுந்தொகைச் செல்வம்
61 நடைவண்டி
62 கொங்குதேர் வாழ்க்கை
63 புலவர் கண்ணீர்
64 இளங்கோ அடிகள்
65 குறள் காட்டும் காதலர்
66 தாயுமானவர்
67 மு.வ.வின் கட்டுரைகள் பகுதி1
68 மு.வ.வின் கட்டுரைகள் பகுதி2

உரை
69 திருக்குறள் தெளிவுரை

இலக்கிய வரலாறு
70 தமிழ் இலக்கிய வரலாறு

சிந்தனைக் கட்டுரைகள்
71 அறமும் அரசியலும்
72 அரசியல் அலைகள்
73 குழந்தை
74 கல்வி

1959 70 மூன்று நாடகங்கள் 71 இலக்கியத் திறன் 72 மொழிப்பற்று 73 பெண்மை வாழ்க 74 உலகப் பேரேடு **1960** 75 வாடாமலர் 76 இலக்கிய மரபு 77 இளங்கோ அடிகள் **1961** 78 மண்குடிசை 79 மண்ணின் மதிப்பு **1962** 80 திரு.வி.க. 81 இலக்கியக் காட்சிகள் **1967** 82 Ilango Adigal 1968 83 குறள் காட்டும் காதலர் **1972** 84 தமிழ் இலக்கிய வரலாறு **1973** 85 நல்வாழ்வு **1975** 86 டாக்டர் மு.வ.வின் மணிமொழிகள் **1977** 87 டாக்டர் மு.வ.வின் கடிதங்கள் **1983** 88 தாயுமானவர் **2012** 89 மு.வ.வின் முன்னுரைகள் 90 மு.வ.வின் கட்டுரைகள் 1 91 மு.வ.வின்கட்டுரைகள் 2	75 மொழிப்பற்று 76 நாட்டுப்பற்று 77குருவிப்போர் 78 பெண்மை வாழ்க 79 உலகப்பேரேடு 80 மண்ணின் மதிப்பு 81 நல்வாழ்வு **மொழியியல்** 82 மொழிநூல் 83 மொழியின் கதை 84 எழுத்தின் கதை 85 சொல்லின் கதை 86 மொழி வரலாறு 87 மொழியியற் கட்டுரைகள் **முன்னுரைகள்** 88 மு.வ.வின் முன்னுரைகள் **மேற்கோள்கள்** 89 டாக்டர் மு.வ.வின் மணிமொழிகள் **ஆங்கில நூல்கள்** 90 The Treatment of Nature in Sangam Literature 91 Ilango Adigal

மு.வ.வைப் பற்றிய நூல்கள்

1. மு.வ.வின் நாவல்கள், முனைவர் இரா.மோகன்
2. மு.வ. களஞ்சியம், முனைவர் இரா. மோகன்

3. மு.வ. நினைவுமலர், மதுரை பல்கலைக் கழகம், மதுரை.
4. மு.வ. ஆய்வடங்கல், மதுரை பல்கலைக் கழகம், மதுரை.
5. மு.வ.வின் கடிதங்கள், சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை.
6. மு.வ. கருந்தரங்கக் கட்டுரைகள், மதுரை பல்கலைக் கழகம், மதுரை.
7. பேராசிரியர் மு.வ. பேராசிரியர் அ.மு.ப. கருத்தரங்கக் கட்டுரைகள்
8. மு.வ. முப்பால், ம. ரா. போ. குருசாமி
9. பெருந்தகை மு.வ., முனைவர் சி. பாலசுப்பிரமணியன்
10. வணக்கத்திற்குரிய வரதராசனார், கவிஞர் முனைவர் ஆலந்தூர் கோ. மோகனரங்கன்
11. பேராசான் மு.வ., முனைவர் மறைமலை இலக்குவனார்
12. மூவா நினைவுகள், ம. ரா. போ. குருசாமி

(😊)(😊) @@@@@@@@@@ (😊)(😊)

மூவா நினைவுகள்

https://ta.wikipedia.org/wiki/%E0%AE%AE%E0%AF%82%E0%AE%B5%E0%AE%BE_%E0%AE%A8%E0%AE%BF%E0%AE%A9%E0%AF%88%E0%AE%B5%E0%AF%81%E0%AE%95%E0%AE%B3%E0%AF%8D

மூவா நினைவுகள் என்பது தமிழறிஞர் மு. வரதராசன் அவர்களின் நினைவுப் பதிவு நூல் ஆகும். இதனை முனைவர் ம. ரா. போ. குருசாமி எழுதியிருக்கிறார். மூவா என்னும் சொல்லுக்கு அழியாத என்பது பொருள். மாணவர் ஒருவர் தன் பேராசிரியர் ஒருவரைப் பற்றி தன்னுள் அழியாது இருக்கும் நினைவுகளை பற்றிக் கூறுவதால் இந்நூலிற்கு மூவா நினைவுகள் எனப் பெயரிட்டப்பட்டு உள்ளது.

மு.வ.வும் ம.ரா.போ.கு.வும்

மு.வ. சென்னை பச்சையப்பன் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராக இருந்த பொழுது 1940-41ஆம் கல்வியாண்டில் அங்கு இடைநிலை (Intermediate) வகுப்பிற் சேர்ந்தவர் ம.ரா.போ.கு. அங்கேயே தொடர்ந்து படித்து 1944-45ஆம் கல்வியாண்டில் BOL (Hons) பட்டம்

பெற்றவர். அப்பொழுது மு.வ. அவருக்கு ஆசிரியராக, நண்பராக, வழிகாட்டிய இருந்திருக்கிறார். அந்த உறவு மு.வ. மறைந்த 1974ஆம் ஆண்டு வரை தொடர்ந்திருக்கிறது. அந்த 35 ஆண்டு காலத்தில் தமக்கும் தம் ஆசிரியருக்கும் இடையே நிலவிய உறவைப் பற்றிய நினைவலைகளை 19 கட்டுரைகளாக, மு.வ.வின் நூற்றாண்டை ஒட்டி இதழொன்றில், குருசாமி எழுதி இருக்கிறார். அந்தக் கட்டுரைகளின் தொகுப்பே இந்த நூல்.

பொருளடக்கம்

நூலில் இருந்து சில துளிகள்

- எங்கள் ஆசிரியர் மு.வ. அவர்கள் நன்னூல்வழி அறிமுகப்படுத்தப்படும் அத்தனை இலக்கணங்களுக்கும் முற்றிலும் பொருத்தமான ஒரு பெருந்தகை. இந்த வகையில் அவர் இன்னொரு தெ.பொ.மீ.

- பாடப் புத்தகத்தை ஒழுங்காகக் கற்பிப்பவன் வாங்கும் சம்பளத்துக்கு மட்டுமே உண்மை பேணுபவன்; சமுதாய

உணர்வு முதலான உணர்வுகளையும் சேர்த்து — இளைஞனை சமுதாய உணர்வுடையவனாக ஆக்குவோனே நல்லாசிரியன்.

- பாடத்திற்கு அப்பாலும் ஆசிரியர் மு.வ. ஒரு புரவலராய் — உற்றுழி உதவும் நண்பராய் — வழிவகுத்து நடத்தும் தந்தையாய், தாயாய் விளங்கியவர் எங்கள் மு.வ.

- சிறப்புத் தமிழ் பயில்கின்ற மாணவனை மதிப்பிடுவது வேறு; பொதுத்தமிழ் மாணவனை மதிப்பிடுவது வேறு. முன்னவனின் பிழைகள் எல்லாவற்றையும் புலப்படுத்த வேண்டும். பொதுத்தமிழ் படிக்கின்ற மாணவனின் பிழைகள் எல்லாவற்றையும் சுட்டி, அவனை அச்சுறுத்தக் கூடாது. மு.வ.வின் திருத்தமான திருத்த முறை இது.

- பிச்சைப் பாத்திரத்துக்குச் சாதி இல்லை. அங்கும் சாதி பார்ப்பவன் கொடிய அரக்கன். இரக்கம் சாதி பாராது.

- பக்தியும் ஒருவகைப் பற்றுத்தான். பக்தியும் பாசமும் இருக்கும் இடத்திலே பகுத்தறிவு செயலற்றுப் போகும்.

- எளிய வாழ்க்கை; எது மிஞ்சினாலும் ஏழைக்கு. வலது கை கொடுப்பது இடது கைக்குத் தெரியக் கூடாது — இது கிராமிய மு.வ.

(😊)(😊) (😊)(😊)

கள்ளோ காவியமோ

https://ta.wikipedia.org/wiki/%E0%AE%95%E0%AE%B3%E0%AF%8D%E0%AE%B3%E0%AF%8B_%E0%AE%95%E0%AE%BE%E0%AE%B5%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%AE%E0%AF%8B_(%E0%AE%A8%E0%AF%82%E0%AE%B2%E0%AF%8D)



கள்ளோ காவியமோ என்பது மு. வரதராசன் எழுதிய ஒரு தமிழ்ப் புதினம். ஒரு பெண் பிறந்தது முதல் இறுதி வரையிலும் படும் துன்பத்தையும் ஒரு பெண்ணுக்கு வாழ்வில் இறுதிக் காலம் வரை நிழல் போலத் தொடர்ந்து வரும் உறவைப் பற்றியும் இந்நாவலில் காட்டியுள்ளார் நாவலாசிரியர்.

கதைச்சுருக்கம்

தாயை இழந்து, குடிகாரத் தந்தையினால் பயனின்றி அத்தையின் முரட்டுக் கெடுபிடிக்குள் வாழ்க்கை நடத்தும் சிறுமியாக மங்கை. தற்செயலாகத் தொடர்வண்டி நிலையத்தில் எதிர்கொள்ளும் குடும்பத்தோடு வெளியூர் சென்று அக்குடும்பத்தினரின் வீட்டு வேலைக்காரியாகிறாள். அவ்வீட்டுப் பெரியவரின் தூண்டுதலின் பேரில் எழுதவும் படிக்கவும் கற்றுக்கொள்கிறாள். செய்தித்தாள்களையும் வார, மாத இதழ்களையும் படித்து உலக ஞானம் பெறுகிறாள். பெரியவரின் மகனான அருளப்பனும் மங்கையும் தத்தமக்குள் மௌனமாகக் காதல் வளர்க்கின்றனர் சொல்லிக்கொள்ளாமலேயே. திடீரென்று அருளப்பனின் சகோதரிக்கு வீட்டு வேலைக்காக மங்கை இடம்பெயர்க்கப்படுகிறாள். மனப்போராட்டத்துடன் மங்கை பெங்களூர் அடைகிறாள். வேலைக்காரியாகத் தன் பணியைத் தொடர்கிறாள். அருளப்பனின் தந்தைக்கு இருவரின் காதலும் தெரிய வர, மங்கையை வரவழைத்து இருவருக்கும் மணம் செய்துவைத்து தனிவீட்டில் குடிவைக்கிறார். மகிழ்வான இல்வாழ்வின் அடையாளமாகத் தேன்மொழி பிறக்கிறாள்; வளர்கிறாள். எதிர்பாராத சூழலில் மங்கை மீது அருளப்பனுக்கு மனக்கசப்பு ஏற்பட மங்கை கணவனையும் தேன்மொழியையும் விட்டுப் பிரிந்து பம்பாய் செல்கிறாள். அங்கொரு மார்வாடியின் துணையோடு அவரின் உணவு விடுதியில் வடநாட்டுப் பெண்ணுருவில் மேற்பார்வையாளராகிறாள். மங்கையின் பிரிவிற்குப் பிறகு, அருளப்பன் தன்மீதான தவறை உணர்கிறான். ஆண்டுகள் கழிந்தும் மங்கை திரும்பவில்லை. மங்கை இறந்துவிட்டதாகத் தேன்மொழி நம்பவைக்கப் படுகிறாள். பணிநிமித்தமாகப் பம்பாய் செல்லும் அருளப்பன் எதிர்பாரா விதமாக உணவுவிடுதியொன்றில் வடநாட்டுப் பெண் உருவில் மேற்பார்வையாளராக இருக்கும் மங்கையைச் சந்திக்கிறான். இருவரும் ஊர் திரும்புகின்றனர். மருமகளை மனதார வரவேற்கிறார் பெரியவர். மகள் தேன்மொழியோ மங்கையைச் சிறிதும் ஏற்க மறுக்கிறாள். மங்கை, மன உளைச்சலால் நோய்வாய்ப்படுகிறாள். அவள் மரணிக்கும் பொழுதில் மகள் தேன்மொழி "அம்மா" என்றழைக்கிறாள். கதை நிறைவடைகிறது.

விருதுகள்

தமிழ்நாடு அரசின் பரிசு பெற்றது

மு வரதராசன்

https://tnpscwinners.com/%E0%AE%AE%E0%AF%81-%E0%AE%B5%E0%AE%B0%E0%AE%A4%E0%AE%B0%E0%AE%BE%E0%AE%9A%E0%AE%A9%E0%AF%8D/

TNPSC

Table of Contents

மு வரதராசன்



மு வரதராசன் ஆசிரியர் குறிப்பு

- **மு.வ என அழைக்கப்படுபவர் = மு.வரதராசனார்**

- மு. வரதராசனாரின் இயற்பெயர் = திருவேங்கடம்.
- காலம் = ஏப்ரல் 25, 1912 – அக்டோபர் 10, 1974
- ஊர் = வாலாஜாப்பேட்டை அருகே வேலம்
- பெற்றோர் = முனுசாமி – கண்ணு அம்மாள்
- பாட்டி வைத்த பெயர் = திருவேங்கடம்
- பெற்றோர் வைத்த பெயர் = வரதராசன்.
- மு.வ வின் ஆசிரியர் = முருகையா முதலியார்
- மு.வரதராசனாரின் அரசியல் ஆசிரியர் = திரு.வி.க

மு வரதராசன் சிறப்புப்பெயர்கள்

- தண்டமிழ்ச் சான்றோர்
- தமிழ்நாட்டின் இலக்கிய நோபல் பரிசாளர் (கூறியவர் = இலங்கை அமைச்சர் நடேசன்)
- "தமிழ் பெர்னாட்ஷா" என்று அழைக்கப்பட்டவர் = மு.வ (கூறியவர் = திரு.வி.க)
- "இலக்கிய இமயம்" என்று அழைக்கப்படுபவர் = மு.வ
- "உலகம் சுற்றிய முதல் தமிழ் அறிஞர்" என்று அழைக்கப்படுபவர் = மு.வ
- "உலகம் சுற்றிய முதல் தமிழ்ப் பேராசிரியர்" என்று அழைக்கப்படுபவர் = மு.வ

மு வரதராசன் நாவல்கள்

- கல்லோ காவியமோ
- நெஞ்சில் ஒரு முல்
- அகல் விளக்கு (சாகித்திய அகாதமி பரிசு பெற்ற நாவல்)
- கரித்துண்டு
- பெற்ற மனம்
- செந்தாமரை (மு.வ அவர்களின் முதல் நாவல்)
- பாவை
- அந்த நாள்
- மலர் விழி
- அல்லி
- கயமை
- மண் குடிசை
- வட மலர்



மு வரதராசன் நாடகங்கள்

- பச்சையப்பர்
- மனச்சான்று
- இளங்கோ
- மருத்துவர் அலி
- மூன்று நாடகங்கள்
- காதல் எங்கே?

மு வரதராசன் கட்டுரைகள்

- அறமும் அரசியலும்
- அரசியல் அலைகள்
- குருவி போர்
- பெண்மை வாழ்க
- குழந்தை
- கல்வி
- மொழி பற்றி
- நாட்டுப் பற்று
- உலக பேரேடு
- மண்ணின் மதிப்பு
- நல்வாழ்வு

மு வரதராசன் இலக்கிய வரலாறு நூல்கள்

- தமிழ் இலக்கிய வரலாறு
- தமிழ் நெஞ்சம்
- மணல் வீடு
- திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்
- திருக்குறள் தெளிவுரை
- ஓவச்செய்தி
- கண்ணகி
- மாதவி
- முல்லை திணை
- நெடுந்தொகை விருந்து
- குறுந்தொகை விருந்து
- நற்றிணை விருந்து
- இலக்கிய ஆராய்ச்சி
- நற்றிணை செல்வம்

- குருந்தொகை செல்வம்
- நடைவண்டி
- கொங்குத்தேர் வாழ்க்கை
- புலவர் கண்ணீர்
- இலக்கிய திறன்
- இலக்கிய மரபு
- தாயுமானவர்
- இளங்கோ அடிகள்
- இலக்கிய கட்சிகள்
- குறள் காட்டும் காதலர்
- சங்க இலக்கியத்தில் இயற்கை

குழந்தை இலக்கியம்

- குழந்தைப் பாடல்கள் (மு.வ அவர்களின் முதல் நூல்)
- இளைஞருக்கான இரு சிறுகதைகள்
- படியாதவர் படும்பாடு
- கண்ணுடைய வாழ்வு

மொழியியல் நூல்கள்

- மொழி நூல்
- மொழியின் கதை
- எழுத்தின் கதை
- சொல்லின் கதை
- மொழி வரலாறு
- மொழியியற் கட்டுரைகள்

வாழ்க்கை வரலாறு நூல்கள்

- அறிஞர் பெர்னாட்ஷா
- காந்தியண்ணல்
- கவிஞர் தாகூர்
- திரு.வி.க

மு.வ கடிதங்கள்

- அன்னைக்கு
- தம்பிக்கு
- தங்கைக்கு
- நன்பருக்கு

ஆங்கில நூல்கள்

- The Treatment of Nature in Sangam
- Ilango Adigal

பயண இலக்கியம்

- யான் கண்ட இலங்கை

மு வரதராசன் சிறுகதைகள்

- கி. பி. 2000
- பழியும் பாவமும்
- விடுதலையா?

- குறட்டை ஒலி
- எதையோ பேசினார்?
- தேங்காய்த் துண்டுகள்
- வீண் கனவு
- திலகவதியார்
- ஆலும் தென்னையும்
- கட்டாயம் வேண்டும்
- வாய்த் திறக்க மாட்டேன்
- எவர் குற்றம்
- அந்த மனம் வருமா
- சுடரின் நகைப்பு
- அமவாசையார்
- அக்கரைப்பச்சை
- வாழும் வழி



மு வரதராசன் குறிப்புகள்

- 13 நாவல்கள், 6 நாடகங்கள், 2 சிறுகதைத் தொகுப்புகள், 11 கட்டுரைத் தொகுப்புகள், தமிழ் இலக்கிய வரலாறு குறித்த புத்தகம், தமிழ் மொழியியல் புத்தகங்கள் மற்றும் குழந்தைகளுக்கான புத்தகங்கள் ஆகியவற்றை எழுதியுள்ளார்.
- ர.பி.சேதுப்பிள்ளையின் வேண்டுகோளை ஏற்று சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை தலைவராக பணியாற்றியவர்.
- மதுரை காமராசர் பலகலைக்கழகத்தின் துணை வேந்தராக பணியாற்றி உள்ளார்.
- மு.வ வின் ஆசிரியர் = முருகையா முதலியார்
- மு.வரதராசனாரின் அரசியல் ஆசிரியர் = திரு.வி.க
- மு.வ அவர்களின் முதல் நூல் = குழந்தைப் பாட்டுக்கள்.

மு வரதராசன் சிறப்புகள்

- மு.வரதராசன் 1953-ல் வித்வான் தேர்வில் தமிழக அளவில் முதன்மையிடம் பெற்று திருப்பனந்தாள் ஆதீனம் அளித்துவந்த ஆயிரம் ரூபாய் பரிசையும் பெற்றார்.
- சென்னை பல்கலைக்கழகத்தில் தமிழ் முதன் முதலில் முனைவர் பட்டம் பெற்றவர் = மு.வ ஆவார்.
- மு.வரதராசனின் நூல்களில் மிகப்பெரிய அளவில் விற்பனையானதும், தொடர்ந்து விற்பனையாவதும் திருக்குறளுக்கு எழுதிய எளிய உரை.
- மு.வ அவர்களின் "அகல் விளக்கு" நாவலுக்கு சாகித்திய அகாதமி விருது வழங்கப்பட்டது.
- மு.வரதராசனுக்கு அமெரிக்க வூஸ்டர் கல்லூரி டி.லிட் பட்டத்தை 1977-ல் வழங்கியது. வெளிநாட்டு பல்கலைக்கழகம் ஒன்றில் டி.லிட் பட்டம் முதல் தமிழ் அறிஞர் மு.வ தான்.
- உலகம் சுற்றி வந்த முதல் தமிழ் பேராசிரியர்.
- இவரது 'கள்ளோ காவியமோ', 'அரசியல் அலைகள்', 'மொழியியல் கட்டுரைகள்' ஆகிய 3 நூல்களுக்கு தமிழக அரசின் விருது கிடைத்தது
- தமிழ் இலக்கியத்துறைக்குக் கடித இலக்கியம் என்ற புதியதொரு இலக்கியத்தை அறிமுகம் செய்த பெருமை இவருக்கு உண்டு.
- கடித இலக்கியத்தை தமிழில் அறிமுகம் செய்தவர்.

தமிழ்நாடு அரசு

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

https://tamilnaducareerservices.tn.gov.in/asset/docs/course_pdf/1901217534.pdf

பிரிவு : TNPSC Group II தேர்வு

பாடம் : பொதுத்தமிழ் (இலக்கியம்)

பகுதி : தமிழில் கடித இலக்கியம் - நாட்குறிப்பு

தமிழில் கடித இலக்கியம் - நாட்குறிப்பு

கடித இலக்கியம்

ஆள் மூலம் சொல்லி அனுப்புவது - தூது. சொல்லி அனுப்ப இயலாதனவற்றை எழுத்து ஆணிக்கொண்டு பனை ஓலையில் எழுதினர். அது முடங்கல் எனப்பட்டது. பத்திரம் என்னும் வடமொழிக்கு இலை என்று பொருள்.

கடி என்றால் விரைவு என்று பொருள் விரைவாக சென்று சேர்வதால் கடிதம் எனப்படுகிறது. பண்டைய காலத்தில் கடிதப் போக்குவரத்திற்காக பயன்படுத்தப்பட்டவை: புறா, நாய்,கிளி. பாடல்கள் மூலம் கடிதம் எழுதும் முறை சீட்டுக்கவி ஆகும்.

ஜவஹர்லால் நேரு:

- நேரு 1889ல் பிறந்தார்.
- நேருவுக்கு 1917ல் இந்திராகாந்தி பிறந்தார்.
- நேரு இந்திராகாந்திக்கு 1922 - 1964 வரை 42 ஆண்டுகள் கடிதம் எழுதினார்.
- இந்திராகாந்தி 1934 ல் மேற்கு வங்காளத்தில் உள்ள ரவீந்தரநாத் தாகூர் நடத்திய விசுவபாரதி பல்கலைக்கழகத்தில் சேர்ந்து படித்தார்.
- 1935 நேரு உத்திராஞ்சல் மாநிலத்தில் உள்ள அல்மோரா சிறையில் அடைக்கப்பட்டவர் - நேரு.
- அல்மோரா சிறைச்சாலையில் இருந்து 1935 பிப்ரவரி 22 ல் இந்திராகாந்திக்கு கடிதம் எழுதியவர் -நேரு.
- நேரு தன் மகளுக்கு எழுதிய கடிதங்கள் உலக வரலாறு என்னும் பெயரில் வெளிவந்தன.

நேருவின் கடிதச் செய்திகள்:

- ஆயிரம் முகங்கள் கொண்டது வாழ்க்கை அதனைப் புரிந்து கொள்ளவும் முறையாக வாழவும் புத்தகப் படிப்பு இன்றியமையாதது என்று கூறியவர் - நேரு.
- தனியொரு மனிதனின் பட்டறிவு மிகவும் குறுகியது என்றவர் - நேரு.
- புத்தகம் வாசிப்பதனைக் கடமையாக ஆக்குதல் கூடாது, கட்டாயப்படுத்தவும் கூடாது. அப்படி செய்தால் புத்தக வாசிப்பு மகிழ்ச்சியை தராது வெறுப்பே உண்டாக்கும் என்று கூறியவர் - நேரு.
- இந்திராகாந்தியின் ஆசிரியர் சுசேதா கிருபாளினி.
- நேரு படித்த பல்கலைக்கழகம் - கேம்பிரிட்ஜ் (இங்கிலாந்து).
- பிளாட்டோவின் புத்தகங்கள் சுவையானவை எனக் கூறியவர் - நேரு.
- நேரு, தனக்கு மிகவும் பிடித்தமானவர் என குறிப்பிடுவது - பெட்ரண்ட் ரஸ்ஸல்.

நேரு கடிதத்தில் குறிப்பிடும் அற்புதமான ஆங்கிலப் படைப்பாளிகள் - ஷேக்ஸ்பியர்
மற்றும் மில்டன்.

கிரேக்க சிந்தனையாளர் பிளாட்டோவின் புத்தகங்கள் சுவையானவை, சிந்தனையைத் தூண்டுபவை எனக் கூறியவர் - நேரு.

கிரேக்க நாடகங்கள் தன் ஆர்வத்தை துண்டுவதாக கூறியவர் - நேரு.

வடமொழி நாடக ஆசிரியரான காளிதாசரின் சாகுந்தலம் நாடகத்தை வாசிக்க
வேண்டிய நூல் என குறிப்பிட்டவர் - நேரு.

உலகின் மிகச் சிறந்த நூல்களில் ஒன்று என நேரு குறிப்பிடும் நூல் - டால்ஸ்டாயின் போரும் அமைதியும்.

நேருவின் நூல்கள்:

1. சுயசரிதை (Autobiography)
2. உலக வரலாற்றுக் காட்சிகள் (Glimpses of World History)
3. புதிய இந்தியாவைக் காணல் (The Discovery of India)

நேரு கடித இலக்கியத்தில் குறிப்பிட்டுள்ள ஆசிரியர்கள் மற்றும் கவிஞர்கள்:-

சேக்ஸ்பியர்	ஆங்கில நாடக ஆசிரியர்
மில்டன்	ஆங்கில கவிஞர்
பெர்னார்ட் ஷா	ஆங்கில நாடக ஆசிரியர்
பிளாட்டோ	கிரேக்க சிந்தனையாளர்
காளிதாசர்	வடமொழி நாடக ஆசிரியர்
டால்ஸ்டாய்	ரஷ்ய நாட்டு எழுத்தாளர்
பெட்ரண்ட் ரஸ்ஸல்	சிந்தனையாளர், கல்வியாளர்

காந்தியடிகள்

சிறப்புகள்:

மோகன் தாஸ் கரம்சந்த் காந்தி 2 - 10 - 1869 ல் குஜராத் மாநிலத்தில் போர்பந்தரில்
பிறந்தார்.

பெற்றோர் பெயர் - கரம்சந்த் உத்தம் சந்த் காந்தி, புத்லிபாய்.

காந்தியின் மனைவி - கஸ்தூரிபாய்.

2.10.1917 ஆம் ஆண்டு புரோச் நகரில் நடைபெற்ற இரண்டாவது கல்வி மாநாட்டில்
காந்தியடிகள் நிகழ்த்திய தலைமை உரை கடித வடிவில் தொகுக்கப்பட்டுள்ளது:

கல்வி கற்பித்தலில் நாம் செய்ய வேண்டிய முதற் செயல் - பயிற்று மொழி குறித்து முடிவு செய்தல். பயிற்று மொழியைக் குறித்து சிந்திக்காமல் கல்வி கற்பிப்பது அடித்தளம் இல்லாமல் கட்டிடத்தை எழுப்புவதனைப் போன்றது என்று கூறியவர் - காந்தியடிகள்.

கவி இரவீந்திரநாத் தாகூரின, ஈர்ப்பான இலக்கிய நடையின் உயர்வுக்குக் காரணம் ஆங்கிலத்தில் அவருக்கு உள்ள அறிவு மட்டுமன்று அவரின் தாய்மொழி பற்று ஆகும் .

முன்சிராம், பேசும் பொழுது குழந்தைகள், ஆண்கள், பெண்கள் அனைவரும் மிகுந்த ஈடுபாட்டுடன் கேட்கிறார்கள், இதற்குக் காரணம் அவர்தம் தாய்மொழி அறிவே எனக் கூறியவர் - காந்தியடிகள்

வேலை தெரியாத தொழிலாளி தன் கருவியின் மீது சீற்றம் கொண்டானாம் - ஆங்கில பழமொழி . மக்கள் அறிவுள்ளவர்களாக இருந்தால் அவர்தம் மொழியும் அவ்வாறே அமையும் -காந்தியடிகள்.

குறைபாடு மொழியை பயன்படுத்துபவர்களிடம் இருக்கிறதே அன்றி மொழியில் இல்லை. தாய் மொழியின் மூலம் கல்வி அளிக்கப்பட்டிருந்தால் நம்மிடையே பல போஸ்களும்,இராய்களும் தோன்றி இருப்பார்கள் என்று கூறியவர் - காந்தியடிகள்.

பள்ளிக்கூடம் வீட்டைப் போன்று இருக்க வேண்டும். குழந்தைகளுக்கு வீட்டில் தோன்றும் எண்ணங்களுக்கும, பள்ளியில் தோன்றும் எண்ணங்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்க வேண்டும். தெரிந்திராத ஒரு மொழியின் மூலம் கல்வி கற்பிப்பது இணக்கத்தைக் குலைத்து விடும்

- காந்தியடிகள்.

“மதன் மோகன் மாளவியாவின் ஆங்கில பேச்சு வெள்ளியைப்போல் ஒளிவிட்டாலும், அவரது தாய் மொழிப் பேச்சு தங்கத்தை போல் ஒளிவீசுகின்றது” என்றவர்- காந்தியடிகள்.

காந்தி படித்த நாடக நூல் சிரவண பிதுர்த்தி, பார்த்த நாடகம் அரிச்சந்திரன் நாடகம்.

தீயவனை எதிர்க்காதே, அவனிடம் உள்ள தீமையை எதிர்த்து நில் - இயேசுவின் மலைச் சொற்பொழிவு. பகவத்கீதையை படித்து மன உறுதியை பெற்றவர் - காந்தியடிகள்.

உன்னுள் இருக்கும் ஆண்டவனின் அரசு எனும் நூலில் “இன்னா செய்தார்க்கும்”
என்ற திருக்குறளை மொழிபெயர்ப்பு செய்தவர் - டால்ஸ்டாய்.

சோவியத் அறிஞர் டால்ஸ்டாய் வழகாட்டுதலால் திருக்குறளின் மூலத்தை அறிய விரும்பி தமிழ் கற்றேன் என்றவர் - காந்தி.

மனிதனின் நோக்கம் உயர்ந்ததாகவும் தூய்மையானதாகவும் மட்டும் இருந்தால் போதாது. அதை அடையும் வழிமுறைகளும் தூய்மையானதாக இருக்கவேண்டும்” - காந்தி.

நேதாஜி போன்றோர் போர் முறையை கையாண்டுதான் விடுதலை பெற முடியும் என்ற போது காந்தி வன்முறையை வன்முறையால் வெல்ல நினைப்பது தீயை தீயால் அணைக்க முற்படுவது போன்றது என்றார் காந்தி.

தமிழ்நாட்டு விவசாயிகளை பார்த்து காந்தி உடை அணிவதை மாற்றிக்கொண்டார்.

கழிப்பறை கழுவுதல் ஒரு கலை என்றவர்- காந்தி.

காந்தியடிகளை அரை நிர்வாண பக்கிரி என்றவர் - வின்□டன்ட் சர்ச்சில்.

கோடான கோடி மக்கள் உண்ண கஞ்சியும், உடுக்க உடையும் இல்லாமல் இருக்கும்
பொழுது இப்படி பகட்டான வாழ்க்கை வாழ்வது பாவமல்லவா - காந்தி.

என்னை பொறுத்தவரை தேசபிமானமும், மனிதாபிமானமும் ஒன்றுதான் - காந்தி.

குஜராத்தியனாக இருப்பதைக் காட்டிலும், இந்தியனாக இருப்பதைக் காட்டிலும்
மனிதனாக இருப்பதே பெருமைக்குரியது - காந்தி.

காந்தியடிகள் தமிழ்நாடு வந்தபோது ஏழை உழவர்கள் வறுமையால் அரையாடை உடுத்தியதை கண்டார். தாமும் அன்று முதல் மேலாடை அணிவதை நிறுத்திக்கொண்டார்.

உலகோர் அனைவரும் குறிக்கோள் உடையவராக இருந்தால் உலகமே நல்ல
சமுதாயமாகும் - காந்தி.

தென் ஆப்பிரிக்காவில் இந்தியருக்கு எதிரான கறுப்பு சட்டங்களை மீறியதால்சிறையில்
அடைக்கப்பட்டவர் - காந்தி.

காந்தி சிறையில் தைத்த செருப்புகளை தன்னை சிறையில் அடைத்த ஆளுநர் ஸ்மட்ஸ் என்பவருக்கு வழங்கினார். அதற்காக ஸ்மட்ஸ் பைபிள் சார்ந்த இரண்டு நூல்களை காந்திக்கு பரிசாக கொடுத்தார்.

காந்தி சிறையில் தைத்த செருப்புகளை பூஜை அறையில் வைத்தவர்- ஸ்மட்ஸ்.
30 - 01 - 1948 ல் காந்தி சுட்டுக்கொள்ளப்பட்டார்.

உள்நாட்டு பொருள் இயக்கமான சுதேசி இயக்கத்தை வளர்க்கும் கடமை இளைஞர்களுக்கே உரியது என்று காந்தி கூறினார்.
காந்திபடத்தில் காந்தியாக நடித்தவர் - பென் கிங்ஸ்லி. புதுவைகாந்தி என அழைக்கப்படுபவர்- சண்முகம்.

வாழும் காந்தி என அழைக்கப்படுபவர் - மாணிக்சர்க்கார் (திரிபுரா முதலமைச்சர்).

விவேகானந்தர்

நாட்டில் சொன்னபடி செய்ய ஆளில்லை, ஆனால் கண்டபடி சொல்ல ஆள் ஏராளம் என்றவர் - விவேகானந்தர்.
அடக்கி ஒழுகுவதற்கு யாரும் இல்லை, அதனால் தான் வீழ்ச்சி நேர்ந்தது என்றவர் - விவேகானந்தர்.
ஒரு நாட்டின் முன்னேற்றம் அந்நாட்டு மக்கள் பெற்றுள்ள கல்வி அறிவாற்றலை பொறுத்து அமையும் என்றவர் - விவேகானந்தர்.

மு. வரதராசனார்ஸ்

மு. வரதராசனாரின் இயற்பெயர் - வளவன்.
தம்பிக்கு, தம்பி எழிலுக்கு எனக் கடிதம் எழுதியவர் -மு.வ.
சாதி சமய வேறுபாடுகளை மறக்கக் கற்றுக்கொள், மறக்க முடியா விட்டால் புறக்கணிக்கக் கற்றுக்கொள் - மு. வரதராசனார்.
தொண்டுக்கு முந்து, தலைமைக்கு பிந்து - மு. வரதராசனார்.
குறட்டை ஒலி கதையை எழுதியவர் - மு. வரதராசனார்.

தமிழ் நெஞ்சம் - மு. வரதராசனார் (கடையெழு வள்ளல்கள் பற்றி கூறியுள்ளார்).

தமிழ் நாட்டிற்கும் தமிழ் மொழிக்கும் நன்மை செய்யாத செய்திதாள்களை விலக்கு
என்றவர்- மு.வ.

திருமணம் மற்றும் வழிபாடுகள் தமிழிலேயே நடத்தப்பட வேண்டும் என்றவர் -மு.வ.

கடிதம், பணவிடை, விளம்பரப் பலகை, விற்பனைச் சீட்டு, முதலியவற்றை
தமிழிலேயே எழுத வேண்டும் -மு.வ.

தமிழ் ஆட்சி மொழியாகவும், கல்வி மொழியாகவும் வரவேண்டும் என முழங்கியவர் -
மு.வ.

ஏழை என்றும் அடிமை என்றும் எவரும் இல்லை என்ற பாரதியார் கண்ட கனவை
போற்ற வேண்டும் -மு.வ.

ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற செம்மொழியை போற்ற வேண்டும் எனக்
கூறியவர் - மு.வ

யாதும் ஊரே, யாவரும் கேளீர் என்ற கணியன் பூங்குன்றனார் கூறிய நிலையை பெற
வேண்டும் - மு.வ.

தமிழ் ஒன்றே தமிழரைப் பிணைத்து ஒற்றுமையாக்க வல்லது - மு.வ.

உன் மொழியையும் நாட்டையும் போற்றுவதற்காக மற்றவர்களின் மொழியையும்
நாட்டையும் தூற்றாதே, பழிக்காதே, வெறுக்காதே என்றவர் - மு.வ.

அயலாரின் தாயைப் பழித்து வெறுக்காமலே நம் தாயிடம் அன்பு செலுத்த முடியும்,
அத்தகைய அன்பு தான் நிலையானது என்றவர் -மு.வ.

கொள்கைகள், கட்சிகள், இயக்கங்களை விட நாட்டு மக்களின் நன்மையேப் பெரிது
என்றவர் -மு.வ.

உன் மானத்தைவிட நாட்டின் மானமே பெரிது என்றவர் - மு.வ.

அண்ணாவின் கடிதம்

14.1.1968 ல் காஞ்சி இதழ் மூலம் அண்ணா எழுதிய கடிதத்தில்
குறிப்பிடப்பட்டுள்ளவை:-

- “புனலிடை மூழ்கிப் பொழிலிடை பேசி உலவிப்
  பொன்னின் இழையும் துகிலும் பூண்டு கனிமொழி பேசி” - அறிஞர் அண்ணா

- தமிழர் திருநாளாம் தை முதல் நாளாம்
  அமிழ்தென இனிக்கும் பொங்கல்
  திருநாள் உழைப்பின் உயர்வை
  உணர்த்தும் பெருநாள் புதுமையின்பம்
  பூனும் நன்னாள் என்று

  - முடியரசன் முழங்குகிறார் எனக் குறிப்பிட்டவர் - அறிஞர் அண்ணா

பேருந்துகளில் திருவள்ளுவர் உருவமும், திருக்குறளும் எழுத சட்டம் இயற்றியவர் - அறிஞர் அண்ணா.

திராவிட நாடு, காஞ்சி இதழ் மூலம் கடிதகங்கள் எழுதியவர் - அண்ணா.

நான்மாடக்கூடலில் நிற்கின்றேன், நானிலம் போற்றிடும் தனிச் சிறப்பினைப் பெற்று தமிழகத்தின் அறிவுக்கோட்டமாய்த் திகழ்ந்து இம்மதுரையம்பதி என்ற எண்ணம் தந்திடும் எழுச்சி பொங்கிடும் நிலையில் நிற்கிறேன் என்றவர் - அண்ணா.

06 - 03 - 1967 ல் அண்ணா தமிழக முதலமைச்சர் ஆனார்.
14 - 04 - 1967 ல் சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் தமிழ் நாடு அரசு தலைமை செயலகம் என்ற பெயர் பலகையை திறந்து வைத்தார்.
15 - 05 - 1967 ல் ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி திட்டத்தை தொடங்கி வைத்தார்.
1967-ல் சமூக நலப்பணிகளில் இளைஞர்களை ஈடுபடுத்து சீரணி அமைப்பை தொடங்கி வைத்தார்.
1968-ல் போப்பிடம் சென்று கோவா விடுதலை வீரர் ரானடேவை விடுதலை அடையச் செய்தார்.
ஆசிரியர் கல்கியால் தமிழ் நாடகக் கலைக்கு ஒரு பெர்னாட்ஷா என்று பாராட்டப்பட்டவர் - அறிஞர் அண்ணா.
அயர்லாந்து நாட்டைச்சேர்ந்த ஜார்ஜ் பெர்னாட்ஷா புகழ்பெற்ற எழுத்தாளரும் சிறந்த நாடக ஆசிரியரும் ஆவார்.

ஆனந்தரங்கர் நாட்குறிப்பு

ஊர் - பெரம்பூர் (சென்னை)
பெற்றோர் - திருவேங்கடம் (புதுவை திவான்)
காலம் - 30 - 03 - 1709
மைத்துனர் - நைனியப்பர்

சிறப்புகள்:

எம்பார் என்பவரிடம் கல்வி கற்றவர் - ஆனந்தரங்கர்.
டைஸ் என்ற இலத்தின் மொழி சொல்லுக்கு நாள் எனப் பொருள்.
டைரியம் என்ற இலத்தின் மொழி சொல்லுக்கு நாட்குறிப்பு எனப் பொருள்.
திவானாகவும், பாக்குக் கிடங்கும் நடத்தி வந்தவர் - ஆனந்தரங்கர்.
துய்ப்ளெக்சு ஆளுநரின் மொழி பெயர்ப்பாளராக பணியாற்றியவர் - ஆனந்தரங்கர்.
ஆனந்தரங்கர் 1736 முதல் 1761 வரை 25 ஆண்டுகள் நாட்குறிப்புகள் எழுதியுள்ளார்.
தம் நாட்குறிப்பை தினப்படிச் செய்திக்குறிப்பு, சொஸ்த லிகிதம் என்றே பெயரிட்டவர் - ஆனந்தரங்கர்.
லிகிதம் என்பதற்கு கடிதம் அல்லது ஆவணம் என்று பொருள்.
சொஸ்தம் என்பதற்கு தெளிந்த (அ) உரிமையுடைய என்று பொருள்.
பிரெஞ்சுக்காரர்களுக்கும் இந்திய மன்னர்களுக்கும் பாலமாய் இருந்தவர் - ஆன்ந்தரங்கர்.
துபாசி என்பதன் பொருள் - இருமொழிப் புலமையுடையவர் (அ) மொழிப்பெயர்ப்பாளர்.

ஆனந்த ரங்கர் நாட்குறிப்பில் குறிப்பிட்டுள்ள செய்திகள்:

பிரெஞ்சுப்படை காரைக்காலை பிடிக்கச் சென்று தோல்வியடைந்த செய்தி.

தில்லியின் மீது பாரசீக படையெடுப்பு.

இலயூர்தொனே கப்பல் பிரெஞ்சு நாட்டிலிருந்து சென்றது.
வெளிநாட்டு பயணிகள் வந்த சென்ற நிகழ்வுகள்.
குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனை வழங்கிய செய்திகள்.
ஆனந்த ரங்கரின் நாட்குறிப்பின் பெரும்பகுதி - வணிகச் செய்திகளே ஆகும்.
முசபர்சங் 1749 ல் 3000 குதிரைகளை ஆனந்தரங்கருக்கு வழங்கியப் பட்டம் - மன்சுபேதார் பட்டம் வழங்கினார்.
ஆனந்த ரங்கர் செங்கற்பட்டு கோட்டைக்கு தளபதியாகவும், அம்மாவட்டத்திற்கு ஜாகிர்தராகவும் இருந்தார்.
சுங்குசேஷாசல செட்டியாரின் பெண்கள் இருவருக்கு நடைபெற்ற திருமண ஊர்வலத்தையும் திருமணம் நடைபெற்ற முறையையும், ஆளுநர் அத்திருமணத்திற்கு வந்திருந்ததனையும் ஆனந்த ரங்கர் எழுதிய நாட்குறிப்பின் வாயிலாக அறிய முடிகிறது.

திருமண நாள் 09 - 06 - 1746 வியாழக்கிழமை சாயங்காலம் 6 மணிக்கு துரை முசே துய்ப்ளே அவரது மனைவி மாதாம் தெப்ரமேனி அரை நாழிகை உட்கார்ந்து (12 நிமிடம்), சாப்பிட்டது அரை நாழிகை இருந்தனர் என்ற செய்தியை குறிப்பிட்டவர் - ஆனந்தரங்கர்.

முசே துய்ப்ளே வருகையிலே 21, உட்காரச்சே 21, சாப்பிடச்சே 21, எழுந்திருக்கச்சே 21 என 84 முறை பீரங்கி முழங்கியது.

துரையவர்களுக்கு 1000 ரூபாயும், மதாமுக்கு100 ரூபாயும் வழங்கப்பட்டது.

திருமணத்திற்கு வரும் மதிப்புமிக்கவர் -களுக்கு வெகுமாணம், மரியாதை அளிப்பது

அன்றைய நடைமுறையாக இருந்ததை இதன் மூலம் அறியலாம்.

உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் முன்னோடி பெப்பிசு.

இந்தியாவின் பெப்பிசு என்றும் நாட் குறிப்பு வேந்தர் என்றும் போற்றப்படுபவர் - ஆனந்த ரங்கர்.

அருணாச்சல கவிராயர் இராம நாடகத்தை திருவரங்கத்தில் அரங்கேற்றிய பின்னர் ஆனந்த ரங்கர் முன்னிலையிலும் அரங்கேற்றினார்.

ஐதராபாத் நிஜம் ஆனந்த ரங்கருக்கு விசீர் மற்றும் குமார பனங்கல் என்ற பட்டங்களை வழங்கினார்.

ஆனந்த ரங்கருடைய நாட்குறிப்புகள் அந்த காலத்தில் யாருமே புரிந்திராத இலக்கிய

பணி என்றவர் - கே. கே. பிள்ளை.

“தான் நேரில் கண்டும் கேட்டும் அறிந்துள்ளச் செய்திகளை சித்திரகுப்தனை போல்

ஒன்றுவிடாமல் குறித்து வைத்துள்ளார்” என்றவர் .வே.சு. ஐயர்.

ஆனந்தரங்கர் குறித்து வெளிவந்துள்ள இலக்கியங்கள்:-

ஆனந்த ரங்கர் கோவை	-	தியாகராச தேசிகர் எழுதினார்.
ஆனந்த ரங்கன் தனிப்பாடல்கள்	-	தியாகராச தேசிகர் எழுதினார்.
கள்வன் நொண்டிச் சிந்து	-	தியாகராச தேசிகர் எழுதினார்.
ஆனந்த ரங்கன் பிள்ளைத்தமிழ்	-	அரிமதி தென்னகன் எழுதினார்.
ஆனந்த ரங்கர் புதினங்கள்	-	அரிமதி தென்னகன் எழுதினார்.
ஆனந்த ரங்க விஜயசம்பு	-	சீனிவாசக்கவி (வடமொழி) எழுதினார்.
ஆனந்த ரங்க ராட்சந்தமு	-	கஸ்தூரிரங்கக் கவி (தெலுங்கு) எழுதினார்.

மு.வரதராசனாரின் கடிதம்

https://www.tnpsc.academy/unit/4-3-%E0%AE%AE%E0%AF%81-%E0%AE%B5%E0%AE%B0%E0%AE%A4%E0%AE%B0%E0%AE%BE%E0%AE%9A%E0%AE%A9%E0%AE%BE%E0%AE%B0%E0%AE%BF%E0%AE%A9%E0%AF%8D-%E0%AE%95%E0%AE%9F%E0%AE%BF%E0%AE%A4%E0%AE%AE%E0%AF%8D/?srsltid=AfmBOooiexyuy_AEUxI-a6WTdXthyV7zdKRSfLfrSKCxeJ3T4s1TEc5F

அன்னைக்கு தம்பிக்கு தங்கைக்கு நண்பர்க்கு என நான்கு கடித இலக்கிய நூல்களை எழுதியுள்ளார்.

தமிழ் இலக்கிய வரலாறு மொழி வரலாறு மொழிநூல் நாவல்கள் எனப் பலவகைப்பட்ட நூல்கள் படைத்து தமிழ் தொண்டாற்றியுள்ளார்.

மு.வ.வின் பிறநூல்களுக்கான திறவுகோல் அவர்தம் கடித இலக்கிய நூல்களே என்பர்.

நல்ல தமிழ்ப் பெயர்களைத் தன்னுடைய கடிதங்களில் அறிமுகப்படுத்தியுள்ளார்.

தம்பிக்கு எழுதிய கடிதத்தில் அன்புள்ள அண்ணன் வளவன் தம்பி எழில் என்று தொடங்கி எழுதியுள்ளார்.

“தமிழ் ஒன்றே தமிழரைப் பிணைத்து ஒற்றுமைப் படுத்த வல்லது. தமிழ் ஆட்சிமொழியாகவும் கல்வி மொழியாகவும் வழங்கப்பட வேண்டும். ஆட்சி மொழி என்றால் சட்டசபை முதல் நீதிமன்றம் வரை தமிழ் வழங்க வேண்டும். கல்விமொழி என்றால் எவ்வகைக் கல்லூரிகளிலும் எல்லா பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க வேண்டும்.”

“திருமணம் வழிபாடுகளைத் தமிழில் நடத்த வேண்டும். ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற செம்மொழியைப் போற்று. சாதி சமய வேறுபாடுகளை மறக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். அல்லது புறக்கணிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்.”

தொண்டுக்கு முந்து தலைமைக்கு பிந்து என்பது உன் நெறியாக இருக்கட்டும்.

தமிழகத்தில் தனி மரங்களாகத் தமிழர் உயர்வதையே காண்கிறோம். தோப்பாகக் கூடி உயர்வதைக் காணமுடியாதது பெருங்குறை. தமிழர்கள் நான்கு பேர் சேர்ந்து ஒரு மரமாய் ஒன்றை நடத்த முடியாது.

நடத்தினாலும் அது நெடுங்காலம் நீடிக்காது. நம்மிடையே பிரிக்கும் ஆற்றல் உண்டு; பிணைக்கும் ஆற்றல் இல்லை.

"இந்த நாட்டில் சொன்ன படி செய்ய ஆளில்லை; ஆனால் கண்டபடி சொல்ல ஆள் ஏராளம் ஒவ்வொருவரும் ஆணையிடுவதற்கு விரும்புகிறார். தன்னை அடக்கி ஒழுகுவதற்கு யாரும் இல்லை. அதனால் தான் வீழுச்சி நேர்ந்தது என்று விவேகானந்தர் கூறுகிறார்.

தமிழர்கள் கூடிக்கூடி செயல் செய்து உயரும் வல்லமை உண்டு என்பதை நாம் உலகிற்கு உணர்த்தும் நாள் வர வேண்டும். அன்று தான் தமிழ் சமுதாயம் உயர வழி பிறக்கும்.

அறக்கருத்துக்கள்

மு. வரதராசனார் (மு.வ.) தம் நாவல்கள், கட்டுரைகள் மற்றும் கடிதங்கள் வாயிலாகத் தனிமனித ஒழுக்கம், சமுதாய சீர்திருத்தம், அன்பு, உண்மை, மற்றும் ஆடம்பரமற்ற வாழ்வு ஆகிய அறக்கருத்துக்களை வலியுறுத்தியவர். உள்ளம் திருந்தி வாழ்தல், பகுத்தறிவுடன் சிந்தித்து அறநெறியில் நடத்தல், மற்றும் காந்தீயக் கொள்கைகளைப் பின்பற்றுதல் ஆகியவற்றை அவர் தம் எழுத்துக்களில் வலியுறுத்தினார்.

மு.வ. உணர்த்தும் முக்கிய அறக்கருத்துக்கள்:

- **தனிமனித ஒழுக்கம்:** உள்ளம் திருந்தி வாழ்தலே முதன்மையானது. ஆடம்பரம், முறையற்ற வேகம் ஆகியவற்றைக் கைவிட்டு, உண்மையும் அன்பும் நிறைந்த வாழ்க்கையை வாழ வேண்டும்.
- **சமுதாய நலம்:** தனிமனிதன் ஒழுக்கமாக வாழ்ந்தால் சமுதாயம் சிறக்கும். கூட்டுப் பொறுப்பு, பிறருக்குத் தொண்டு செய்தல் மற்றும் ஏழை எளியோரின் நிலையை உயர்த்துதல் அவசியம்.

- **வாழ்க்கை முறை:**

  வீட்டிற்குள் முழு உரிமை, வெளியே ஓரளவு கட்டுப்பாடு என்ற கோட்பாட்டை வலியுறுத்தினார்

  . ஆடம்பரமான வாழ்க்கையைத் தவிர்த்து, எளிமையான மற்றும் நேர்மையான வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும்

- **அன்பு மற்றும் அறம்:** உலகிற்கு அன்பே சிறந்த அறம். அன்பின் வழியில் நிற்றலே மனித வாழ்வின் அடிப்படை.

- **கல்வி மற்றும் உழைப்பு:** கல்வியறிவை வளர்த்துக்கொள்வதோடு, உண்மையான உழைப்பால் வாழ்வில் உயர்வடைய வேண்டும்.

அறவோர் மு.வ.வின் இச்சிந்தனைகள், வாசகர்களின் உள்ளத்தைத் தூண்டி நேர்மையான, அறம் சார்ந்த நல்வாழ்வுக்கு வழிகாட்டுபவையாக அமைந்துள்ளன.

பெண்மை வாழ்க

மு. வரதராசனார் எழுதிய "பெண்மை வாழ்க" புத்தகம், பாரி நிலையத்தால் வெளியிடப்பட்ட ஒரு இலக்கியச் சமூக நூல். இது பெண்களின் பெருமை, உரிமை மற்றும் சமூக நிலையைப் போற்றும் கட்டுரைகளின் தொகுப்பாகும், இது காதல் உள்ளிட்ட இதழ்களில் எழுதப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பு. இந்த புத்தகத்தின் பிரதிகள் ஆன்லைன் புத்தகக் கடைகளில் கிடைக்கின்றன, மற்றும் சில ஆய்வு நூல்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

முக்கிய விவரங்கள்:

- **ஆசிரியர்:** மு. வரதராசன்
- **பதிப்பகம்:** பாரி நிலையம்
- **பொருள்:** இலக்கியம் / கட்டுரைத் தொகுப்பு
- **விலை:** தோராயமாக ₹65

PDF பதிப்பைப் பெறுவது எப்படி?

- **பரிநிலையம் (Paari Nilayam):** புத்தகத்தின் அசல் பதிப்பை ஆன்லைன் புத்தக விற்பனை தளங்களில் (எ.கா. `CommonFolks`, `Udumalai`) வாங்கலாம்.
- **Roja Muthiah Research Library (RMRL):** இந்த நூலின் தகவல்கள் RMRL இல் பட்டியலிடப்பட்டுள்ளன.
- **Google Books**: புத்தகத்தின் சில பகுதிகளை Google Books இல் முன்னோட்டமாகப் பார்க்கலாம்.

சொல்லின் கதை

https://ta.wikisource.org/wiki/%E0%AE%9A%E0%AF%8A%E0%AE%B2%E0%AF%8D%E0%AE%B2%E0%AE%BF%E0%AE%A9%E0%AF%8D_%E0%AE%95%E0%AE%A4%E0%AF%88

நன்றியுரை

சென்னை வானொலி நிலையத்தாரின் ஏற்பாட்டின்படி "சொல்வன்மை" என்னும் பொருள்பற்றிப் பள்ளி மாணவருக்காக, 1952 ஜூலை14, 28,ஆகஸ்ட் 11,25, செப்டெம்பர் 15 ஆகிய ஐந்து நாட்களில் ஐந்து தலைப்பில் வானொலியில் பேச நேர்ந்தது. பேசியவற்றை நூல்வடிவில் வெளியிட வானொலி நிலையத்தார் அனுமதி தந்தனர். அவர்கட்கு நன்றி கூறுகின்றேன்.

மு.வ.

(😊)(😊) @@@@@@@ (😊)(😊)

சொல்லின் கதை/சொல்லின் பிறப்பு

நாகரிகம் இல்லாத மிகப் பழங் காலத்தில் மனிதர்கள் வீடு கட்டத் தெரியாமல் குகைகளில் வாழ்ந்தார்களாம். அந்தப் பழஙகாலத்தைக் கற்காலம் என்று சொல்லுகிறோம். அந்தக் காலத்தில் மனிதர்கள்கையில் என்னென்ன கருவிகள் இருந்தன தெரியுமா? துப்பாக்கி, பீரங்கி, அணுக்குண்டு இவைகள் அப்போது இல்லை. வாள், வேல்,வில் முதலான கருவிகளும் இல்லை. அந்தக் காலத்தில் இருந்த கருவிகள் எல்லாம் கல்லால் செய்யப்பட்டவைகளே. கல்லால் செய்த அந்தக்கருவிகளும் மழ மழ என்று செய்யப்படவில்லை; கரடு முரடாக இருந்தன. அந்தக் காலத்து மனிதர்கள், வழியில் கிடைத்த கல்லை எடுத்து, இப்படியும் அப்படியும் உடைத்துத்தீட்டி ஒரு வகையாகத் தங்கள் தொழிலுக்குப் பயன் படுத்திக்கொண்டார்கள். கல்லால் செய்த அப்படிப்பட்ட கருவிகளை வைத்துக்கொண்டே அவர்கள் மிருகங்களைக் குத்திக் கொன்றார்கள்;

அவைகளை அறுத்துத் தின்றார்கள். கல்லால் செய்த அந்தக்காலத்துக் கத்தியை ஒரு புறம் நினைவில் வைத்துக்கொண்டு, மற்றொரு புறம் நாம் இப்போது கையாளுகின்ற பளபளப்பான இரும்புக்கத்தியை எண்ணிப்பாருங்கள். அதற்கும் இதற்கும் எவ்வளவு வேறுபாடு? கற்காலத்துக் கருவிகள் படிப்படியாக மாறி, வளர்ந்து முன்னேறி இந்தக் காலத்துக் கருவிகள் ஏற்பட்டுள்ளன.

சொற்களின் கதையும் இதுதான்.நாகரிகம் இல்லாத காலத்து மக்கள் பேசிவந்த சொற்கள் திருத்தம் இல்லாமல், வடிவம் அமையாமல், இயற்கை ஒலிகளாக இருந்தன. ஆனால் இப்போது நாம் பேசும் சொற்கள் திருத்தமானவை,வடிவம் அமைந்தவை, நாகரிக வளர்ச்சியால் ஏற்பட்டவை. உதாரணமாக- மண், மரம் என்று சொல்கிறோம். இவைகள் எவ்வளவு சுருக்கமாக, திருத்தமாக இருக்கின்றன பாருங்கள். நாம் இப்போது சட்டைப்பையில் வைத்துக்கொள்ளும் சிறு சிறு பேனாக்கத்திகளைப் போல் இவைகள். ஆனால் மிகப்பழங்காலத்தில் இதே சொற்கள் வெவ்வேறு வடிவமாக இருந்தன. கற்காலத்துக் கத்திகளைப்போல் கரடுமுரடாக, நல்ல வடிவம் அமையாமல் இருந்தன.

இதிலிருந்து நாம் என்ன அறிகிறோம்? சொற்கள் முதல்முதலில் தோன்றிய காலத்தில் திருத்தமான அமைப்புப் பெறாமலிருந்து, காலப்போக்கில் நாகரிகம் வளர வளர மாறி நன்றாக அமைந்துள்ளன. ஆங்கிலத்தில் 'had' என்று மூன்று எழுத்தில் ஒரு சொல் இருக்கிறது. அதே சொல் சில நூற்றாண்டுகளுக்குமுன் பதினோரெழுத்துகளைக் கொண்டதாக இருந்ததாம். 'Habededeima' என்று அந்தச் சொல்லுக்கு வடிவம் இருந்ததாம். தமிழிலும் அப்படித்தான் பழங்காலச் சொற்கள் வெவ்வேறு வகையாய் இருந்திருக்க வேண்டும்.

அந்தக் காலத்தில் சொற்களை எப்படி ஏற்படுத்தினார்கள்? தங்கள் காதால் கேட்ட ஒலியையே திருப்பிச் சொன்னார்கள்; திருப்பிச் சொன்ன ஒலியே சொல் ஆயிற்று. மரத்தில் கருநிறமான பறவை ஒன்று 'கா கா' என்று கத்தியது. அதைப் பற்றிச் சொல்லும்போது, பழங்கால மனிதன் தானும் 'கா கா' என்று கத்தினான். நாளடைவில் காக்கா என்ற ஒலியே அந்தப் பறவைக்குப் பெயராயிற்று. இது பழங் காலத்தில் சொல் பிறந்த வரலாறு. ஆனால் இந்தக் காலத்திலும் குழந்தையினிடம் இப்படி ஒலியால் பெயர் வைக்கும் வழக்கம் இருக்கிறது. தெருவிலே நாய் குலைக்கிறது. குழந்தை பார்க்கிறான். உள்ளே ஓடிப்போய், அம்மாவிடம் 'ளொள்,ளொள்' என்று சொல்கிறான். அது அவன் பேசுகின்ற மொழி. அவனுடைய மொழியில் 'ளொள்,ளொள்' என்றால் நாய் என்று பொருள். இவ்வளவு ஏன்? இப்படி ஒலியைக் கேட்டுப் பெயர் வைக்கும் பழக்கம் வளர்ந்த பெரியவர்களிடமும் இருக்கிறது. 'கிலு கிலு' என்று ஒலியுண்டாக்கும் விளையாட்டுப் பொருளுக்குக் 'கிலுகிலுப்பை' என்றே பெயர் வைக்கிறார்கள். 'கிண் கிண்' என்று ஒலி செய்யும் கால் அணிக்குக் 'கிண்கிணி' என்றே சொல்லுகிறார்கள். ஒரு நாட்டில் உணவு என்பதைத் 'தின் தின்'' என்றே பெயர் சொல்கிறார்கள். சில உணவுப் பொருள்களைத் தின்னும்போது 'தின் தின்' என்ற ஒலி கேட்பதால் பொதுவாக உணவுக்கே 'தின்தின் என்று பெயர்

வைத்துவிட்டார்கள். அந்த நாட்டில் மட்டுமல்ல, நம் நாட்டிலும் அப்படிப் பெயர் அமைந்திருக்கும் போல் தோன்றுகிறது. நாமும் தின் என்றும் தீனி என்றும் சொல்கிறோம் அல்லவா?

காக்கை, கிலுகிலுப்பை, கிண்கிணி, தீனி இவற்றிற்கெல்லாம் இப்போது காரணம் தெரிகிறது. வேறு பல சொற்கள் பொருள் தெரியாதபடி அவ்வளவு மாறிவிட்டிருக்கின்றன. இப்போது குயில் என்று சொல்லுகிறோம். குயில் கூவும் ஒலிக்கும், குயில் என்ற பெயருக்கும் இப்போது பொருத்தம் தெரியவில்லை. ஆனால் யார் கண்டார்கள்? 'கூஊஇல்' என்பது போன்ற அதன் ஒலியே நாளடைவில் குயில் என்று சுருக்கமாகத் திருந்திய வடிவு பெற்றிருக்கலாம். இப்படிப் பல சொற்களுக்கு இன்று காரணம் தெரியாவிட்டாலும் அவைகளின் பிறப்பு இது போல்தான் இருந்திருக்க வேண்டும்.

அடுத்தபடியாக, வெறுப்பு, மகிழ்ச்சி, அச்சம் முதலான உணர்ச்சிகளால் சிலவகை ஒலிகளை மனிதன் உண்டாக்குகிறான். வெறுப்பு அடைந்தபோது 'சே' என்கிறான். மகிழ்ச்சியாக உள்ளபோது 'ஓ ஓ', 'ஆ ஆ' என்கிறான். பயப்படும்போது 'ஆ', 'ஊ', 'ஐயோ' என்கிறான். இப்படி உணர்ச்சியால் பிறக்கும் பல ஒலிகள் ஒவ்வொரு மொழியிலும் உள்ளன. இந்த ஒலிகள் மாறாமலும் சொற்களாக உள்ளன; மாறியும் சொற்களாக வாழ்கின்றன.

மூன்றாவது வகையாகப் பல சொற்கள் உள்ளன. அந்தச் சொற்கள் எப்படிப் பிறந்தன என்று தெளிவாக அறிய முடியவில்லை. மணிக்கு ஓசை இயற்கையாக அமைவதுபோல் ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ்வொரு சொல் இயற்கையாகத் தோன்றியது என்று சிலர் கூறுவார்கள். அது பொருத்தமான காரணம் அல்ல. முதல்முதலில் கண்ட அடையாளம் பலரிடமும் பரவிவிடுவதுபோல், முதல்முதிலி ஏற்பட்ட ஒலி, அடையாளமாகப் பலரிடமும் பரவி, அப்படியே சொற்களாகிவிட்டன. குழந்தை வாயை மூடியிருந்து, திறந்து அழுகிறது. மூடிய வாய் திறந்து அழும்போது 'மா' என்ற ஒலி உண்டாகிறது. அந்த ஒலியே தாய்க்கு அடையாளமாகி 'அம்மா' என்ற சொல் ஏற்பட்டது. அடுத்தபடியாக, அதே முயற்சியில் காற்றை மூக்கின் வழியாக விடாமல், முழுதும் வாயின் வழியாகவே விட்டால், 'பா' என்ற ஒலி பிறக்கிறது. அதுவே 'அப்பா' என்ற சொல்லாகிவிட்டது. இப்படியே வெவ்வேறு காரணம் பற்றி வெவ்வேறு சொற்கள் பிறந்துவிட்டன. காரணங்கள் பல இன்று தெரியாமல் போய்விட்டன. ஆனால், இந்த வகையான சொற்கள் பிறந்த கதை மட்டும் இதுதான்.

கற்காலத்துக் கருவிகள் அவ்வளவு திருத்தமாக, கைக்கு அடக்கமாக அமையவில்லை என்று பார்த்தோம் அல்லவா? பழங்காலத்துச் சொற்களும் சுருக்கம் இல்லாமல், திருத்தம் இல்லாமல் நீண்ட பெரிய சொற்களாக இருந்திருக்கும். அடிக்கடி கையாண்ட கருவி கை பட்டுப் பட்டுத் தேய்ந்து தேய்ந்து அழகாக விளங்குவதுபோல், பழங்காலத்து நீண்ட பெரிய சொற்கள் பேச்சில் பழகிப் பழகிச் சுருங்கி அமைந்துவிட்டன. உதாரணமாகப் பாருங்கள். நான், நீ, நாம், நீர், யார், ஏன் முதலான சொற்கள் நம் பேச்சில் அடிக்கடி

வருகின்றன அல்லவா? அடிக்கடி வருவதால்தான் இவைகள் சிறுசிறு சொற்களாக, ஓர் அசைச் சொற்களாக இருக்கின்றன. கரடி, கத்தரி, பருத்தி, அகழி முதலிய சொற்கள் அடிக்கடி பேச்சில் வழங்குவதில்லை. அதனால்தான் அவைகள் சுருக்கமாகவும் அமையவில்லை.

இப்படிப் பல சொற்கள் ஏற்பட்டுவிட்ட பிறகு, வேண்டியபோதெல்லாம் அவைகளிலிருந்து புதிய சொற்கள் உண்டாக்கிக்கொள்ள முடிந்தது. முதலில் சில கருவிகளைக் கண்டுபிடித்த பிறகு, அவைகளைக் கொண்டு வேறு வேறு கருவிகளைச் செய்து கொள்ளலாம் அல்லவா? அதுபோல், முன்னமே பழகியுள்ள சொற்களை மாற்றியும் சேர்த்தும் புதிய சொற்களை ஏற்படுத்திக்கொள்வது எளிமையாகும். விழு என்ற சொல் பழகிவிட்டபிறகு விழுதல், வீழ்ச்சி, விழுது, வீழ்து முதலான சொற்களை ஏற்படுத்திக்கொண்டார்கள். நட என்ற சொல்லிலிருந்து நடத்தல், நடப்பது, நடை, நடக்கை, நடத்தை, நடத்து, நடத்தல், நடப்பு முதலான சொற்கள் அமைந்ததும் இதுபோல்தான். ஆகவே, முதலில் நூறு சொற்களுக்குக் குறைவாக இருந்த நிலை மாறி மாறி, ஆயிரக்கணக்கான சொற்கள் ஏற்பட்டுவிட்டன. ஒரே சொல் சிறிது மாறி அமைந்து வேறு பொருள் உணர்த்தும் முறை இது. இரண்டு சிறு சொல் ஒன்றாகச் சேர்ந்து, புதிய பொருள் உணர்த்துவதும் உண்டு. மரம் வேறு. கால் வேறு. இரண்டும் சேர்ந்து 'மரக்கால்' என்றால் அது வேறு. புகை வேறு. இலை வேறு. இரண்டும் சேர்ந்து 'புகையிலை' என்றால் தனியான ஒரு பொருளை உணர்த்துகிறது. மரக்கால், புகையிலை போல எத்தனையோ சொற்கள் பிறந்து வழங்குகின்றன.

மரக்கால் புகையிலை முதலிய சொற்கள் இப்போது இரண்டு சிறு சொற்கள் சேர்ந்து அமைந்தவை என்பது தெரியுமாறு இருக்கின்றன. இவைகள் எல்லாம் பிற்காலத்தில் தோன்றிய சொற்கள். அப்படியே எழுதி வைத்துவிட்டார்கள். அதனால் சொல்லின் உருவம் சிதையாமல் வழங்குகின்றன. ஆனால் பழங்காலத்தில் வழங்கிய எத்தனையோ சொற்கள் உருவம்சிதைந்து மாறிவிட்டன. அணில், கனல், வாழை, தென்னை முதலிய சொற்கள் பல அப்படிச் சிதைந்து அமைந்த சொற்களே.

இவற்றையெல்லாம் எண்ணிப் பார்த்தால், மனிதன் பேசத்தொடங்கிய காலத்தில் சொற்கள் பல இல்லை என்று உறுதியாகச் சொல்லலாம். இன்ரு, சென்னை நகரத்தில் உள்ள மாடமாளிகைகளையும், கட்டிட நெருக்கத்தையும் பார்த்துவிட்டு, மனிதன் முதன்முதலில் பிறந்தபோதே பல கட்டிடங்களோடு பிறந்தான் என்று சொல்ல முடியுமா? அதுபோல் மனிதன் பேசத் தொடங்கிய காலத்தில் சொற்கள் இயற்கையாக அமைந்திருந்தன என்றும் சொல்ல முடியாது. ஆனால் மனிதன் வாழத் தொடங்கிய பழங்காலத்தில், இயற்கையாக இருந்த மலைக்குகைகளைப் பயன்படுத்திக்கொண்டான் அல்லவா? அதுபோல் மனிதன் முதல்முதலில் பேசத் தொடங்கிய காலத்தில், அவனுக்கு இயற்கையாக் இருந்த குரலில் ஒலியைப் பயன்படுத்திக்கொண்டான். குடிசை போடக் கற்றுக்கொண்டு,

பிறகு மண்சுவர் வைக்கக் கற்று, அதன்பிறகு ஓடு வேயக் கற்றுக்கொண்டு, அதன்பிறகு மச்சுவீடு கட்டவும், மாளிகை கட்டவும் கற்றுக்கொண்டான் அல்லவா? இவ்வாறு கற்று வளர்வதற்குப் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகள் ஆகவில்லையா? அதுபோலத்தான், இயற்கையான ஒலியைப் பயன்படுத்தக் கற்றுக்கொண்ட மனிதன், எத்தனையோ படிகளைக் கடந்து வளர்ந்து வளர்ந்து, இன்று உள்ள இலக்கியம் வளர்ந்த மொழியைப் பேசக் கற்றுக்கொள்வதற்கு எவ்வளவோ காலம் பிடித்திருக்கும். இவ்வாறு எத்தனையோ தலைமுறைகளாகச் சொற்கள் ஏற்பட்டு ஏற்பட்டு, மேன்மேலும் பெருகிக்கொண்டே வருகின்றன. இன்றும் புதிய சொற்கள் ஏற்பட்டுக்கொண்டே இருக்கின்றன.

இதை ஒட்டி இன்னொன்றும் சொல்ல வேண்டும். இந்தக் காலத்துக் கட்டிடத்தைப் பார்த்தால், இது தூண் என்றும், இது கழி என்றும், இது சுவர் என்றும், இது சன்னல் என்றும்,இது கதவு என்றும், இது படி என்றும் பிரித்தறிய முடியும். ஆனால், மிகப் பழங்கால வீடாகிய குகையைப் பார்த்தால், இந்தப் பாகுபாடு ஒன்றும் சொல்லமுடியாது. அதற்கு அடுத்த நாகரிகப் படியில் உள்ள எளிய குடிசையைப் பார்த்தாலும் இத்தனைப் பாகுபாடுகள் சொல்ல முடியாது. அதையும் பல வகையாய்ப் பிரித்தறிய முடியாது அல்லவா? இந்த உண்மையையே சொற்களின் வரலாற்றிலும் காணலாம். இன்று, பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல் என்று சொற்களைப் பிரிக்கிறோம். அவைகளையும் வெவ்வேறு வகையாய்ப் பாகுபடுத்துகிறோம். மிகப் பழங்காலத்தில் இப்படிப்பட்ட பாகுபாடு இருக்கவில்லை. மலைக்குகை, பிரிவுகள் இல்லாத வீடாக இருந்த நிலை போலவே, பழங்காலத்து இயற்கையான குரல்ஒலிகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வாக்கியமாக இருந்தன. அந்த வாக்கியமே பெயர், அதுவே வினை என்று சொல்லக்கூடியவாறு இருந்தன. அதனால்தான் காய்முதலான சொற்கள் இப்போது இரண்டிற்கும் பொதுவாக உள்ளன. காய்கள் என்னும்போது பெயராகவும், காய்க்கும் என்னும்போது வினையாகவும் வழுங்குகின்றது. மலர்,அடி, பிடி,எண் முதலான பல சொற்கள் அப்படிப்பட்டவை. ஒருகாலத்தில் இவை ஒவ்வொன்றும் ஒரு வாக்கியமாக இருந்த காரணத்தாலதான் இவைகள் பொருளின் பெயராகவும் வழங்குகின்றன; தொழிலையும் உணர்த்துகின்றன. குகையில் சுவருக்கும் கூரைக்கும் வேறுபாடு தெரிகிறதா? இல்லை. அதுபோல்தான் இநதச் சொற்கள் வாக்கியமாக இருந்த பழஙகாலத்திலும், எந்தப்பாகுபாடும் வேறுபாடும் இல்லாத நிலைமை இருந்தது.

சொல்லின் கதை/சொல்லின் வழக்கு

ஒரு பையனுக்குக் கருப்பையா என்று பெயர் வைக்கிறார்கள். அவனை எல்லோரும் 'கருப்பையா, கருப்பையா' என்றே அழைக்கிறார்கள். அவன் உண்மையாகவே கருப்பாக இருக்கிறான். அதனால்தான் அவனுடைய பெற்றோர்கள் அவனுடைய கருப்பு நிறம் பற்றிய அந்தப் பெயர் வைத்தார்கள்.

ஆனால் அவனைக் கருப்பையா என்று அழைக்கிறவர்கள் அந்த நிறத்தை அடிக்கடி நினைக்கிறார்களா? இல்லை, காரனத்தை நினைக்காமலே மற்றவர்கள் கருப்பையா என்று அழைக்கிறார்கள். ஓர் ஊமைப் பையனை நாவுக்கரசு என்று குறிப்பிடுகிறார்கள். பேச நாக்கு இல்லாதவனை நாவுக்கரசு என்று சொல்லுகின்றோமே என்று யாரும் கவலைப்படுவதில்லை. கோபாலன், முருகையன், முனிசாமி என்னும் பெயர்களைப் போல இந்தப் பெயர்களும் ஒரு வகை அடையாளமாகவே வழங்குகின்ரன. துணி வெளுப்பவர், ஒவ்வொருவருடைய துணிக்கும் ஒவ்வொருவகைக் குறி போடுகிறார். இன்னார் துணிக்கு இன்னகுறி என்று அடையாளமாக ஏற்படுகிறதே தவிர வேறு ஒன்றும் இல்லை. அது போல் தான் சொற்களும் முதலில் காரணத்தோடு ஏற்பட்டிருந்தாலும், இல்லாவிட்டாலும், நாளடைவில் அடையாளங்களாக வழங்குகின்றன.

நாய் என்றால் ஒருவகை விலங்கு என்றும், பன்றி என்றால் மற்றொருவகை விலங்கு என்றும் தெரிந்து கொள்கிறோம். ஆனால், அந்தப் பெயர்கள் காரணத்தோடு ஏற்பட்டவை என்பதை நினைப்பதில்லை. நாய் என்றால் நாக்கும் நினைவு வருவதில்லை. பன்றி என்றால் பல்லும் நினைவு வருவதில்லை. பேசுவதை விட்டுவிட்டு, ஆராய்ச்சி செய்யும்போதுதான் நாயின் நாக்கையும், பன்றியின் பல்லையும் நினைக்கிறோம். நாவை நீட்டித் தொங்கவிடுவதால் நா - நாய் என்றும், கோரைப்பல் இருப்பதனால் பல்-தி-பன்றி என்றும், பெயர் ஏற்பட்டதை அறிகிறோம். இவ்வாறு, சொல் எப்படிப் பிறந்திருந்தாலும், பேச்சில் வழங்கும்போது அடையாளமாகவே பயன்படுகிறது. நன்றாக ஆராய்ந்து பார்த்தால், சொல் பிறந்த காரணத்தை மறந்துவிட்டதே நல்லது என்று தெரிகிறது. அப்படி மறக்காமல் இருந்திருந்தால் சொற்களை வேகமாகப் பேசுவதற்கு முடியாமல் போகும். 'நாய் பன்றியைக் கடித்தது' என்ற வாக்கியத்தைச் சொல்லும்போது வேகமாகச் சொல்கிறோம். நா-ய் : நாய், பல்-தி : பன்றி என்ற ஆராய்ச்சியில் இருந்தால் இவ்வளவு வேகமாகப் பேசவும் முடியாது; பொருள் தெரிந்துகொள்ளவும் முடியாது. ஆகவே, சொற்களின் பிறப்புக் காரணத்தை மறந்து அடையாளங்களாக அவற்றை வழங்குவதால்தான் நன்றாகப் பேச முடிகிறது,

உதாரணமாகப் பாருங்கள் : பென்சிலை எடுத்துப பேனாக் கத்தியால் தீட்டி வெள்ளைக் காகிதத்தில் எழுதுகிறோம். கருவிகள் உடனே பயன்படுகின்றன. எழுத்து வேலையும் உடனே முடிகிறது. பென்சில் செய்த தொழிற்சாலை, பேனாக்கத்தி செய்த தொழிற்சாலை, காகிதம் செய்த தொழிற்சாலை இவை எல்லாம் நினைவுக்கு வந்தால், பென்சிலை எடுத்துப் பார்ப்பதில் நேரம் செலவாகும். பேனாக் கத்தி எடுத்துத் தீட்டுவதற்குமுன் நேரம் செலவாகும். காகிதத்தை எடுத்து, அது செய்யப்பட்ட முறையை எண்ணுவதிலும் நேரம் செலவாகும். கடைசியில் எழுத்து வேலை நினைத்தபடி முடியாது. தொழிற்சாலைகளை மறந்துவிட வேண்டும். செய்யப்பட்ட முறைகளையும் மறந்துவிட வேண்டும். பென்சில், பேனாக்கத்தி, காகிதம் இவைகள் நம்

வேலைக்குப் பயன்படும் கருவிகள் என்ற எண்ணம் மட்டும் இருந்தால் போதும். அப்போதுதான் நாம் எண்ணியபடி வேலை செய்து முடிக்க முடியும்.

சொற்களை வழங்கும் முறையும் இப்படித்தான். அவைகள் எப்படிப் பிறந்தன என்பதை மறந்துவிட வேண்டும். என்ன பொருள் உணர்த்துகின்றன என்பதை மட்டும் தெரிந்துகொள்ள வேண்டும். அப்போதுதான் சொற்களைத் தெளிவாகவும் வேகமாகவும் பேச்சில் வழங்க முடியும்.

இன்னொன்று பாருங்கள்: பல் இருப்பதனால் பன்றி என்று பெயர் இருப்பதை அறிந்தோம். இதெபோல் பல்லின் காரணமாகப்பெயர் பெற்ற மற்றோர் உயிரும் உண்டு. அதுதான் பல்லி. பன்றி, பல்லி ஆகிய இரண்டு சொற்கள் பிறப்பதற்கும் பல்லே காரணமாக இருக்கிறது. ஆகவே, அந்தக் காரணம் நினைவில் இருந்தால், பேசும்போது என்ன ஆகும் தெரியுமா? இரண்டுக்கும் வேறுபாடு தெரியாமல் பன்றியைப் பல்லி என்று தவறிச் சொல்லி விடுவோம். பல்லியைப் பன்றி என்றும் தவறாகச் சொல்லிவிடுவோம். கடைசியில் நன்றாகப் பேசத் தெரியாதவர்கள் ஆகிவிடுவோம். ஆகவே, தெளிவாகவும், வேகமாகவும் சொற்கள் வழங்கவேண்டுமானால், அவைகள் அடையாளங்களாகவே பயன் படவேண்டும்.

அடையாளங்களாக வழங்கும்போதும், இன்னொன்று கவனிக்க வேண்டும் நேற்று ஒரு பொருளுக்கு அடையாளமாக இருந்த ஒரு சொல், இன்று கொஞ்சம் மாறி, வேறு பொருளுக்கு அடையாளமாக வழங்கலாம். நேற்று மணியின் துணிக்கு அடையாளமாக இருந்த குறி, இன்று கண்ணனுடைய துணிக்கு குறியாக மாறலாம் அல்லவா? சொற்களும் காலப்போக்கில் இப்படிப் பொருள்மாறுவது உண்டு. மரத்தால் செய்த ஓர் அளவு கருவிக்கு பழங்காலத்தில் 'மரக்கால்' என்று பெயர். இப்போது, இரும்புத் தகட்டால் செய்த கருவிக்கு அந்தப் பெயரைச் சொல்கிறோம். இரும்பால் செய்த இந்தக் காலத்துக் கருவியைச் சொல்லும் போது பழங்காலத்து மரக்காலை நினைப்பதால் பயன் இல்லை. மரக்கால் என்பதில் உள்ள மரம் என்ற கருத்தையே மறந்துவிட வேண்டும்.

பழங்காலத்தில் எள்ளிலிருந்து எடுக்கப்பட்ட நெய்க்கு 'எண்ணெய்' என்று பெயர். இப்போது எண்ணெய் என்பது பொதுவான ஒரு பெயராக வழங்குகிறது. கடைக்கு போய் 'எண்ணெய் வேண்டும்' என்று கேட்டால், கடைக்காரனுக்கு 'எள்ளின் நெய்' என்ற பொருள் தெரியாது. ”என்ன எண்ணெய் வேண்டும்? விள்க்கெண்ணெய்யா, கடலை எண்ணெய்யா, நல்லெண்ணெய்யா” என்று திருப்பிக்கேட்பான். பழங்காலத்தைப் போல் கடலை நெய் வேண்டும், எள்ளின் நெய் வேண்டும் என்று சொன்னாலும் அவனுக்கு விளங்காது. பசுவின் நெய்தான் என்று சொல்லிவிடுவான். ஒரு காலத்தில் தைலப் பொருள்கள் எல்லாவற்றிற்கும் பொதுவாக இருந்த நெய் என்ற சொல், இப்பொழுது பசுவின்நெய் அல்லது எருமைநெய்க்கு மட்டும் வழங்குகிறது. ஆகவே, பேசுகின்றவர்களும்

எழுதுகின்றவர்களும் பழைய பொருளை மறந்துவிட்டு, இன்றைய வழக்கைமட்டும் கவனித்துப் பேசவேண்டும்; எழுத வேண்டும்.

இப்படியே பல சொற்கள் பொருள் மாறி வழங்குவது உண்டு. கோயில் என்ற சொல் பழங்காலத்தில் அரசனுடைய அரண்மனையை உணர்த்தியது. இப்போது கடவுளை வழிபடும் இடத்தை மட்டும் குறிக்கிறது. ஒரு காலத்தில் கோயிலுக்கு 'நகர்' என்ற பெயர் இருந்தது. இப்போது 'நகர்' என்றால் சென்னை போன்ற பெரிய நகரங்களையே குறிக்கும். பழங்காலத்தில் மரம் என்ற சொல், தேக்கு, பலா, மா முதலிய உள்ளே வைரமுடைய மரங்களை மட்டும் குறித்து வந்தது. தென்னைமரம், பனைமரம், முதலியவற்றிற்கு உள்ளே வைரம் இல்லை என்பது உங்களுக்குத் தெரியும். அதனால் அந்தக் காலத்தில் தென்னை மரம், பனைமரம் என்று சொன்னால் எல்லோரும் சிரிப்பார்கள். அவற்றை மரம் என்று சொல்லுவதே பிழையாக இருந்தது. அவைகளை எல்லாம் நம் முன்னோர்கள் புல் என்று சொல்லி வந்தார்கள். தென்னையையும், பனையையும் பார்த்துப் 'புல்' என்று சொன்னால் இந்தக் காலத்தில் எல்லோரும் சிரிப்பார்கள். உயரமாக வளராமல், தரையோடு உள்ள சிலவற்றை மட்டும்தான் இப்போது புல் என்று சொல்கின்றோம். ஒரு காலத்தில் இருந்த சொல்வழக்கு மற்றொரு காலத்தில் இல்லாமல் போவதை இவைகள் தெரிவிக்கின்றன.

பேசுகின்ற மக்கள் எப்படி மதிக்கின்றார்களோ, அப்படித்தான் சொல்லும் வழங்குகிறது. மக்கள் எதை மதிக்கவில்லையோ, அது வழக்கில் இல்லாமல் போகிறது. ஒன்று பாருங்கள். 'ஆண் யானை', 'பெண் யானை' என்று சொல்கிறோம். ஆனால் ஆண்மாடு பெண் மாடு என்று சொல்வதில்லை. பசு, எருது, மாடு என்று சொல்வதுதான் வழக்கமாக இருக்கிறது. 'பெண் மாடு', 'ஆண் மாடு' என்று சொன்னால் ஊர் சிரிக்கும். ஆனால் பெண் கோழி, ஆண் கோழி என்று கூசாமல் சொல்கின்றோம். திருவள்ளுவர், ஔவையார் இவர்கள் வாழ்ந்த காலத்தில் பெண்கோழி, ஆண்கோழி என்று சொல்லமாட்டார்கள். பேடை, சேவல் என்றுதான் சொல்வார்கள். கிராமங்களில் சிலர் இன்னும் இப்படித்தான் சொல்கிறார்கள். யானை முதலிய மிருகங்களிலும் இப்படித்தான் பெண்ணுக்கும் ஆணுக்கும் வெவ்வேறு பெயர்கள் வழங்கியிருந்தன. மிகப் பழங்காலத்தில் பெண்யானையைப் 'பிடி' என்று சொன்னார்கள். ஆண்யானையைக் 'களிறு' என்று சொன்னார்கள். பெண்யானை, ஆண்யானை என்று சொல்வதே பிழையாக இருந்த காலம் அது. இதுபோல் எத்தனையோ சொற்களுக்கு வழக்கு மாறிவிட்டது.

காலப்போக்கில் வளரும் நாகரிகமும் சொல்லின் வழக்கை மாற்றிவருகிறது. சில சொற்களை உள்ளபடி வெளிப்படையாகப் பேசினால் நாகரிகம் குறைவாகத் தெரிகிறது. அதற்காக அந்தச் சொற்களை மறைத்துவிட்டு, நாகரிகமான வேறு சொற்களைச் சொல்வது உண்டு. 'கால் கழுவி வந்தான்', 'ஒன்றுக்கு இருந்தான்', 'சாணம் போட்டது' முதலிய வாக்கியங்களில் இதைக் காணலாம்.

செத்துப்போன ஒருவரைப் பற்றி, அவர் இறந்துவிட்டார் என்று சொல்லாமல் 'காலமானார்' என்று மாற்றிச் சொல்கிறோம். திருவடிநிழல் அடைந்தார், வைகுண்டம் சேர்ந்தார், பரமபதம் அடைந்தார்,சிவலோகம் சேர்ந்தார் என்று சொல்கிறோம். செத்துப் போனார் என்று சொன்னால் சொல்பவர்களுகும் நன்றாக இல்லை: கேட்பவர்களுக்கும் நன்றாக இல்லை. அதனால், அதை மாற்றிக்கொஞ்சம் மங்கலமாகச் சொல்லுகிறோஓம்.

சொல் வழங்குவதில் மொழிக்கு மொழி வேறுபாடு இருக்கிறது. ஆங்கிலத்தில் 'அங்கிள்' என்ற ஒரு சொல் இருக்கிறது. அது, தாயோடு பிறந்த அம்மானையும் உணர்த்துகிறது: தகப்பனோடு பிறந்த சிற்றப்பன், பெரியப்பனையும் உணர்த்துகிறது. தமிழில் அதுபோல் ஒரு சொல் இல்லை. அதற்குத் தேவையும் ஏற்படவில்லை. ஆங்கிலத்தில் 'பிரதர்' (சகோதரர்) என்ற சொல்லை மிகுதியாக வழங்குகிறார்கள். மூத்த சகோதரன் 'எல்டர் பிரதர்', இளைய சகோதரன் 'யங்கர் பிரதர்' என்ற சொற்களை அவர்கள் அவ்வளவாகப் பயன்படுத்துவதில்லை. தமிழில் அப்படி இல்லை. அவர்களுக்கு நேர்மாறாகத் தமிழர்களாகிய நாம் பேசுகிறோம். உடன்பிறந்தான் என்ற சொல்லை வழங்காமல் அண்ணன், தம்பி என்ற சொற்களையே அடிக்கடி வழங்குகிறோம்.

இவ்வாறு சொற்கள் வழங்குவதில் எவ்வளவோ மாறுதல்களும் புதுமைகளும் உள்ளன. இவற்றை எல்லாம் ஆராய்ந்து பார்க்கும்போது, நம்மை அறியாமலே ஒருவகையான சொல்நாகரிகம் வளர்ந்துவருவதை உணர்கிறோம். சொற்களின் உலகத்தில் ஒருகாலத்தில் நாகரிகமாய் இருந்தது இப்போது நாகரிகம் இல்லாமல் போகின்றது. ஒரு காலத்தில் செல்லாக் காசாக இருந்தது, இப்போது மதிப்பையும் பெற்றுவிடுகிறது. ஒரு மொழியாருக்குப் பழக்கத்தில் உள்ள ஒன்று, மற்றொரு மொழியாருக்குப் புதுமையாக இருக்கிறது. எழுதுகின்றவர்களும் பேசுகின்றவர்களும் பெரும்பாலும் இவற்றையெல்லாம் எண்ணிப் பார்ப்பதேயில்லை. பயிரிடும் குடியானவன் தாவரநூல் படிப்பதும் இல்லை; அந்தப் போக்கில் ஆராய்ச்சி செய்வதும் இல்லை. ஆனால், மரம் செடி கொடிகளை எப்படி வளர்க்கவேண்டும், எப்படிப் பயிரிடவேண்டும் என்பவற்றை மட்டும் தெரிந்துகொண்டிருக்கிறான். அது போதும். அது போலவே சொல் வழக்கில், மேலே கண்ட புதுமைகளையும் மாறுதல்களையும் ஆராயாமல் இருக்கலாம். ஆனால் நம்மைச் சுற்றி வாழும் மக்கள் எந்தெந்தச் சொற்களை எந்தெந்தப் பொருளில் எவ்வெவ்வாறு வழங்குகின்றார்கள் என்பதைத் தெரிந்துகொண்டு, அவர்களைப் பின்பற்றிப் பேசினால் அதுவே போதும். ஆனாலும் குடியானவன் தாவரநூல் கற்றுக்கொண்டால் விளக்கமும் சிறப்பும் ஏற்படுவதுபோல், சொல்வழக்கு இப்படிப்பட்டது என்று ஆராய்ந்து தெரிந்து கொண்டால், மேலும் விளக்கமாகும்; தெளிவும் ஏற்படும்.

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@

சொல்லின் கதை/சொல்லின் இசை

முதன்முதலில் மனிதர்கள் பேசினார்களா, பாடினார்களா? முதன்முதலில் பேசினார்கள் என்றுதான் நீங்கள் சொல்வீர்கள். அதன் பிறகு பாடக்கற்றுக்கொண்டார்கள் என்றும் சொல்வீர்கள். ஆனால் உண்மை அது அல்ல. நீங்கள் பேசக் கற்றுக்கொண்டு நெடுங்காலம் ஆனபிறகுதான் பாடக்கற்றுக்கொள்கிறீர்கள். அதனால் பழங்காலத்து மனிதர்களும் அப்படியே முதலில் பேசவும் பிறகு பாடவும் கற்றுக்கொண் டிருப்பார்கள் என்று எண்ணுகிறீர்கள். அது அவ்வளவு பொருத்தம் அல்ல. பாடுவது என்றால், இராகமும் தாளமும் அமைத்து, இசை இலக்கணப்படி பாடுவது மட்டும் அல்ல. மனம் போனபடி ஒலியை நீட்டி, ஆனால் இனிமையாக, உருக்கமாகப் பாடினால் போதும். அதுவும் பாட்டுத்தானே? நாட்டுப்புறங்களில் காட்டிலும் மேட்டிலும் ஓடி உழைக்கும் சிறு பிள்ளைகள் மனம் போனபடி நீட்டி நீட்டிப் பாடுகிறார்கள். அவற்றை எல்லாம் பாட்டு அல்ல என்று சொல்லிவிட முடியுமா? இசை இலக்கணம் தெரியாத காரணத்தால், பாட்டும் தெரியாது என்று சொல்லிவிட முடியாது. குயிலுக்கு இசை இலக்கணம் தெரியாது. ஆனால் அதன் ஒலியைப் பாட்டு என்றுதானே சொல்கிறார்கள்.

இந்தக் கருத்தோடு பார்த்தால், உங்களுக்கும் இயற்கையாகப் பாட்டுத் தெரியும் என்றுதான் சொல்லவேண்டும். நீங்கள் திருத்தமாகப் பேசியதற்கு முன்னமே பாடியிருக்கிறீர்கள். நீங்கள் மூன்று நான்கு வயதுக் குழந்தையாய் இருந்தபோது, உங்கள் அம்மாவிடம்போய், ஏதாவது வேண்டும் என்று கேட்டீர்கள். அப்போது "அம்மா, கொடு" என்று புத்தகத்தில் படிப்பதுபோல் கேட்கவில்லை. கைகால் ஆட்டிக்கொண்டும், கொஞ்சி அழுதுகொண்டும், சொற்களை நீட்டி நீட்டி, 'அம்மா அஅ, கொடு உஉ' என்று கேட்டீர்கள். அவை எல்லாம் பாட்டுத்தான். இப்போது அந்தப் பாட்டை எல்லாம் மறந்துவிட்டீர்கள். பேசுவதிலே அக்கரையாக ஈடுபட்டிருக்கிறீர்கள். அதனால் பாட்டை மறந்துவிட்டீர்கள். மிகப் பழங்காலத்து மக்களும் அப்படித்தான். அவர்களும் சொற்களை நீட்டி நீட்டிப் பாட்டுப்போல் ஒலித்துக் கொண்டிருந்தார்கள். நாகரிகம் வளர்ந்தபிறகு, அந்த வழக்கத்தை விட்டுவிட்டு, ஒலிகளை அளவோடு நிறுத்திப் பேசத் தொடங்கினார்கள்.

ஆனாலும் இசையை அடியோடு துறந்துவிட மனிதனால் முடியவில்லை. காரணம் என்ன? மனிதனுடைய செவி ஒழுங்கான நயமான ஒலியைக் கேட்க விரும்புகிறது. அதற்குக் காரணம் மனிதனுடைய உடம்பே. உடம்பில் இரத்த ஓட்டம், நுரையீரலின் வேலை, இதயத்தின் தொழில் முதலிய எல்லாம் ஒருவகை ஒழுங்குமுறையோடு நடைபெறுகின்றன. அதனால் செவி நரம்புகளும் ஒழுங்கான ஒலியைக் கேட்கவே விரும்புகின்றன. ஆகையால், இசையில் பயிற்சி இல்லாதவர்களும் ஒழுங்கான ஒலிகளால் அமைந்த சொற்களைக் கேட்க விரும்புகிறார்கள். அப்படிப்பட்ட சொற்களையே பேசவும் விரும்புகிறார்கள்.

உதாரணம் பாருங்கள். நாம் பல வாக்கியங்களைப் பழமொழிகள் என்று சொல்கிறோம். 'காற்றுள்ள போதே தூற்றிக்கொள்','கிட்டாதாயின் வெட்டென மற', 'யானைக்கு ஒரு காலம், பூனைக்கு ஒருகாலம்', 'யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே' முதலான பழமொழிகளை எண்ணிப் பாருங்கள். என்னென்னவோ கற்றுக்கொண்டு மறந்துவிடுகிறோம். ஆனால் மறக்க வேண்டும் ந்ன்று நாமாகப் பாடுபட்டாலும் இந்தப் பழமொழிகளை மறக்க முடியவில்லை. காரணம் தெரியுமா? இந்தச் சொற்களில் உள்ள இசைதான் காரணம். ஒருவகை ஒலி நயமாக ஒழுங்காகத் திரும்பி வருகின்றது. இந்தப் பழமொழிகளை நீங்களே சொல்லிப் பாருங்கள். ஒழுங்கான ஒலிமுறை அமைந்திருக்கிறது அல்லவா? இதைத்தான் சொற்களின் இசை என்று சொல்லவேண்டும். இந்தச் சொற்களின் இசைதான் இவற்றை மறக்காமல் இருக்கச் செய்கிறது. உலகத்தில் உள்ள எல்லா மொழிகளிலும் பல சொற்கள் இப்படி இசையோடு அமைந்திருக்கின்றன. தமிழ்ச் சொற்களிலும் இப்படிப் பல உண்டு.

இப்படிப்பட்ட சொற்களில் வேண்டும் என்றே இசையை யாரும் அமைக்கவில்லை. பேசும் மக்களின் செவியும் வாயும் தம்மை அறியாமல் இப்படிச் சொற்களில் இசையை அமைத்துவிடுகின்றன. உதாரணமாகப் பாருங்கள்:'அல்ல' என்பது ஒரு சொல். 'இல்லை'என்பது மற்றொரு சொல். இலக்கணப்படி பார்த்தால், 'இல்லை' என்னும் சொல் 'இல்ல' என்றுதான் இருக்கவேண்டும். ஆனால் 'இல்லை' என்று மாறி அமைந்திருக்கிறது. "அல்ல" என்னும் சொல் 'அல்லை' என்று மாறவில்லை.காரணம் என்ன? 'அல்ல' என்னும் சொல்லில் முன்னும் பின்னும் 'அ'-ஒலி இருக்கிறது. அதனால் ஒலி ஒத்துப் போகிறது. 'இல்ல' என்று சொன்னால், சொல் முதலில் 'இ'-யும் முடிவில் 'அ'-வும் இருப்பதால் ஒத்துப் போவதில்லை. அதனால், கடைசியில் உள்ள 'அ', 'ஐ'யாக மாறிவிட்டது. 'இ'-யும் 'ஐ'-யும் ஒத்துப்போகும் ஒலிகள். அதனால், 'இல்ல'என்று சொல்வதைவிட,'இல்லை' என்று சொல்வது இனிமையாயிருக்கிறது. இதுபோலவே எத்தனையோ சொற்கள் இனிய ஒலி வேண்டும் என்று மாறி அமைந்திருக்கின்றன.

'அது' என்பது பெயர்ச்சொல். 'கு' என்பது, உருபு. 'அது+கு' = 'அதுக்கு' என்று ஆகவேண்டும். ஆனால், இடையிலே ஓர் ஒலியைச் சேர்த்து 'அதற்கு' என்று சொல்லுகிறோம். நாம்+கு=நாம்கு என்று சொல்லாமல்,நம்கு என்றும் சொல்லாமல், நமக்கு என்று சொல்கிறோம். அப்படியே, யான்கு, நீகு என்று ஒலிக்காமல், எனக்கு, உனக்கு என்று ஒலிக்கிறோம். மரம்+ஐ=மரமை, குளம்+கு=குளக்கு என்று யாரும் ஒலிப்பதில்லை. மரத்தை, குளத்திற்கு என்று இடையிலே ஒலிகள் சேர்த்து வழங்குகிறார்கள் இனிய ஒலியாக ஒலிக்க வேண்டும் என்பதை முக்கிய நோக்கமாகக்கொண்டு இவ்வாறு சொற்களில் சில ஒலிகள் சேர்க்கப்படுகின்றன. இவைகளைச் சாரியைகள் என்று இலக்கணம் கற்றவர்கள் சொல்வார்கள். சொற்களில் இசை பொருந்த வேண்டும் என்று முன்னோர்கள் செய்த முயற்சியை இவற்றில் பாருங்கள்.

இப்படிப்பட்ட முயற்சி தமிழ்மொழியில் மட்டும் அல்ல, ஏறக்குறைய எல்லா மொழிகளிலுமே உண்டு. தெலுங்கு மொழியில் சொற்கள் எல்லாம் இனிமையான இசையை உடையவை என்று அவர்கள் சொல்கிறார்கள். அதனால்தான் அந்த மொழி தேன்போன்றமொழி, தேனுகு, தெனுகு, தெலுங்கு என்று பெயர் பெற்றதாகவும் சொல்கிறார்கள். தமிழர்களாகிய நாமும் நம் தாய்மொழியைப் பற்றி இப்படித்தான் சொல்கிறோம். தமிழ் என்றாலே இனிமை என்று பொருள் கூறுகிறோம். ஏறக்குறைய எல்லா மொழியாரும் இப்படியே தம்தம் மொழியைப் பாராட்டிக்கொள்கிறார்கள்.

நாட்டுக்கு நாடு இசை வேறு வேறாக இருக்கிறது. இசைக் கருவிகளும் வேறு வேறாக உள்ளன. எவ்வளவு வேற்றுமை இருந்தபோதிலும் எல்லாம் இசைதான். ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு வகையில் ஒழுங்கான ஒலி அமைந்திருக்கிறது. தமிழர்களுக்கு விருப்பமானது புல்லாங்குழல் இசை. மேற்கு நாட்டார்க்கு விருப்பமானது பியானோ இசை. மேற்கு நாட்டார்க்கு விருப்பமானது பியானோ இசை. பியானோ இல்லையே என்று தமிழர்கள் வருந்தவேண்டிய தில்லை. குழல் இல்லையே என்று மேற்கு நாட்டார்கள் வருந்த வேண்டியதும் இல்லை. அதுபோலவே, ஒவ்வொரு மொழிக்கும் தனிச்சிறப்பாக ஒவ்வொருவகை இனிமை அமைந்திருக்கிறது. தமிழ்ச் சொற்களிலும் அப்படிப்பட்ட தனி இனிமை இருக்கிறது.

ஆங்கிலேயர்கள் 'ஓட்' என்று சொல்கிறார்கள். தமிழர்கள் அதை 'ஓட்டு' என்றுதான் சொல்கிறார்கள். தமிழில் பல சொற்கள் இப்படி 'உ' என்று முடிகின்றன. ஆங்கிலச்சொற்கள் அப்படி முடிவதில்லை. ஆங்கிலத்தில் உள்ள எண்ணுப் பெயர்களைச் சொல்லிப் பாருங்கள். ஒன் (one), போர் (four), பைவ் (five), சிக்ஸ் (six), செவன் (seven), எய்ட் (eight), நைன் (nine), டென் (ten) என்று ஆங்கிலத்தில் சொல்கிறார்கள். இவை மெய்யெழுத்தில் முடிகின்றன. தமிழில் உள்ள எண்ணுப் பெயர்களைப் பாருங்கள். எல்லாம் 'உ' என்று முடிகின்றன. ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது, பத்து - இவற்றில் இசை அமைப்பதற்காகவே இந்த 'உ' ஒலி பயன்படுகிறது. தெலுங்கிலே இந்த ஒலி இன்னும் மிகுதியாகப் பயன்படுகிறது. கன்னு, மேமு, வாரு, வீரு, வாருலு, நேனு, மீரு, ஒகரு, இத்தரு முதலாக ஏறக்குறைய எல்லாச் சொற்களிலும் 'உ' ஒலி சேர்த்து நயமாக ஒலிக்கிறார்கள்.

இதுபோல் எத்தனையோ வழிகளில் சொற்கள் இனிய ஒலி பெற்று வழங்குகின்றன. 'வருபார்கள்' 'உண்வார்கள்' என்று நாம் சொல்கிறோமா? இல்லை. 'வருவார்கள், உண்பார்கள்' என்று சொல்கிறோம். சில இடங்களில் 'ப' ஒலி சேர்க்காமல், 'வ' சேர்க்கிறோம்; வருவார், செய்வார், போவார் என்பவைபோல. வேறு இடங்களில் 'வ' ஒலி சேர்க்காமல், 'ப' ஒலி சேர்க்கிறோம்; உண்பார், தின்பார், இருப்பார், உடுப்பார் என்பவைபோல. செல் - சென்றார்கள், நில் - நின்றார்கள் என்று சொல்கிறோம். ஆனால் வில் - வின்றார்கள் என்று சொல்வதில்லை. விற்றார்கள் என்று சொல்கிறோம். போடு -

போட்டார்கள் என்று சொல்கிறோம்; ஆனால் ஓடு - ஓட்டார்கள் என்று சொல்வதில்லை; ஓடினார்கள் என்று சொல்கிறோம். செய் - செய்தார்கள் என்று சொல்கிறோம். ஆனால், உண் - உண்தார்கள், தின் - திந்தார்கள் என்று சொல்வதில்லை; உண்டார்கள், தின்றார்கள் என்று சொல்கிறோம். இப்படி ஆயிரக்கணக்கான சொற்களை எடுத்து எண்ணிப் பார்த்தால், இனிய ஒலி வேண்டும் என்ற காரணத்தால் சொற்கள் வெவ்வேறு வகையாய் அமைந்திருக்கின்றன என்பது தெரியும்.

இதுவரையில், பேச்சு வழக்கில் உள்ள சொற்களைப் பார்த்தோம். இசையோடு அமைந்த பாட்டுக்களைப் பார்ப்போமானால், சொற்களில் உள்ள இசை நயம் மிகமிகத் தெளிவாக விளங்கும். "செந்தமிழ் நாடென்ற போதினிலே - இன்பத் - தேன் வந்து பாயுது காதினிலே - எங்கள் - தந்தையர் நாடென்ற பேச்சினிலே - ஒரு - சக்தி பிறக்குது மூச்சினிலே": போதினிலே - காதினிலே ; பேச்சினிலே - மூச்சினிலே: இந்தச் சொற்களில் உள்ள இசையைக் கேளுங்கள்."கற்க கசடறக் கற்பவை கற்றபின், நிற்க அதற்குத் தக": இந்தக் குறளின் சொற்களில் உள்ள இசையையும் கவனியுங்கள். வந்த ஒலியே திரும்பத் திரும்ப வந்து ஒழுங்காக அமையும்போது தானாகவே இசை பிறக்கிறது. இப்படிப்பட்ட இசை நம்மை அறியாமலே நாம் பேசும் சொற்களில் அமைந்திருக்கிறது. இதைத்தான் சொல்லின் இசை என்று சொல்கிறோம்.

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@

சொல்லின் கதை/சொல்லின் இலக்கணம்

மண்வெட்டியில் மண்ணை வெட்டுவது இரும்புத் தகடுதான். அதில் உள்ள மரப்பிடி மண்ணை வெட்டவில்லை.ஆனால், மரப்பிடி இல்லாமல் மண்ணை வெட்ட முடியுமா? முடியாது. ஆகவே, மண்வெட்டியில் இரும்புத்தகடும் வேண்டும், மரப்பிடியும் வேண்டும். பயன் இல்லாதது என்று அந்த மரப் பிடியை விடக்கூடாது. சொற்களிலும் அதேபோல் பொருள் உள்ள சொற்களும் உண்டு; பொருள் இல்லாத சொற்களும் உண்டு. பொருள் இல்லாத சொற்கள் என்று சிலவற்றை நீக்கிவிட்டால் நன்றாகப் பேசவும் முடியாது; எழுதவும் முடியாது. மொழி பயன் இல்லாமல் போகும். உதாரணம் பாருங்கள்; 'அண்ணன் தம்பியைக் கண்டான்' என்பது ஒரு வாக்கியம். அந்த வாக்கியத்தில் மூன்று சொற்கள் உள்ளன.அண்ணன், தம்பி, கண்டான் என்பவை அந்த மூன்று சொற்கள். அந்த மூன்று சொற்களுக்கும் பொருள் உண்டு. ஆனால், 'தம்பியை' என்பதில் உள்ள 'ஐ' என்பது என்ன? அதற்குப் பொருள் உண்டா? 'ஐ' என்றால் யானையா, பூனையா? பெயரா? வினையா? ஒன்றும் சொல்ல முடியாது. அப்படியானால் பயன் இல்லாதது என்று அதை விட்டுவிடலாமா? அதுவும் முடியாது, விட்டுவிட்டால்,'அண்ணன் தம்பி கண்டான்' என்று சொல்லவேண்டும். அப்படிச் சொல்லும்போது,யார் யாரைக் கண்டார் என்பது தெரியவில்லை. பேசியும் பயன் இல்லாமல் போகிறது: எழுதியும் பயன் இல்லாமல் போகிறது. ஆகவே, இன்னது

என்று தெரியாத அந்த 'ஐ' கட்டாயம் வேண்டியதாக இருக்கிறது. இதுவும் ஒரு சொல்தான். இதுபோன்ற எத்தனையோ சொற்கள் மொழிக்குப் பயன்படுகின்றன. இவற்றை எல்லாம் இடைச்சொல் என்று சொல்வார்கள். இவற்றைக் கற்றுக்கொடுக்கும் பாடம் இலக்கணம் என்று சொல்லப்படும்.

ஆனால், இலக்கணம் என்ற பெயரைக் கேட்டால், உங்களில் பலர் பயப்படுகிறீர்கள். இலக்கணத்தைப் பற்றிக் கேட்டாலும் பயப்பட வேண்டியதில்லை; கண்டாலும் பயப்படவேண்டியதில்லை. அது நம்மை ஒன்றும் செய்யாது. முன்னோர்கள் இப்படிப் பேசினார்கள், இப்படி எழுதினார்கள் என்று நமக்குத் தெரிவிப்பது இலக்கணம். ஆகவே, அதைத் தெரிந்துகொண்டால் நல்லதுதானே? வீட்டின் எதிரில் பெண் ஒருத்தி கோலம் போடுகிறாள். அவள் தன் கையில் இருக்கும் மாவை அவசரக் கோலமாக அள்ளித் தெளிக்கவில்லை. முன்னமே எண்ணிக்கொண்டு, திட்டமிட்டு, அங்கங்கே புள்ளிகளை வைத்து, பிறகு வளைவுவளைவாகக் கோடுகளை இழுக்கிறாள். அதன் பிறகு பார்த்தால், கோலம் அழகாகத் தெரிகிறது. முன்னமே திட்டம் இட்டுப் பழகாவிட்டால், அவளால் என்ன செய்ய முடியும்? கொண்டுவந்த மாவைக் கண்டபடி கொட்டிவிட்டுப் போகவேண்டியதுதான், கோலம் போடுவதற்கு எப்படித் திட்டம் பயன்படுகிறதோ, அதேபோல் சொற்களைப் பேசுவதற்கும் எழுதுவதற்கும் இலக்கணம் பயன்படுகிறது. ஆனால், இலக்கணம் வேண்டுமே என்று கவலைப் பட்டுக்கொண்டிருக்க வேண்டியதில்லை. மற்றவர்களைப்போல் பேசியும் எழுதியும் பழகிவிட்டால் இலக்கணம் தானே வந்துவிடும். கோலம் போடுகிற பெண் எப்படிப் போடுவது என்று கவலையோடு நிற்பதில்லை. மற்றவர்கள் போடுவதைப் பார்க்கிறாள்.அவர்களைப் போல் தானும் போடுகிறாள். முதலில் கொஞ்சம் தடுமாறுகிறாள். பிறகு, பழகப் பழகத் திறமை பெற்று விடுகிறாள். அதன்பிறகு, அவள் அறியாமலே அவளுடைய கை மாவை எடுத்து அழகான கோலங்களைப் போட்டுவிடுகிறது. அதுபோலவே, நீங்களும் நன்றாகப் பேசவும் எழுதவும் பழகிவிட்டால் உங்களை அறியாமலே இலக்கணத்தில் வல்லவர்கள் ஆகிவிடுவீர்கள்.

இன்னொன்று சொல்கிறேன். படித்தவர்களுக்குத்தான் இலக்கணம் தெரியும் என்று நீங்க்ள் எண்ணிக்கொண்டிருக்கிறீர்கள். அது தவறு. படிக்காத மக்களும் பேசுகிறார்கள் அல்லவா? ஆகவே, அவர்களுக்கும் இலக்கணம் தெரியும். "அண்ணனும் தம்பியும் வந்தான்" என்று படிக்காதவர்கள் யாராவது பேசுகிறார்களா? "அண்ணனும் தம்பியும் வந்தார்கள்" என்றுதான் அவர்களும் பேசுகிறார்கள். "நாளைக்கு வந்தேன்","நேற்று வருவேன்" என்று படிக்காதவர்களிடம் சொல்லிப் பாருங்கள். அவர்கள் சிரிப்பார்கள். "மரம் விழுந்தான்", அவர்கள் வந்தது என்று சொல்லிப் பாருங்கள். "உங்களுக்குத் தமிழே தெரியவில்லை" என்று சொல்லிவிடுவார்கள். திணை, பால், எண், இடம் முதலான இலக்கணங்கள் உங்களுக்கு மட்டும் தெரியும் என்று

எண்ணிக்கொண்டிருக்கிறீர்கள். அவர்களுக்கும் தெரியும். அதனால்தான் நீங்கள் பிழையாகப் பேசினால் அவர்கள் சிரிக்கிறார்கள்.

உண்மையைச் சொல்லப்போனால், இலக்கணத்தில் சில பகுதிகள், படித்தவர்களைவிடப் படிக்காதவர்களுக்கு நன்றாகத் தெரியும். இலக்கணம் அறிந்தவர்கள் சைக்கில் விடுகின்றவர்களைப் போன்றவர்கள் சைக்கில் செய்கின்றவர்களைவிடச் சைக்கில் விடுகின்றவர்களுக்கு அதனுடைய அருமை பெருமைகள் நன்றாகத் தெரியும். உதாரணம் சொல்லட்டுமா? படித்தவர்களில் சில பேர் எழுதும்போது, "அப்போது ஒருவள் வந்தாள்" என்று எழுதுகிறார்கள். 'ஒருவள்' என்னும் சொல், தமிழில் இல்லாத சொல்; தவறான சொல். நாட்டுப்புறத்து மக்கள் யாரும் 'ஒருவள்' என்று பேசவே மாட்டார்கள். இது படித்தவர்கள் சிலர் செய்யும் தவறு. உதாரணம் இன்னொன்று பாருங்கள், படிக்காதவர்கள் பேசும் போது,'முயற்சி செய்கிறான்' என்றுதான் பேசுகிறார்கள். படித்தவர்கள் சிலர் பேசும்போதும் எழுதும்போதும் 'முயற்சிக்கிறான்' என்று குறிப்பிடுகிறார்கள். அதுவும் தமிழுக்கு ஒத்துவராத பிழையான சொல்தான். இப்படி எத்தனையோ உதாரணம் சொல்லலாம்.

"படிக்காதவர்களுக்கும் இலக்கணம் தெரிகிறதே, அது எப்படி?" என்று நீங்கள் கேட்கலாம். பலரும் பேசிப் பேசி, இந்தச் சொல்லை இன்ன இடத்தில் இப்படித்தான் வழங்கவேண்டும் என்று ஓர் அமைப்பு ஏற்பட்டு விடுகின்றது. அந்தச் சொற்களைப் பேசக் கற்றுக்கொள்ளும்போதே, அவற்றின் அமைப்பும் மனத்தில் பதிந்துவிடுகின்றது. அந்த அமைப்புத்தான் இயற்கையான இலக்கணம். 'அவர்கள்' என்னும் சொல் பலரைக் குறிக்கின்றது. அதோடு வினைச்சொல்லைச் சேர்க்கும்போது, பலரை உணர்த்தும் வினைச்சொல்லையே சேர்க்கிறார்கள். அதனால்தான் 'அவர்கள் வந்தது' என்று சொல்லாமல்,'அவர்கள் வந்தார்கள்' என்று சொல்கிறார்கள்.

இவற்றை எல்லாம் தெளிவுபடுத்துவதற்குத்தான் இலக்கணம் எழுதியிருக்கிறார்கள். திணை, பால், எண், இடம், வேற்றுமை, காலம், முற்று, எச்சம், எழுவாய், பயனிலை முதலான பெயர்களைவைத்துச் சொற்களின் இலக்கணத்தை ஆராய்கின்றார்கள். எழுவாயின் திணைபால், பயனிலையின் திணை பாலோடு ஒத்திருக்கவேண்டும் என்றும், இன்ன வேற்றுமை உருபு இப்படி முடியவேண்டும் என்றும், எச்சம் இவ்வாறு முற்றோடும் பெயரோடும் முடியவேண்டும் என்றும் பலவாறு விரிவாக எழுதியிருக்கிறார்கள். இவற்றை எல்லாம் கற்றுக்கொண்டால் நல்லதுதான். சைக்கில் ந்ன்றாக ஓட்டக் கற்றுக் கொண்டவன், சைக்கில் எப்படிச் செய்கிறார்கள் என்றும் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறான் அல்லவா? அதுபோல், நீங்கள் பேசியும் எழுதியும் பழகிய தமிழ்ச்சொறகள் என்ன இலக்கணத்தோடு அமைந்திருக்கின்றன என்று தெரிந்து கொள்ள ஆசைப்படுங்கள். ஒவ்வொரு மொழிக்கும் இலக்கணம் ஒவ்வொரு வகையாக இருக்கும்.மொழிகளை ஒப்பிட்டுப் பார்க்கும்போது எவ்வளவோ வேடிக்கையான உண்மைகள் எல்லாம் தோனறும்.

அவைகள் இருக்கட்டும். குழந்தைகள் பேசுகிற பேச்சையும் நாம் பேசுகிற பேச்சையும் ஒப்பிட்டுப்பாருஙகள். நாம் 'எனக்கு' என்று சொல்கிறோம். குழந்தை 'நானுக்கு' என்று சொலகிறது. நாம் 'உனக்கு' என்று சொல்வதை குழந்தை 'நீக்கு' என்று சொல்கிறது. அதே குழந்தை வளர்ந்த பிறகு, நானுக்கு நீக்கு முதலான சொற்கள் தவறானவை என்று தெரிந்து கொள்கிறது. மற்றவர்கள் 'எனக்கு, உனக்கு' என்று பேசுவதைக் கவனிக்கிறது. தன்னைத்தானே திருத்திக்கொள்கிறது.பிறகு, நம்மைப் போலவே 'எனக்கு, உனக்கு' என்று தவறு இல்லாமல் பேசுகிறது.அந்தத் தவறு எப்படித் திருந்தியது? இலக்கணம் படித்து அதனால் திருந்த வில்லை. மற்றவர்கள் பேசுவதைக் கேட்டு அவர்களைப் போல் பேசி மதிப்புப் பெற வேண்டும் என்ற ஆசையால் திருந்தியது. சின்ன குழந்தை தலைமயிரைச் சரியாக வாரிக்கொள்வ தில்லை. முகத்தையும் நன்றாகக் கழுவிக்கொள்வ தில்லை. ஆனால் வளர்ந்த பிறகு, மற்றவர்கள் ஒழுங்காக அழகுபடுத்திக்கொள்வதைப் பார்த்துத் தானும் தலைமயிரை வாரிக்கொள்கிறது; முகத்தையும் அழகு படுத்திக் கொள்கிறது. மற்றவர்களைப் போல் ஒழுங்காக, மதிப்போடு வாழவேண்டும் என்ற பழகிய தமிழ்ச் சொற்கள் என்ன இலக்கணத்தோடு அமைந்திருக்கின்றன என்று தெரிந்துகொள்ள ஆசைப்படுங்கள். ஒவ்வொரு மொழிக்கும் இலக்கணம் ஒவ்வொருவகையாக இருக்கும். மொழிகளை ஒப்பிட்டுப் பார்க்கும்போது எவ்வளவோ வேடிக்கையான உண்மைகள் எல்லாம் தோன்றும்.

அவைகள் இருக்கட்டும். குழந்தைகள் பேசுகிற பேச்சையும் நாம் பேசுகிற பேச்சையும் ஒப்பிட்டுப் பாருங்கள். நாம்'எனக்கு' என்று சொல்கிறோம். குழந்தை' நானுக்கு' என்று சொல்கிறது. நாம் 'உனக்கு' என்று சொல்வதைக் குழந்தை'நீக்கு' என்று சொல்கிறது. அதே குழந்தை வளர்ந்த பிறகு, 'நானுக்கு' 'நீக்கு' முதலான சொற்கள் தவறானவை என்று தெரிந்துகொள்கிறது. மற்றவர்கள் 'எனக்கு, உனக்கு' என்று பேசுவதைக் கவனிக்கிறது. தன்னைத் தானே திருத்திக்கொள்கிறது. பிறகு, நம்மைப் போலவே 'எனக்கு, உனக்கு' என்று தவறு இல்லாமல் பேசுகிறது. அந்தத் தவறு எப்படித் திருந்தியது? இலக்கணம் படித்து அதனால் திருந்தவில்லை. மற்றவர்கள் பேசுவதைக் கேட்டு அவர்களைப் போல் பேசி மதிப்புப் பெறவேண்டும் என்ற ஆசையால் திருந்தியது. சின்ன குழந்தை தலை மயிரைச் சரியாக வாரிக்கொள்வ தில்லை. முகத்தையும் நன்றாகக் கழுவிக்கொள்வ தில்லை. ஆனால், வளர்ந்த பிறகு, மற்றவர்கள் ஒழுங்காக அழகுபடுத்திக்கொள்வதைப் பார்த்துத் தானும் தலைமயிரை வாரிக்கொள்கிறது; முகத்தையும் அழகு படுத்திக்கொள்கிறது. மற்றவர்களைப் போல் ஒழுங்காக, மதிப்போடு வாழ வேண்டும் என்ற ஆசைதான் அதற்குக் காரணம். சொற்களைப் பேசும்போதும், இந்த ஆசைதான் திருத்தமாகப் பேசச் செய்கிறது. அதனால்தான் சொற்களின் இலக்கணம் மக்களுக்கு இயல்பாகத் தெரிந்ததாகி விடுகிறது.

சொற்களின் இலக்கணத்தைப் பொறுத்த வரையில், இன்னொன்று கவனிக்கவேண்டும். குழந்தைகளின் பேச்சில் தவறு உண்டு என்றும்,வளர்ந்த மக்களின் பேச்சில் தவறு இல்லை என்றும் சொல்லிவிட முடியாது. அவர்-

அவர்க்கு,இவர்-இவர்க்கு, தாய்-தாய்க்கு என்பவை போல, நீ-நீக்கு, நான்-நானுக்கு என்று சொல்லவேண்டும். அதுதான் பொருத்தம். குழந்தை ஒன்று பேசும்போது பிழை கண்டு பிடிக்கிறோம். உனக்கு,எனக்கு என்று சொல்லித் திருத்துகிறோம். உண்மையாகப் பார்த்தால், உனக்கு,எனக்கு என்ற சொற்கள் தவறாக மாறிவிட்ட சொற்கள் என்பதை உணரலாம். ஆஙகில நாட்டிலும் 'கோ' (go), பய்(buy) முதலான சொற்களின் இறந்த காலமாக வெண்ட் (went), பாட்(bought) என்று சொல்லாமல் கோய்ட்(goed), பய்ட்(buyed) என்று ஆங்கிலேயக் குழந்தைகள் பேசுகின்றனவாம். வளர்ந்த மக்கள் பேசும் வெண்ட்,பாட் என்னும் சொற்கள் ஒழுங்கு இல்லாமல் தோன்றியபோதிலும், அவை களையே குழந்தைகளும் கற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. 'வல்லான் வகுத்ததே வாய்க்கால்.' செல்வாக்கு உள்ளவர்கள் பேசும் சொறகளே சொற்கள். கஜக்கோல்,படி முதலியவை போலச் சொற்களின் இலக்கணத்தை அளந்து தரக்கூடிய பொதுவான கருவி ஒன்று இல்லை. இங்கே, பெரும்பாலோர் இட்டதே சட்டம்.அதைத்தான் ‘மரபு' என்று சொல்கிறார்கள். இது இலக்கணத்தில் ஒரு முக்கியமான பகுதி. நாய்க்கன்று, பசுக்குட்டி என்று சொல்லாமல் நாய்க்குட்டி, பசுங்கன்று என்று சொல்லியாகவேண்டும்.

இப்படிச் சொற்களின் இலக்கணத்தில் எவ்வளவோ கற்றுக்கொள்ள வேண்டியவை உள்ளன. ஆனால் நீங்கள் அஞ்சவேண்டியதில்லை. கற்றவர்கள் பேசுவதைப் பார்த்துப் பேசுங்கள்; கற்றவர்கள் எழுதுவதைப் பார்த்து எழுதுங்கள். உங்களை அறியாமலே இலக்கணம் உங்கள் மனத்தில் பதிந்துவிடும்.

@@@@@@@@@@@@@@@@@@

சொல்லின் கதை/இடப்பேச்சுக்களும் கொச்சைமொழிகளும்

தஞ்சாவூரிலிருந்து சென்னைக்குப் புதியவராக வந்தார் ஒருவர். ஒரு கடைக்கு போனார். ஒரு பொருளைக் காட்டி, “இது என்ன விலை அய்யா?” என்றார். கடைக்காரனுக்குக் கோபம் வந்தது. “என்ன அப்பா, பெரிய சீமான் என்று நினைத்துக்கொண்டு பேசுகிறாயோ?” என்றான். தஞ்சாவூராக்கு ஒன்றுமே விளங்கவில்லை. பேசாமல் நின்றார். அவருக்கும் கோபம் வந்தது. சிறிது அமைதிக்குப் பிறகு கடைக்காரன் அவரைப் பார்த்து, “மனிதனுக்கு மனிதன் சமமாக எண்ணிப் பேசு அப்பா. அய்யா கிய்யா என்று இப்படிப் பேசுகிறாயே?” என்றான். பக்கத்திலிருந்த ஒருவர் அப்போது குறுக்கே வந்து தஞ்சாவூர்க்காரரைப் பார்த்து, “நீங்கள் வெளியூர்க்காரர்போல் தெரிகிறது. இங்கே அய்யா என்று கூப்பிட்டால் கோபம் வரும். அப்படிப் பேசாதீர்கள்” என்றார். உடனே தஞ்சாவூர்க்காரர் இவரைப் பார்த்து, “கடைக்காரர்மட்டும்

என்னை அப்பா கிப்பா என்று ஒருவகையாகப் பேசுகிறாரே அதுமட்டும் தகுமா?" என்றார். அப்போதுதான் ஒருவர்கொருவர் கொண்ட கோபத்தின் காரனம் விளங்கியாது.

தஞ்சாவூர் தமிழ்நாட்டில் உள்ள நகரம். சென்னை தமிழ்நாட்டின் தலைநகரம்.அப்படி இருந்தும், 'அய்யா' என்றால் சென்னைத் தமிழர்க்குக் கோபம் வருகிறது. 'அப்பா' என்றால் தஞ்சாவூர்த் தமிழர்க்குக் கோபம் வருகிறது. இருவரும் பேசுவது ஒரே மொழியாக இருந்தபோதிலும், இப்படி இடத்துக்கு இடம் பேச்சில் வேறுபாடு இருப்பதைக் காணலாம்.

திருநெல்வேலியில்,"ஒரு குவளையில் குடிக்கத் தண்ணீர் கொண்டுவா" என்பார்கள்;"வாளியால் தண்ணீர் கொண்டுவா""என்பார்கள். வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு,செஙகல்பட்டு ஆகிய ஜில்லாக்களில் வாழும் தமிழர்களுக்குக் 'குவளை' என்றாலும் தெரியாது; 'வாளி' என்றாலும் தெரியாது. 'டம்ளர்', 'பக்கெட்' என்று ஆங்கிலச்சொற்களைச் சொன்னால்தான் தெரியும். தமிழ் நாட்டின் தெற்குப் பகுதியில் குடிநீர்க்குப் பயன்படும் நீர் நிலையை 'ஊருணி' என்று சொல்வார்கள், வயல்களில் பயிருக்குப் பயன்படுமாறு நீர் தருவதைக் குளம் என்று சொல்வார்கள். மற்றப் பகுதிகளில் குடிதண்ணீர் தருவதைக் குளம் என்றும், பயிருக்குப் பயன்படுவதை ஏரி என்றும் சொல்வார்கள். இப்படி இடத்துக்கு இடம் சில சில சொற்கள் வேறு வேறு பொருளில் பேசப்படுவதைக காணலாம். நூற்றுக்கு 90,95 சொற்கள் எல்லா இடங்களுக்கும் பொதுவாக ஒத்திருக்கும். ஆனால், நூற்றுக்கு 10 அல்லது 5 சொற்கள் வெவ்வேறாக இருக்கும். இப்படி வெவ்வேறாக உள்ள சொற்களை என்ன என்று சொல்வது? அவைகளையே இடப்பேச்சுக்கள்(dialects) என்று சொல்வார்கள்.

ஒரு மலைக்கு இந்தப் பக்கம் ஓர் ஊரும் அந்தப் பக்கம் ஓர் ஊரும் இருப்பதாக வைத்துக்கொள்ளுங்கள். இரண்டு ஊரிலும் உள்ளவர்கள் ஒரே மொழி பேசுகின்றவர்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். நாளடைவில் இவர்களுடைய பேச்சில் ஒற்றுமை இருந்த போதிலும் சில வேறுபாடுகள் அமைந்து விடும். இதற்குக் காரணம் அந்த ஊர்களுக்கு இடையில் மலை நின்று போக்குவரவுக்குத் தடையாய்ப்பிரித்த பிரிவே ஆகும். ஆறு முதலியவைகளாலும் இப்படிப் பிரிவு ஏற்பட்டு, இடப்பேச்சு வேறு வேறாக அமைவது

உண்டு. ஒரு ஜில்லாவுக்கும் மற்றொரு ஜில்லாவுக்கும் உள்ள பேச்சிலும் இப்படியே இடம் காரணமாக வேறுபாடு ஏற்படும்.

மலையாள மொழி ஒரு காலத்தில் தமிழாகவே இருந்ததுதான். ஆனால், மேற்குத் தொடர்ச்சிமலை பிரித்தபடியாலும், அரசாங்கம் வேறாக இருந்ததாலும், அந்த நாட்டு மக்கள் பேசும் பேச்சு மெல்ல மெல்ல மாறிவிட்டது. நூற்றுக்கு ஐந்து பங்காக இருந்த வேறுபாடு நூற்றுக்கு ஐம்பதாக ஆகிவிட்டது. அதனால் அங்கே தமிழ் மறைந்து வேறு தனிமொழியாக ஏற்பட்டுவிட்டது. இடப் பேச்சாக உள்ள ஒரு மொழியின் பிரிவு, நாளைடைவில் இப்படி வேறொரு மொழியாகவே மாறுவது உண்டு. தெலுங்கும் கன்னடமும் ஒரு காலத்தில் இப்படி இடப்பேச்சுக்களாக இருந்து மாறி ஏற்பட்டவைதான். நாம் இப்போது தமிழ்நாட்டில் பேசும் பேச்சும் ஒருவகையாக இல்லை. ஆனால், புத்தகங்கள், பத்திரிகைகள், வானொலி முதலிய காரணங்களால், எல்லாப் பகுதிகளுக்கும் பொதுவான தமிழ் ஒன்று இருந்துவருகிறது. அதனால் தமிழர் ஓர் இனமாய்ப் பழகமுடிகிறது.

இவ்வாறு, இடப்பேச்சு ஏற்படுவதற்கு இடம் காரணமாக இருப்பது தவிர, வேறு சில காரணங்களும் உண்டு. வியாபாரிகள் பேசுகின்ற பேச்சில் சில தனிப்பண்புகள் உண்டு. வழக்கறிஞர்கள் சட்டத்தில் பழகிப் பேசும் பேச்சில் சில வேறுபாடுகள் உண்டு. சமயத்துறையிலும் இப்படிப்பட்ட இடப்பேச்சுக்களைக் காணலாம். சைவர், வைணவர், கிறிஸ்தவர், முகமதியர் எல்லோரும் தமிழரே ஆனபோதிலும், இவர்களின் சமயத்துறையில் வெவ்வேறு சொற்கள் பேசப்படுகின்றன. பதி, பசு என்றால் சைவர்களுக்குப் பொருள் வேறு. அமுது, திருவடி என்பவற்றை வைணவர்கள் குறிப்பிட்ட பொருளீல் வழங்குகிறார்கள். இவைகளும் இடப் பேச்சுக்களே. அரசியல் வைத்தியம் முதலிய மற்றத்துறையிலும் இடப்பேச்சுக்களைக் காணலாம். உதாரணம் பாருங்கள்: பொதுவான தமிழில் 'வரவு' என்றால் வருதல் என்று பொருள். 'செலவு' என்றால் செல்லுதல் என்று பொருள். ஆனால் வியாபாரிகள் பேச்சில் 'வரவு', 'செலவு' என்றால் வந்த பணம், செலவான பணம் என்று பொருள். உங்களுக்கு நன்றாகத் தெரிந்த வேறு உதாரணங்கள் கேளுங்கள்: பொதுவான தமிழில் 'பெயர்' என்றால் என்ன என்று உங்களுக்குத் தெரியும். ஆனால், இலக்கணத்தில் 'பெயர்' என்றால், நால்வகைச் சொல்லில் ஒருவகை என்று அறிவீர்கள். 'வினை' என்றால், பொதுவான தமிழில், தொழில்,செயல், வேலை

என்று பொருள்படும். ஆனால் சமயத்துறையில் 'வினை' என்றால், ஊழ்வினை என்று பொருளாகிறது. இலக்கணத்தில் 'வினை' என்றால், ஒரு வகைச்சொல்லைக் குறிக்கிறது. இப்படியே ஒவ்வோர் இடத்திலும் ஒவ்வொரு துறையிலும், சில சொற்கள் வெவ்வேறாகப் பொருள் உணர்த்தக் காண்கிறோம். இவைகளே இடப்பேச்சுக்கள்.

இலங்கையில் உள்ள தமிழர்கள் பேசுவதும் தமிழே. ஆனால் இடப்பேச்சாக அவர்களின் தமிழிலும் சில வேறுபாடுகள் உண்டு. ஓய்வாக என்று நாம் சொல்வதை அவர்கள் 'ஆறுதலாக' என்பார்கள். ஆறுதலாக என்றால் நமக்குப் பொருள் வேறு. 'நாங்கள்' என்பது தன்மைப் பன்மையான சொல். அதில் எதிரில் உள்ளவர்களைச் சேர்த்துப் பேசும் கருத்து இல்லை. 'நாம்' என்பது அப்படி அல்லாமல், எதிரில் உள்ளவர்களையும் சேர்த்துப் பேசும் கருத்து உடையது. ஆனால் இலங்கைத் தமிழில், 'நாங்கள்' என்பதே வழங்குகிறது. அதற்கு நாம் என்பதே பொருளாக உள்ளது.

இடப்பேச்சுக்களில், சொற்கள் வேறுபொருள் உணர்த்துவது மட்டும் அன்று. வேறு வேறு வகையாகவே ஒலிக்கப்படுவதும் உண்டு. 'வாழைப்பழம்' என்பதைச் சில இடங்களில் 'வாயப்பழம்' என்று ஒலிக்கிறார்கள். வேறு சில இடங்களில் 'வாளப்பளம்' என்கிறார்கள். இப்படி ஒலி வேறுபடுவதும் இடப் பேச்சாகவே கொள்ள வேண்டும். நிரம்ப நல்லவர் என்பதைச் சில இடங்களில் 'ரொம்ப நல்லவர்' என்பார்கள். சில இடங்களில் 'ரம்ப நல்லவர்' என்பார்கள்.

தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர் பேசும் சொற்கள் ஒருவகையாக ஒலிக்கப்படும். சாதியை ஒட்டித் தொழில் அமையும் இடங்களில், ஒவ்வொரு சாதியும் வெவ்வேறு வகையாக ஒலிப்பது உண்டு. 'இருக்குது' என்று சிலர் பேசுவார்கள். 'இருக்கு' என்று சிலர் சொல்வார்கள். 'கீது' என்று சிலர் ஒலிப்பார்கள். இவைகளும் இடப்பேச்சுக்களில் சேர்க்கப்பட வேண்டியவைகளே. இவைகளில் எவ்வளவோ தவறுகள் உண்டு. ஒவ்வொரு வகையார் ஒவ்வொரு வகையான தவறு செய்வார்கள்.

புத்தகங்களில் உள்ளபடி சொற்களை ஒலிக்காமல், வெவ்வேறு வகையாகக் குறைத்தும் மாற்றியும் ஒலித்தால் அவைகள் கொச்சை ஒலிகள் என்று கூறப்படும். 'ஏன் அடா', 'மூன்று' முதலியவைகளை 'ஏண்டா', 'மூணு' என்றெல்லாம் ஒலிப்பது கொச்சையே ஆகும்.

'வந்தது', 'போனது', இழுத்துக்கொண்டு' முதலான சொற்களை 'வந்துச்சி', 'போச்சி', 'இசுத்துக்கினு' என்று கொச்சையாக ஒலிப்பார்கள். இந்தக் கொச்சை ஒலிகளில் சில படிப்படியாகச் செல்வாக்குப் பெற்று நல்ல மொழியாக மாறிவிடுவதும் உண்டு.பாய்கிறது என்பதைப் பாயுது என்றும், பிறக்கிறது என்பதைப் பிறக்குது என்றும் பாரதியார் பாட்டில் கேட்கிறோம் அல்லவா? இவைகளை இலக்கணத்தில் மரூஉ என்று குறிப்பிடுவார்கள். ஆனால் நாகரிகம் குறைந்த தாழ்வான மக்கள் பேசும் பேச்சின் ஒலிகள் இவ்வாறு மரூஉ என்று கொள்ளப்படுவதில்லை. உயர்ந்தவர்கள் - பெரும்பான்மையோர் - கொச்சையாக ஒலிக்கும் ஒலிகளே நாளடைவில் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

இந்தக் கொச்சைத் தன்மை சொற்களின் ஒலியில் ஏற்படாமல், சொற்களின் பொருளில் ஏற்பட்டால், அவைகள் கொச்சைமொழிகள் (slang) எனப்படும். "பணம் இருந்தால் நடக்கும்" என்று ஒருவன் சொல்ல விரும்புகிறான். ஆனால் அப்படிச்சொல்வதில் புதுமை இல்லை, சுவை இல்லை; ஆகையால் கேட்போரின் கருத்தைக் கவர்வதற்காக அவன் என்ன சொல்கிறான் தெரியுமா? எல்லோரும் நெடுங்காலமாகச் சொல்லி வந்த 'பணம்' என்னும் சொல்லைச் சொல்வதில்லை. அந்தச் சொல்லால் பயன் குறைவு என்று உணர்ந்து, அதற்குப் பதில் 'வெள்ளையப்பன்' என்கிறான். "வெள்ளையப்பன் இருந்தால் நடக்கும்" என்று அவன் மாற்றிச் சொல்லும்போது கவர்ச்சியாக இருக்கிறது. "அடி கொடுப்பேன்", "உதை கொடுப்பேன்" என்று சொல்லாமல், "பூசை கொடுப்பேன்" என்று சொல்லும்போது புதுமையின் கவர்ச்சி இருக்கிறது. வியாபாரத்தில் நஷ்டமாகிவிட்டது என்னும்போது, "மொட்டையாய் விட்டது" என்று சொல்வதும் அப்படியே. பரீட்சையில் தவறிவிட்டான் என்று சொல்லாமல் "பரீட்சையில் கோட் அடித்தான்", "பல்டி போட்டான்" என்று சொல்வதும் அப்படியே. உணவு விடுதியை ஓட்டல் என்று சொல்லாமல் "மாமியார் வீடு" என்று கூறுவதும் அந்த வகையே ஆகும்.

ஆனால், இப்போது சொன்ன இந்தப் புதுச்சொற்களைப் பாருங்கள். இவைகளை இடப்பேச்சுக்கள் என்று சொல்ல முடியாது. இடப் பேச்சாக இருந்தால், ஒரு ஜில்லாவில், அல்லது ஓர் ஊரில், அல்லது ஒரு துறையில், அல்லது ஒரு கூட்டத்தாரிடத்தில் வழங்க வேண்டும். ஆனால் 'வெள்ளையப்பன்', 'பூசை', 'மொட்டை', 'மாமியார் வீடு'

முதலானவை ஒரு குறிப்பிட்ட இடத்தில் அல்லது துறையில் பேசப்படுகின்றவை அல்ல. பழக்கப்பட்டுப்போன பழஞ் சொற்களுக்குப் புதிய உயிர், புதிய கவர்ச்சி தரவேண்டும் என்று நினைக்கிறவர்கள் எல்லாரும் இந்தச் சொற்களைப் பேசுகிறார்கள். ஆகையால் இவைகள் இடப்பேச்சில் அடங்காமல், கொச்சைமொழிகள் என்று குறிக்கப்படும். இடப்பேச்சுக்களைப் பேசுகின்றவர்கள், வேறு பாடுகளை அறியாமலே பேசுகின்றார்கள். அவர்களை அறியாமலே ஊருக்கு ஊர், துறைக்குத் துறை, கூட்டத்துக் கூட்டம் சொற்கள் மாறியிருக்கின்றன. ஆனால், மேலே குறிக்கப்பட்ட கொச்சைமொழிகள் அப்படிப்பட்டவை அல்ல. பேசுவோர் தாங்களாகவே புதுமையாகப் படைத்துப் பேசுகின்ற சொற்களாகும். இடப்பேச்சுக்கள், இயல்பாக மக்களிடையே ஏற்படுகின்றவை. கொச்சைமொழிகள், மக்கள் வேண்டும் என்றே கவர்ச்சிக்காக ஏற்படுத்துகின்றவை. ஆகையால் அவைகள் வேறு, இவைகள் வேறு.

கொச்சைமொழிகளை முதலில் பேசுகின்றவர்கள் யார்? ஒரு கூட்டத்தார் அல்லது ஓர் இடத்தார் அல்ல. கவர்ச்சியிலும் புதுமையிலும் ஈடுபட்டவர்கள் யாரோ, அவர்களே இப்படிக் கொச்சை மொழிகளைப் பேசத்தொடங்குகிறார்கள். அவர்கள் பெரும்பாலும் இளைஞர்களே. வாழ்க்கையில் விளையாட்டு உணர்ச்சி உடைய இளைஞர்களே இப்படிப் புதிய கவர்ச்சியான சொற்களைப் படைத்துப் பேசுகின்றார்கள். இவற்றைப் படைப்பதில் ஒருவகை இன்பம் இருக்கின்றது. கேட்பதில் ஒரு வகையான ஊக்கம் இருக்கின்றது. அதனால் இந்தச்சொற்கள் வேகமாக மக்களிடையே பரவுகின்றன. சில சொற்கள் மிகவும் இழிவான, மட்டமான போக்கில் அமைந்துவிடும். அப்படி அமையாமல் காத்துக்கொண்டால், இவற்றை யாரும் வெறுக்க மாட்டார்கள்.

ஆனால் ஒன்று, இடப்பேச்சுக்கு நீண்ட வாழ்வு உண்டு. கொச்சைமொழிகள் நெடுங்காலம் வாழ்வதில்லை.காரணம் தெரியுமா? இன்று, கவர்ச்சியான புதுமை வேண்டும் என்று "அவனுக்குப் பூசை விழுந்தது" என்கிறார்கள். இதையே பலமுறை பல ஆண்டுகள் சொல்லிப் பழகிவிட்டால் கவர்ச்சியும் புதுமையும் இல்லாமற் போகின்றன. பழக்கம் எதையும் எப்படிப்பட்டதையும் பழையதாக்கிவிடும் அல்லவா? நேற்றுப் புதிதாக இருந்த சொல், இன்று பழைய சொல் ஆகிவிட்டால், நாளைக்கு வேறொரு புதுச்சொல்

வேண்டியதாக ஏற்படுகிறது. இந்த நிலையில், அந்தப் பழைய சொல் மறந்து கைவிடப்படுகிறது. அதனால்தான், கொச்சைமொழிகள் நீண்ட காலம் வாழமுடியாமல் அவ்வப்போது மறைந்து போகின்றன.

(😊)(😊) (😊)(😊)

அகல் விளக்கு

ஆசிரியர் *மு. வரதராசன்*

https://ta.wikisource.org/wiki/%E0%AE%85%E0%AE%95%E0%AE%B2%E0%AF%8D_%E0%AE%B5%E0%AE%BF%E0%AE%B3%E0%AE%95%E0%AF%8D%E0%AE%95%E0%AF%81

{முழு நூல்}

மு.வ எனச் சுருக்கமாக அழைக்கப்பட்ட மு. வரதராசன் (ஏப்ரல் 25, 1912 - அக்டோபர் 10, 1974) 20ஆம் நூற்றாண்டின் புகழ் பெற்ற தமிழ் அறிஞர்களுள் ஒருவர். இலக்கியக் கட்டுரைகள், ஆராய்ச்சி நூல்கள் போன்றவை மட்டுமன்றிப் பல சிறுகதைகள், புதினங்கள் போன்றவற்றையும் எழுதியுள்ளார்.

இந்தப் புதினத்திற்கு 1963 ஆம் ஆண்டுக்கான இந்திய அரசின் சாகித்திய அகாதமி விருது கிடைத்தது.



பேராசிரியப் பெருந்தகை

மு.வரதராசன்

https://mutiru-tamilpani.blogspot.com/2011/01/blog-post_1337.html



25-04-1912-10.10.1974

மு.வரதராசன்,வட ஆர்க்காடு மாவட்டம் வேலம் என்னும் சிறிய கிராமத்தில் முனு சாமி முதலியார் - அம்மாக்கண்ணு தம்பதிக்கு 25-04
1912ல் பிறந்தார். திருவேங்கடம் என்று பெயரிடப்பட்டு அழைக்கப்பட்டாலும் தாத்தாவின் பெயரான வரதராசன் என்ற பெயரே அவருக்கு நிலைத்து விட்டது.

1948ல் சென்னை பல்கலைக்கழகத்தின் மூலம் "சங்க இலக்கியத்தில் இயற்கை" என்ற தலைப்பில் ஆராய்ச்சி செய்து முனைவர் பட்டம் பெற்றார். சென்னைப் பல்கலைக்கழகத்தின் மூலம் முதல் முதலாக முனைவர் பட்டம் பெற்ற பெருமைக் குரியவர் மு.வ. 1939ல் பச்சையப்பன் கல்லூரியில் சேர்ந்த மு.வ. 1961 வரை அங்கு பணியாற்றினார்.1961 முதல் 1971 வரை சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறைத் தலைவராகப் பணியாற்றினார்.
பின்னர் 1971ல் மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தராகப் பொறுப்பேற்றார்.

நாவல்கள், சிறுகதைகள், சிறுவர் நூல்கள் நாடகங்கள், கட்டுரைகள், தமிழ் இலக்கிய நூல்கள், பயணக் கட்டுரை போன்றவற்றை தமிழுக்குத் தந்துள்ளார் பெர்னாட்ஷா திரு.வி.க. காந்தியடிகள் இரவீந்திரநாத் தாகூர் ஆகியோரது வாழ்க்கை வரலாறுகளை நூல்களாக வடித்துள்ளார்.

இவரது திருக்குறள் தெளிவுரையை சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் நூற்றுக்கம் மேற்பட்ட பதிப்புகள் வெளியிட்டு பெருமை தேடிக்கொண்டுள்ளது.

"மு.வ.எழுதிய நூல்களில் கி.பி.2000(சிந்தனைக் கதை) ஒரு தனிச் சிறப்புடையது. இதில் மு.வ.வின் இன்றைய நினைவும்,நாளைய கனவும் உள்ளன.

புதினங்களில் பண்டைத் தமிழ் இலக்கியங்களை அறிமுகப்படுத்துவதில் மு.வ. த னித்து நின்றார். பழமைக்கும் புதுமைக்கும் பாலமாய்த் திகழ்ந்தார்.

மு.வ.வின் "அகல் விளக்கு" எனும் நாவலுக்கு சாகித்ய அகாதெமி விருது கிடைத்துள்ளது."கள்ளோ காவியமோ" என்ற நூலுக்குத் தமிழக அரசின் விருது கிடைத்துள்ளது.

1944ம் ஆண்டு மு.வ. எழுதிய “செந்தாமரை” நாவலை வெளியிட யாரும் முன்வ ராததால், அந்நாவலை அவரே வெளியிட்டார். செந்தாமரை வெற்றிக்குப் பின் 20 ஆண்டு காலம் உழைத்து ஆண்டுக்கு இவ்வளவு நூல்கள் என எழுதி பேரும் புகழு ம் பெற்றார். இந்த இருபது ஆண்டு காலத்தை மு.வ. என்ற எழுத்தாளரின் “பொற்காலம்” என்றே சொல்லலாம்.

மு.வரதராசன் 10.10.1974ல் இறையடி சேர்ந்தார்.

@@@@@@@@@@@@

காலக்கோடு

மு. வரதராசன் (மு.வ.) (1912-1974) 20-ஆம் நூற்றாண்டின் சிறந்த தமிழ் அறிஞர், பேராசிரியர் மற்றும் நாவலாசிரியர் ஆவார். திருப்பத்தூரில் பிறந்த இவர், சென்னை பச்சையப்பன் கல்லூரி மற்றும் சென்னைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றி, மதுரை காமராசர் பல்கலைக்கழகத் துணைவேந்தராக உயர்ந்தார். 'அகல்விளக்கு' நாவலுக்காக சாகித்ய அகாதெமி விருது பெற்றவர்.

மு.வ.வின் முக்கிய காலக்கோடு:

- **1912, ஏப்ரல் 25:** வேலூர் மாவட்டம் திருப்பத்தூர் அருகிலுள்ள வேலம் சிற்றூரில் பிறப்பு.
- **1928:** உயர்நிலைக் கல்வி நிறைவு.
- **பணி: திருப்பத்தூர் தாலுகா அலுவலகத்தில் எழுத்தராகப் பணிபுரிந்தார்.**
- **படிப்பறிவே:** பண்டிதப் பட்டம், எம்.ஏ. (தமிழில்), முனைவர் (Ph.D.) பட்டம் பெற்றார்.
- **1939 - 1961:** சென்னை பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகவும் தமிழ்த்துறைத் தலைவராகவும் பணியாற்றினார்.

- **1961 - 1971:** சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவராகப் பணிபுரிந்தார்.
- **1961:** '**அகல் விளக்கு**' நாவலுக்காக சாகித்ய அகாதெமி விருது பெற்றார்.
- **1971 - 1974:** மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகப் பணியாற்றினார்.
- **1974, அக்டோபர் 10:** காலமானார்.

முக்கியப் படைப்புகள்:

- **நாவல்கள்:** அகல்விளக்கு, கள்ளோ காவியமோ, அரசியல் அலைகள், வாடா மலர்.
- **ஆராய்ச்சி/இலக்கியம்:** தமிழ் இலக்கிய வரலாறு, தமிழ் நெஞ்சம், திருக்குறள் தெளிவுரை.

பழகுதமிழ் நடையில் எழுதிய இவர், 13 நாவல்கள், 6 நாடகங்கள், 2 சிறுகதைத் தொகுப்புகள், 11 கட்டுரைத் தொகுப்புகள் எனப் பல இலக்கியங்களைப் படைத்துள்ளார்.

(😊)(😊)(😊) @@@@@@ (😊)(😊)(😊)





காணொளிகள்

01] **கள்ளோ? காவியமோ?** Mu varadarajan|love|family|tamil audio book

https://www.youtube.com/watch?v=pntZH4Dr4rc [6:26:50]

02] **டாக்டர் மு.வரதராசனார் பிறந்தநாள் விழா கருத்தரங்கம்**

https://www.youtube.com/watch?v=4uYKkueGbuU [2:50:39]

03] Tamil Valartha Sandor - Series - 66 - Thamiluria Thandha Thathuva Aasan K. Vadivelu Chetiyar.

https://www.youtube.com/watch?v=jsNTHIUvKyY [1:29:51]

04] Dr. மு.வரதராசனார்(மு.வ.) எழுதிய "வீண் கனவு" சரித்திர நாடகம்

https://www.youtube.com/watch?v=8Jf3PJAoFTo [37:27]

05] Dr. Mu. Varadarajan

https://www.youtube.com/watch?v=SKb-crtKufc [2:56:30]

06] **மு.வ கடிதம்-1/தம்பிக்கு/மு. வரதராசனார்**

https://www.youtube.com/watch?v=KyIOOREZ-Zc [26:05]

07] **மு.வ கடிதம்-2/ தம்பிக்குமு. வரதராசனார்**

https://www.youtube.com/watch?v=2TVzNbKiNhI [22:30]

(😊)(😊) @@@@@@ (😊)(😊)

காலக்கோடு

டாக்டர் மு. வரதராஜன் (25 ஏப்ரல் 1912 – 10 அக்டோபர் 1974) ஒரு தலைசிறந்த தமிழ் அறிஞர், நாவலாசிரியர் மற்றும் கல்வியாளர் ஆவார். நவீன தமிழ் இலக்கியத்தில் ஒரு மாபெரும் ஆளுமையாகத் திகழ்ந்த இவர், பச்சையப்பா கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றினார், சென்னை பல்கலைக்கழகத்தில் தமிழ் ஆய்வுகளுக்கு முன்னோடியாக

விளங்கினார், மேலும் சாகித்ய அகாடமி விருதையும் வென்று, தனது எளிமையான ஆனால் ஆழமான எழுத்துக்களால் ஒரு அழியாத மரபை விட்டுச் சென்றார்.

மு. வா. அவர்களின் வாழ்க்கையின் முக்கிய மைல்கற்கள்

- **1912 (ஏப்ரல் 25):** சென்னை மாகாணம், வட ஆற்காடு மாவட்டம், வேளத்தில் பிறந்தார்.
- **1939:** சென்னையில் பச்சையப்பா கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகச் சேர்ந்து , தனது கல்விப் பணியைத் தொடங்கினார்.
- **1944:** தமிழ் வினைச்சொல் வளர்ச்சி குறித்த தனது ஆய்வுக்காக, கீழை மொழிகள் முதுகலைப் பட்டத்தைப் (MOL) பெற்றார்.
- **1945:** பச்சையப்பா கல்லூரியில் தமிழ் துறைத் தலைவரானார்.
- **1948:** சென்னைப் பல்கலைக்கழகம் வழங்கிய "சங்க இலக்கியத்தில் இயற்கை" (Sanga InLakkiyaathil Iyarkai) என்ற தலைப்பிலான தனது ஆய்வறிக்கைக்காக முனைவர் பட்டம் பெற்றார். இதன் மூலம் , அப்பல்கலைக்கழகத்தில் இருந்து தமிழ் முனைவர் பட்டம் பெற்ற முதல் நபர் என்ற பெருமையைப் பெற்றார்.
- **1961-1971:** சென்னை பல்கலைக்கழகத்தில் தமிழ் துறைத் தலைவராகப் பணியாற்றினார்.
- **1961:** அகல் விளக்கு நாவலுக்காக சாகித்ய அகாடமி விருது *வழங்கப்பட்டது* .
- **1971-1974:** மதுரை காமராஜ் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகப் பணியாற்றினார் .

- **1974 (அக்டோபர் 10):** மெட்ராஸில் (தற்போதைய சென்னை) காலமானார்.

இலக்கியப் பங்களிப்புகள்:

அவர் 13 நாவல்கள், 6 நாடகங்கள், 2 சிறுகதைத் தொகுப்புகள் மற்றும் தமிழ் மொழி, வரலாறு குறித்த ஏராளமான கட்டுரைகளை எழுதி, எளிதில் புரிந்துகொள்ளக்கூடிய, சீர்திருத்தவாத இலக்கியத்திற்காக அறியப்பட்டார்.

முக்கிய படைப்புகள்: *நெஞ்சில் ஒருமை*, *அகல் விளக்கு*, *கல்லோ காவியமோ*, மற்றும் *தமிo; இலக்கிய வரலாறு* .

(😊)(😊)(😊) முவ முவ முவ (😊)(😊)(😊)